1243

TAMILAGA ILAKKIYAK KOVAI

BOOK II

FOR

FORM V

1243

11 MAR 1941
MADRAS

COMPILED AND EDITED

BY

VIDWAN S. G. GANAPATHI IYER, B.O.L.,
Tamil Pandit, Seva Sadan High School, Chetpat, Madras

and

VIDWAN MISS M. MASILLAMANI, B.A., L.T.,
Tamil Lecturer, Women's Christian College, Madras.

1/41

VENKATRAMA & Co.
4, CORPORATION FRUIT MARKET G.T., MADRAS

Copyright Reserved] 1941 [Price Annas 14.

தமிழக இலக்கியக் கோவை

இரண்டாம் புத்தகம்

(ஐந்தாம் பாரத்துக் குரியது)

494·81186

தொகுப்பாளர்கள்:

வித்துவான் ச. கு. கணபதி ஐயர், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர்
ஸேவாசதனம் உயர்தரப் பாடசாலை, சென்னை.

வித்துவான் மேரி மாசில்லாமணி அம்மாள், பி. ஏ., எல். டி.,
தமிழ் விரிவுரையாளர்
பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1941
MADRAS

பிரசுரகர்த்தர்கள்:

வேங்கடராமா அண்டு கம்பெனியார்
நெ. 4, கார்ப்பரேஷன் பழக்கடை,
ஜி. டி. சென்னை.

உரிமை பதிவு] **1941** [விலை அணு **14**

First edition ... 1941

Printed at The Liberty Press, G.T, Madras.

முகவுரை

தமிழக இலக்கியக் கோவை என்ற இப்புத்தக வரிசை துரைத்தனத்தார் உயர்தர வகுப்புக்களுக்கென்று வெளியிட்டுள்ள பாடத் திட்டத்தை ஒட்டித் தயாரிக்கப்பெற்றவையாகும். கட்டுரைகள் யாவும் கூடியமட்டில் மாணவர்க்கு உற்சாக மூட்டுவனவாக அமைந்துள்ளன. பழைய நூற்செய்திகளைப் புதிய முறையில் வெளியிடுவதற்கேற்ற பயிற்சியை நம் மாணவர்கள் பெறுவதற்கு அநுகூலமான இரண்டொரு கட்டுரைகள் தக்காங்கு இவற்றில் இடம்பெற்றுள்ளன.

நீளமான கட்டுரைகளைச் சேர்த்துப் பாடங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதால் பலருடைய கட்டுரைகளைப் படிக்கும் சந்தர்ப்பம் மாணவர்களுக்கு இல்லாமற் போகின்றதென்பது கருதி, சுருக்கமான பல கட்டுரைகளை இப்புத்தகங்களில் சேர்த்திருக்கிறோம்.

இவற்றில் சேர்க்கப்பெற்றுள்ள செய்யுட்பகுதி நம் மாணவர்க்கு எவ்வகையிலும் உற்சாகத்தையும் கவிதையினிடத்து ஆர்வத்தையும் ஊட்டுமென்பது எங்கள் அபிப்பிராயமாகும். இவற்றின் குறிப்புரை செய்யுள் நயங்கள் பலவற்றை விளக்கிச் செல்லும் சிறப்பைப் பெற்றுள்ளதென்பது அக்குறிப்புரையை ஒரு முறை படித்துப் பார்ப்போர்க்குப் புலனாகும்.

இங்ஙனம்,

தொகுப்பாளர்கள்.

950

நன்றியுரை

இந்த இரண்டாம் புத்தகத்தில் வந்துள்ள கட்டுரை களில் 'என்ன வெயில்', 'கனவும் கதையும்', 'பாணர் கள்', 'சங்ககாலத்துப் பெண்களின் நிலை' என்பன 'கலைமகள்' என்ற சிறந்த மாதப் பத்திரிகையிலிருந்து எடுத்துக்கொள்ளப் பெற்றன. 'கரிகாலன் இறை மாட்சி' என்பது மயிலாப்பூர், அல்லயன்ஸ் கம்பேனி சொந்தக்காரர் அனுமதியின்மேல் 'முதலாம் கரிகாலன்' என்ற புத்தகத்திலிருந்து சேர்த்துக்கொள்ளப் பெற்ற தாகும். 'வீர விளக்கம்' என்பது இராமசந்திரபுரம் (திருச்சி ஜில்லா) அன்பு நிலையத்தார் வெளியிட்டுள்ள 'திருநூல்' என்ற புத்தகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்ட தாகும்.

இக்கட்டுரைகளையும் இதிற்கண்ட பிற கட்டுரைகளை யும் வெளியிட எங்களுக்கு அனுமதி அளித்தருளிய ஆசிரியர்களுக்கும் பிரசுரகர்த்தர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தை நன்றியறிதலுடன் தெரிவித் துக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்,

தொகுப்பாளர்கள்.

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

பக்கம்

க. கடவுள் வாழ்த்து 1

உ. நீதி

1. திருக்குறள் 2
2. பழமொழி 4
3. ஆசாரக்கோவை 6
4. ஏலாதி 7
5. பெருங்கதை நீதிகள் 8

ந. காதை

1. மணிமேகலை 9
2. கம்ப ராமாயணம் 11
3. வில்லி பாரதம் 17
4. நைடதம் 25
5. அரிச்சந்திர புராணம் 30
6. திருவிளையாடற் புராணம்.... 36

ச. இனிய பகுதிகள்

1. கார்கால வருணனை 44
2. தமயந்தி கானகத்திற் புலம்பல் 44
3. ஒரு தூதியின் அரும் இயல்புகள் 45
4. அரசனுக்குப் புலவர் கூறிய புத்திமதி 46
5. சிவபெருமான் பிச்சையேற்றல் தகா தென்றல் 46
6. அகத்தியரின் பெருமை 47
7. பெண்ணின் வீரம் 47
8. புது மணப்பெண்ணின் சமையல் 47

பக்கம்

ரு. தனிப் பாடல்கள்

1. புலவரைச் சிறப்பித்த பூபன் 48
2. அன்பா லிடுவதே அமுது.... 48
3. பெருக்கத்திற் புலவர் காட்டிய பணிவு.... 49
4. வள்ளுவரும் குறளும் 49
5. பொய்யாமொழிப் புலவரின் கவிகள் 49
6. என்ன வெயில்! 50

சா. குறிப்புரை 152

உரைநடைப் பகுதி

1. இந்திய இலக்கியக் கழகம் 53
மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்

2. முற்கால இந்தியா—(கலே, காவியம், ஓவியம், இசை) 67
திரு வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள்

3. கிருமிகள் 73
வித்துவான் எஸ். முத்துவையங்காரவர்கள்,
பி. ஏ., (ஆனர்ஸ்), எல். டி.

4. கரிகாலன் இறை மாட்சி 78
பண்டித எல். உலகநாத பிள்ளையவர்கள்

5. கனவும் கதையும் 82
ஸ்ரீ. ரா. ஸ்ரீ. தேசிகன் அவர்கள், எம். ஏ.,
மாகாணக் கல்லூரி, சென்னை.

6. கூட்டுறவுப் பண்டசாலைகளின் சிறப்பும் அவசியமும் 86
ஸ்ரீ. அ. முத்தையா, எம்., ஏ., பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

பக்கம்

7. பாணர்கள் 93

வித்துவான் ச. கு. கணபதி ஐயர், பி. ஓ. எல்.

8. உல்லாசப் பிரயாணம் 100

வித்துவான் மேரி மாசில்லாமணி அம்மாள், பி. ஏ., எல். டி., தமிழ் *விரிவுரையாளர், பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை.*

9. பொழுதும் போதும் 104

வித்துவான் கி. வா. ஜகந்நாதையரவர்கள், பி. ஓ. எல்.

10 சங்க காலத்துப் பெண்களின் நிலை 111

ஸ்ரீ. டி. ஏ. ராமலிங்கம் செட்டியாரவர்கள்,
பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி.

11. விசித்திர சித்தன் அமைத்த கோயில் 116

ஸ்ரீ. தி. நா. சுப்பிரமணியம் அவர்கள்

12. தென்னிலங்கைத் தெய்வம் 120

ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.

13. வீர விளக்கம் 123

சுவாமி சுத்தானந்த பாரதியார்

14. இராமாயண அரங்கேற்றம் 132

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியாரவர்கள்

15. கல்வெட்டு நினைவூட்டும் கதை 140

மிஸ். பி. ஜேசுதாசன் அவர்கள், பி. ஏ., எல். டி.,
தலைமைத் தமிழாசிரியை ஒ. ஸி. பி. எம்.
உயர்தரப் பாடசாலை, மதுரை.

16. தொல்காப்பியர் காலத்துத் தமிழர் நாகரிகமும் மதமும் 145

வித்துவான் ஆர். விசுவநாதையர் அவர்கள், எம். ஏ., பி. ஓ. எல்.,
தமிழாசிரியர், மாகாணக் கல்லூரி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 MAR 1941
MADRAS

செய்யுட் பகுதி

க. கடவுள் வாழ்த்து

ஆசைக்கோ ரளவில்லை; அகிலமெல்லாம் கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலந்திடுவர்;
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேஇனும் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுவர்; எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்;
உள்ளதே போதும்; நான் நானெனக் குளறியே
ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையையருள்வாய்,
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண னந்தமே.

—தாயுமானவர்.

உ. நீதி

1. திருக்குறள்

அறம் செய்யும் விதம்

ஒல்லும் வகையான் அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம் செயல். (1)

இல்லாளின் மாண்பு

இல்லதென் இல்லவள் மாண்பானல்; உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை. (2)

அன்பினது சிறப்பு

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. (3)

விருந்தோம்பும் விதம்

மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (4)

பணிவும் இன்சொலும்

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்
கணி; யல்ல மற்றுப் பிற. (5)

சமயத்திற் செய்யும் உதவி

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (6)

நடுவு நிலைமை

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போ லமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. (7)

அடக்கம்

காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனினூங் கில்லை யுயிர்க்கு. (8)

ஒழுக்கம்

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. (9)

அழுக்காறுமை

அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னர்
வழுக்கியும் கேடீன் பது. (10)

புறங் கூறுமை

அறங்கூருன் அல்லவை செயினும் ஒருவன்
புறங்கூருன் என்றல் இனிது. (11)

பயனில சோல்லாமை

நயனில சொல்லினும் சொல்லுக; சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. (12)

தீவினை யச்சம்

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். (13)

ஒப்புரவு

ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. (14)

புகழ்

தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலில் தோன்ருமை நன்று. (15)

2. பழமொழி

செல்வராகிய நல்லோரைக் கெடுக்க முயலுதல்

மிக்குடையா ராகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயல்து மென்ற விழுக்காகும்;
நற்கெளி தாகி விடினும் நளிர்வரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தா ரில். (1)

சுற்றத்தாரின் கடமை

அல்ல லொருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்க; அதுவே
மனைமர மாய மருந்து. (2)

கல்விச் சிறப்பு

ஆற்றவுங் கற்ருர் அறிவுடையார்; அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை;—அந்நாடு
வேற்றுநா டாகா, தமவேயாம்; ஆயினல்
ஆற்றுணு வேண்டுவ தில். (3)

தன்கையே தனக்குதவி

எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாம்தெரிதல் வேண்டா;
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோ? மற்றில்லைத்
தமக்கு மருத்துவர் தாம். (4)

வறியோர்க்கில்லை சுற்றம்

முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவ ராபவே;
கட்டலர்தார் மார்ப, கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல். (5)

கேள்வி

உணற்கினிய இன்னீர் பிறிதுழி யில்லென்னும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார் ;—கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று. (6)

பற்றுக்கோடாயினுரைக் கெடுத்தல்

நாடி நமரென்று நன்குபுறந் தந்தாரைக்
கேடு பிறரோடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெற்ப, நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல். (7)

பிழை பொறுத்தல்

காமார மார்ப, கசடறக் கைகாவாக்
கீழாயோர் செய்த சிறுபிழை—மேலாயோர்
உள்ளத்துக் கொண்டுநேர்ந் தூக்கல் குறுநரிக்கு
நல்லநா ராயம் கொளல். (8)

வருவது வந்தே தீரும்

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் தீங்குறுதல் காண்டுமால் ;—பொங்கி
அறைப்பா யருவி யணிமலை நாட,
உறற்பால யார்க்கு முறும். (9)

11 MAR 1941 MADRAS

கீழ்மக்களின் இயல்பு

மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல்—மிக்க
இனநலம் நன்குடைய வாயினும் என்றும்
மனநலம் ஆகாவாம் கீழ். (10)

—முன்றுறை யரையனார்.

3. ஆசாரக் கோவை

நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல் லோ
டின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியொ(டு)
ஒப்புர வாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து. (1)

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர். (2)

எழுச்சிக்கண் பிறர்கூவார் தும்மார் வழுக்கியும்
எங்குற்றுச் சேறிரோ என்னரே; முன்புக்கு
எதிர்முகமாய் நின்றும் உரையார் இருசார்வும்
கொள்வர் குரவர் வலம். (3)

விரைந்துரையார் மேன்மே லுரையார் பொய்யாய
பரந்துரையார் பாரித்துரையார் ;—ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி அறிந்து. (4)

அறத்தொடு கல்யாணம் ஆள்வினை கூரை
இறப்பப் பெருகியக் கண்ணும்—திறப்பட்டார்
மன்னரின் மேம்படச் செய்யற்க; செய்பவேல்
மன்னிய செல்வம் கெடும். (5)

—பெருவாயின் முள்ளியார்.

4. ஏலாதி

பேரியோரியல்பு

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருண் மேற்
செல்லான் சிறியா ரினஞ்சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை. (1)

அன்புடையார்க்குள்ள ஆறு குணங்கள்

சாதல் பொருள்கொடுத்த லின்சொற் புணர்வுவத்தல்
நோதற் பிரிவிற் கவறலே—ஓதலின்
அன்புடையார்க்குள்ளன வாறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. (2)

கல்வியே அழகு

இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு. (3)

ஈகையின் பெருமை

தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினர் வாணிகம்—போயிழந்தார்
கைத்தூண் பொருளிழந்தார் கண்ணி லவர்க்கீந்தார்
வைத்து வழங்கிவாழ் வார். (4)

கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தம்கால்
முடம்பட்டார் மூத்தார் மூப்பில்லார்க்—குடம்பட்
டுடையரா யில்லுளூண் ஈத்துண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று. (5)

—கணிமேதாவியார்.

5. பெருங்கதை நீதிகள்

பெண் கோடுப்போர் கவனிக்கத்தக்கவை

இளமையும் வனப்பும் இல்லொடு வரவும்
வளமையும் தறுகணும் வரம்பில் கல்வியும்
தேசத் தமைதியும் ஆசில் சூழ்ச்சி யோ
டெண்வகை நிறைந்த நன்மகற் கல்லது
மகட்கொடை நேரார் மதியோர். (1)

இனியவர் கடமை

அற்றங் காத்தலின் ஆண்மை போலவும்
குற்றங் காத்தலின் குரவர் போலவும்
ஒன் றி யொழுகலின் உயிரே போலவும்
நன் றி யன் றிக் கன் றியது கடிதற்குத்
தகவில செய்தலிற் பகைவர் போலவும்
இனையன பிறவும் இனியோர்க் கியன் றவை. (2)

உண்மை நட்பினர்

கெட்ட காலை விட்டன ரென்னாது
நட்டோ ரென்பது நாட்டினை நன் று. (3)

இழிந்தோர் உறவு

இழிந்த மாக்களோ டின்பம் ஆர்தலின்
உயர்ந்த மாக்களோ டுறுபகை யினிது. (4)

தகுதியற்ற செயல்

மரமுதல் சாய மருந்துகொண் டா அங்கு
நங்குடி வலித்தல் வேண்டி நம்பி
தன்குடி கெடுத்த தகவி லாளனேன். (5)

—கொங்கு வேளிர்.

௩. காதை

1. மணிமேகலை

ஆதிரை நல்லாள்

ஆதிரை கணவன் அடைந்த அல்லல்

ஆதிரை கணவன், ஆயிழை, கேளாய்;
சாதுவ னென்போன் தகவில னாகி
அணியிழை தன்னை அகன்றனன் போகிக்
கணிகை யொருத்தி கைத்தூண் நல்க
வட்டினுஞ் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுறுதலிற்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டிக்
காண மிலியெனக் கையுதிர்க் கோடலும்
வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையில் தானுஞ் செல்வுழி
நளியிரு முந்நீர் வளிகலன் வௌவ
ஓடிமரம் பற்றி ஊர்திரை யுதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மைய னாயினன்.

பிழைத்து வந்தோர் ஆதிரைக்குக் கூறியது

நாவாய் கேடுற நன்மரம் பற்றிப்
போயினன் தன்னோ டுயிர்உயப் போந்தோர்
“இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்முடன்
சாதுவன் றானுஞ் சாவுற் றா”னென

ஆதிரை தீக்குளிக்க ஏற்பாடு செய்தல்

ஆதிரை நல்லாள் ஆங்கது தான்கேட்
“டூரீ ரேயோ, வொள்ளழ லீமம்
தாரீ ரோ”வெனச் சாற்றினள் கழறிச்
சுடலைக் கானிற் றொடுகுழிப் படுத்து

முடலை விறகின் முளியெரி பொத்தி
"மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்
புக்குழிப் புகுவே" னென்றவள் புகுதலும்

தீ அவளை ஒன்றும் செய்யாமை

படுத்துடன் வைத்த பாயற் பள்ளியும்
உடுத்த கூறையு மொள்ளெரி யுரூஅ
தாடிய சாந்தமும் அசைந்த கூந்தலில்
சூடிய மாலையுந் தொன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை யொருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்பத்

அவள் ஏக்கமும் அசரீரி கூற்றும்

"தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கே" னென்றவ ளேங்கலும்
"ஆதிரை, கேள்உன் னரும்பெறற் கணவனை
ஊர்திரை கொண்டாங் குய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சேர்ந்தனன் பல்லியாண் டிராஅன்;
சந்திர தத்த னெனுமோர் வாணிகன்
வங்கந் தன்னொடும் வந்தனன் தோன்றும்;
நின் பெருந் துன்ப மொழிவாய் நீ"யென
அந்தரந் தோன்றி யசரீரி யறைதலும்

ஆதிரையின் பின் நிலை

ஐயரி யுண்க ணழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்"தென்
கண்மணி யனையான் கடிதீங் குறு" கெனப்
புண்ணிய முட்டாள் பொழிமழை தரூஉம்
அரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பின ளாயினள்.

—மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்.

2. கம்ப ராமாயணம்

முதற் போரின்பின் இராவணன் நிலை

தோற்ற இராவணனுக்கு உவமை

மாற்ற ருந்தட மணிமுடி யிழந்தவா ளரக்கன்
ஏற்ற மெவ்வுல கத்தினு முயர்ந்துளா னெனினும்
ஆற்ற னன்னெடுங் கவிஞரோ ரங்கத முரைப்பப்
போற்ற ரும்புக ழிழந்தபே ரொருவனும் போன்ருன். (1)

இராமர் கூறிய மொழிகள்

நின்ற வன்நிலை நோக்கிய நெடுந்தகை யிவனைக்
கொன்ற லுன்னிலன் வெறுங்கைநின் ருனெனக்கொள்ளா:
"இன்ற விந்தது போலுமுன் தீமை"யென் றிசையோ
டொன்ற வந்தன வாசக மினையன வுரைத்தான். (2)

"றத்தி னலன்றி யமரர்க்கு மருஞ்சமங் கடத்தல்
மறத்தி னலரி தென்பது மனத்திடை வலித்தி;
பறத்தி னின்னெடும் பதிபுகக் கிளையொடு பாவி,
இறத்தி; யானது நினைக்கிலென் தனிமைகண் டிரங்கி. (3)

"உடைப்பெ ருங்குலத் தினரொடு முறவொடு முதவும்
படைக்க லங்களும் மற்றுநீ தேடிய பலவும்
அடைத்து வைத்தன திறந்துகொண் டாற்றுதி யாயின்
கிடைத்தி, யல்லையே லொளித்தியாற் சிறுதொழிற் கீழோய்!

"சிறையில் வைத்தவள் தன்னைவிட் டுலகினிற் றேவர்
முறையில் வைத்துநின் தம்பியை யிராக்கதர் முதற்பேர்
இறையில் வைத்தவற் கேவல்செய் திருத்தியே லின்னும்
தரையில் வைக்கிலென் நின்றலை வாளியிற் றடிந்து. (5)

"அல்லை யாமெனின் ஆரமர் ஆற்றெனுந் தோற்றம்
வல்லை யாமெனின் உனக்குள வலியெலாங் கொண்டு
'நில்லை யா,'வென நேர்நின்று பொன்றுதி யெனினும்
நல்லை யாகுதி; பிழைப்பினி யுண்டெனை நயவேல். (6)

"ஆளை யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வா"வென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல். (7)

இராவணன் இலங்கை நகரடைதல்

வாரணம் பொருத மார்பும்
வரையினை யெடுத்த தோளும்
நாரத முனிவற் கேற்ப
நயம்பட வுரைத்த நாவும்
தாரணி மவுலி பத்துஞ்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங் களத்தே போட்டு
வெறுங்கையோ டிலங்கை புக்கான். (8)

மாதிர மெவையு நோக்கான்,
வளநகர் நோக்கான், வந்த
காதலர் தம்மை நோக்கான்,
கடற்பெருஞ் சேனை நோக்கான்;
தாதவிழ் கூந்தன் மாதர்
தனித்தனி நோக்கத் தானப்
பூதல மென்னு நங்கை
தன்னையே நோக்கிப் புக்கான். (9)

அரண்மனை யடைதல்

மந்திரச் சுற்றத் தாரும்
வாணுதற் சுற்றத் தாரும்
தந்திரச் சுற்றத் தாரும்
தன்கிளைச் சுற்றத் தாரும்
எந்திரப் பொறியின் நிற்ப
யாவரு மின்றித் தானோர்
சிந்துரக் களிறு கூடம்
புக்கெனக் கோயில் சேர்ந்தான். (10)

சீதை நகுவளே என்று வருந்தல்

வான்நகும் மண்ணு மெல்லாம்
நகும்நெடு வயிரத் தோளான்
"நான்நகு பகைஞ ரெல்லாம்
நகுவ"ரென் றதற்கு நாணன் ;
வேல்நகு நெடுங்கட் செவ்வாய்
மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவ ளென்ற
நாணத்தாற் சாம்பு கின்றான். (11)

மாலியவான் வருகை

ஆங்கவன் றன்மு தாதை
யாகிய மூப்பின் யாக்கை
தாங்கிய வரிவி லன்ன
மாலிய வானென் றேதும்
பூங்கழ லரக்கன் வந்து
பொலங்கழ லிலங்கை வேந்தைத்
தாங்கிய வமளி மாடோர்
தவிசுடைப் பீடஞ் சார்ந்தான். (12)

மாலியவான் இராவணனை வருத்தத்தின் காரணம் வினவல்

இருந்தவ னிலங்கை வேந்தன்
இயற்கையை யெய்த நோக்கி
பொருந்தவந் துற்ற போரில்
தோற்றனன் போலு மென்ன
"வருந்தினை மனமுந் தோளும்,
வாடினை நாளும் வாடாப்
பெருந்தவ முடைய வைய,
என்னுற்ற பெற்றி ?" யென்றான். (13)

இராவணன் கூறத் தொடங்கல்

கவையுறு நெஞ்சன் காந்திக்
கனல்கின்ற கண்ணன் பத்துச்
சிவையின்வா யென்னச் செந்தீ
யுயிர்ப்புறச் சிவந்த மூக்கன்

நவையறு பாகை யன்றி
யமுதினை நக்கி னும்
சுவையறப் புலர்ந்த நாவான்
இனையன சொல்ல லுற்றான். (14)

" சங்கம்வந் துற்ற கொற்றத்
தாபதர் தம்மோ டெம்மோ
டங்கம்வந் துற்ற தாக
வமரர்வந் துற்ற தாற்றார் ;
கங்கம்வந் துற்ற செய்ய
களத்துநங் குலத்துக் கொவ்வாப்
பங்கம்வந் துற்ற தன்றிப்
பழியும்வந் துற்ற"தென்றான். (15)

இலக்குவனின் வீரத்தைப் பாராட்டல்

" முளையமை திங்கள் சூடும்
முக்கணன் முதல்வ னாகக்
கிளையமை புவன மூன்றும்
வந்துடன் கிடைத்த வேனும்
வளையமை வரிவில் வாளி
மெய்யுற வழங்கு மாயின்
இளையவன் தனக்கும் ஆற்றா
தென்பெருஞ் சேனை, நம்ப. (16)

இராமரின் அம்புகளைப் பாராட்டல்

" போயபின் அவன்கை வாளி
உலகெலாம் புகுவ தல்லால்
ஓயுமென் றுரைக்க லாமோ,
ஊழிசென் றாலு மூழித்
தீயையுந் தீக்கும், செல்லும்
திசையையுந் தீக்கும், சொல்லும்
வாயையுந் தீக்கும், முன்னின்
மனத்தையுந் தீக்கு மன்னே. (17)

“மேருவை யுருவு மென்றால்
விண்கடந் தேகு மென்றால்
பாரினைப் பிளக்கு மென்றால்
கடல்களைப் பருகு மென்றால்
ஆருமே அவற்றி னாற்றல்
ஆற்றுமே அநந்த கோடி
மேருவும் விண்ணு மண்ணும்
கடல்களும் வேண்டு மன்றே. (18)

“வரிசிலை நாணிற் கோத்து
வாங்கினன் விடுத லொன்றும்
தெரிகில தமர்தன் ஆற்றல்;
யாரவன் செய்கை தேர்வார்?
பொருசினத் தரக்க ராவி
போகிய போக வென்று
கருதிய உலகு மெல்லாம்
சரங்களாய்க் காட்டு மன்றே! (19)

“நல்லியற் கவிஞர் நாவில்
பொருள்குறித் தமர்ந்த நாமச்
சொல்லெனச் செய்யுட் கொண்ட
தொடையெனத் தொடையை நீக்கி
எல்லையில் செல்வந் தீரா
இசையெனப் பழுதி லாத
பல்லலங் காரப் பண்பே
காகுத்தன் பகழி மாதோ. (20)

“முப்புர மொருங்கச் சுட்ட
மூரிவெஞ் சிலையும் வீரன்
அற்புத வில்லுக் கைய,
அம்பெனக் கொள்ளு மாகா;

ஒப்புவே றுரைக் கலாவ
தொருபொரு ளில்லை; வேதம்
தப்பின போது மன்னன்
தனுவுமிழ் சரங்கள் தப்பா. (21)

"உற்பத்தி அயனே யொக்கும்,
ஓடும்போ தரியே ஒக்கும்,
கற்பத்தி னரனே யொக்கும்,
பகைஞரைக் கலந்த காலைச்
சிற்பத்தின் நம்மாற் பேசச்
சிறியவோ, வென்னைத் தீராத்
தற்பத்தைத் துடைத்த வென்றால்
பிறிதொரு சான்று முண்டோ! (22)

இராமர் மேற்கொண்ட வாகனச் சிறப்பு

"ஏற்றமொன் றில்லை யென்ப
தேழைமைப் பால தன்றே!
ஆற்றல்சால் கலுழ னேதான்
ஆற்றுமே யமரி னாற்றல்!
காற்றையே மேற்கொண் டானே,
கனலையே கடாவி னானே,
கூற்றையே ஊர்கின் றானே
குரங்கின்மேற் கொண்டு நின்றான். (23)

'நாசகாலத்தில் எனக்கு நல்ல பகை கிடைத்தது' என்றல்

"வாசவன் மாயன் மற்றை
மலருளோன் மழுவா ளங்கை
ஈசனென் றினைய தன்மை
யிளிவரு மிவரா லன்றி
நாசம்வந் துற்ற போது
நல்லதோர் பகையைப் பெற்றேன்;
பூசல்வண் டுறையுந் தாராய்
இதுவிங்குப் புகுந்த" தென்றான். (24)

—கம்பர்.

3. வில்லி பாரதம்

சூது போர்ச் சூழ்ச்சி

மன்னரெல்லாம் துரியோதனன் சபைக்கு வந்து சேரல்

சென்றுழி யெவருந் தத்தம்
　　செழுமனை யெய்தி வாசம்
துன்றிய வமளி கங்குல்
　　துயில்புரிந் தெழுந்த பின்னை
நின்றவெம் பரிதித் தோற்றம்
　　தொழுதுதம் நியம முற்றி
வன்றிற லரசன் கோயில்
　　மன்னவை வந்து சேர்ந்தார். (1)

கன்னன் பேசத் தொடங்கியது

இறைஞ்சிய வேந்தர்க் கெல்லாம்
　　இருப்பளித் தெதிர்ந்த வேந்தர்
நிறஞ்செறி குருதி வேலான்
　　நினைவினே டிருந்த போதில்
அறஞ்செறி தானம் வண்மை
　　யளவிலா தியற்றி நாளும்
புறஞ்சுவர் கோலஞ் செய்வான்
　　பூபதிக் குரைக்க லுற்றான். (2)

அவன் பாண்டவர்க்குப் பாதகமான சொல்லைக் கூறுதல்

“ தாதவிழ் குவளை மாலைத்
　　தருமன்மா மதலை பெற்ற
மேதகு வேள்விச் செல்வம்
　　வேந்தரில் யாவர் பெற்றார்!
ஏதள வவன்றன் வாழ்க்கை,
　　யாரினி யெதிருண் ”டென்று
பாதக நினைவைத் தானும்
　　பகர்ந்தனன் பரிவு கூர. (3)

சகுனியின் மொழி

விதரண விநோதன் சொன்ன
வார்த்தையும் வேந்தர் வேந்தன்
இதயமும் ஒன்ருய் நின்ற
இயற்கையைச் சகுனி கண்டு
"புதைநக மடங்கல் நாளும்
புறஞ்செலா தொடுங்கு மானல்
மதகரி விடுமோ ?" வென்ருன்
வசையிசை யாகக் கொள்வான். (4)

துச்சாதனன் வார்த்தை

சொல்லிடை நஞ்சு கக்கும்
துன்மதி யுடைய தம்பி
வில்லிடை நின்று தம்முன்
வெம்மனங் களிக்கச் சொன்னன்;
"அல்லிடை நிறைந்த தேனும்
அமுதவெண் கிரணத் திங்கள்
எல்லிடை யிரவி முன்னர்
எவ்வழி நிகர்க்கு ?"மென்றே. (5)

துரியோதனன் பேசத்தொடங்கல்

தமையனும் தம்பி சொன்ன
தன்மையை யுணர்ந்து நீதி
அமைதரு தந்தை கேட்ப
அவன் பெருந் தாதை கேட்பக்
கமைபெறு விதுரன் கேட்பக்
கார்முகக் கன்னன் கேட்ப
இமையவன் துரோணன் கேட்ப
யாவரும் கேட்பச் சொல்வான். (6)

"இந்திரன் முதலாவுள்ள
இமையவர் சிறப்புச் செய்யச்
சுந்தரப் பொற்ருேள் வேந்தர்
தொழில்புரிந் தேவல் செய்ய
மந்திர முனிவர் வேள்வி
மறைநெறி முறையிற் செய்யத்
தந்திர வெள்ளச் சேனைத்
தருமனே தலைவ ணைன். (7)

"இனியவன் சின்னுட் செல்லின்
எம்மனோர் வாழ்வும் கொள்ளும்;
துனைவரும் புரவித் திண்டேர்த்
துணைவரும் சூர ரானர்;
முனைவரு கூர்முள் வேலை
முளையிலே களையி னல்லால்
நனிவர வயிர்த்த போது
நவியமும் மடியு மன்றே! (8)

"போதுற விரைந்து மற்றப்
புரவலன் செல்வம் யாவும்
பேதுறக் கவர்ந்தி லேனேற்
பின்னையார் முடிக்க வல்லார்!
மோதுறப் பொருதே யாதல்
மொழியொரு வஞ்ச மொன்று
தீதுறப் புரிந்தே யாதல்
கொள்வதே சிந்தை" யென்ருன். (9)

துச்சாதனன் மீண்டும் பேசல்

என்னலு முரிய தம்பி
"எழுவதே கரும மின்றே;
செந்நெலின் வாளை பாயும்
செல்வநா டுடைய கோமான்

நென்னலங் கெய்த வீமன்
நகைத்ததும் நேய மான
கன்னலின் மொழியாள் மூரல்
விளைத்ததுங் கண்டி லீரோ? (10)

"எத்தனை தரணி வேந்தர்
யாகநல் விழாவில் வந்தார்!
அத்தனை பேரில் யாமும்
ஒருவரா யடங்கி நின்றேம்;
கொத்தனை யுகளும் நன்னீர்க்
குருநிலக் கோமா னந்த
முத்தனை யன்றிப் பின்னை
யாரையே முதன்மை செய்தான்! (11)

"நந்தகோ மகனுக் கெல்லாம்
நல்கிய முதன்மை கண்டு
வந்தகோ வெள்ளஞ் சேர
வாய்திற வாமல் நிற்ப
'எந்தகோ இவனுக் கிந்த
முதன்மை'யென் றெதிர்ந்து மாற்றம்
தந்தகோ மடியு மாறு
சமரமும் விளைப்பித் திட்டான். (12)

"தன்புய வலியும் நான்கு
தம்பியர் வலியு மாயன்
வன்புய வலியுங் கொண்டே
மண்ணெலாங் கவர வெண்ணி
இன்புயச் சிகரி மன்னர்
யாரையும் தன்கீ ழாக்கி
மின்புய லனையான் மேன்மை
விளக்கவே வேள்வி செய்தான். (13)

"எல்லையில் பரிதி யன்ன
யதுகுல மன்னன் ருனும்
சல்லிய மிகுபோர் செய்யச்
சாலுவன் றன்மேற் சென்ருன்;
சொல்லிய கருமம் வாய்ப்பச்
சூழ்வலைப் படுத்திக் கொண்ட
வல்லிய மென்னச் சூழ்ந்து
மலைவதே கரும" மென்ருன். (14)

துரியோதனன் துச்சாதனன் கருத்துக்கு ஒருப்படல்

வேந்தனு மொருப்பட் "டந்த
வெண்ணெய் வாய்க் கள்வன் மீளப்
போந்திவர் தமக்கு மின்று
பொருதுணை யாக மாட்டான்;
சாந்தணி குவவுத் தோளான்
சாலுவன் வலிய னிப்போ
தாந்தக வெண்ணில் வல்லே
ஐவரை யடர்க்க லாமே. (15)

"வஞ்சனை கொண்டே யாதல்
வாரண மணித்தேர் வாசி
நஞ்சனை யவரா லாதல்
நாளையே யழித்தல் வேண்டும்;
கஞ்சனை மலைய வெண்ணிக்
கரியபேய் தருபா லுண்ட
நெஞ்சினன் எய்தா முன்னம்
நீர்விரைந் தெழுமி" னென்ருன். (16)

கன்னன் போரை விரும்புதல்

"வெஞ்சிலை குனித்தோ ரம்பு
யான்விடில் வெகுண்ட வேந்தர்
எஞ்சிவிண் புகுவ ரல்லால்
யாவரே யெதிர்க்க வல்லார்?

வஞ்சனை கொண்டு வெல்ல
மதிப்பது வாளால் வெல்ல
அஞ்சின மாயி னன்றோ?"
என்றனன் அங்கர் கோமான். (17)

வீரத்தாலன்றிச் சூதினாலேயே பாண்டவரை வெல்ல முடியுமென்று சகுனி சொல்லல்

யாவரும் மொழிந்த வார்த்தை
இன்புறக் கேட்டுப் பின்னும்
தாவரு புரவித் திண்டேர்த்
தானையான் சகுனி சொல்வான்;
"மேவரு கன்ன னன்றி
விண்ணுளோ ரெதிர்ந்த போதும்
கோவரு முன்றி லானைக்
கொடுஞ்சமர் வெல்ல லாமோ? (18)

"இடிம்பனைப் பகனை வைவேல்
இகற்சரா சந்தன் தன்னை
நெடும்பணைப் புயத்தால் வென்ற
நிகரிலா வீமன் நிற்கக்
கடும்படைப் பெருமை யால்வென்
காணலா மென்பா ராயின்
தொடும்படைத் தடக்கை வீரர்க்
குத்தரஞ் சொல்ல லாமோ ? (19)

"துப்புற ழமுதச் செவ்வாய்த்
திரௌபதி துணைத்தோள் வேட்டுக்
கைப்படு சிலையி னேடும்
காவலர் கலங்கி வீழ
மெய்ப்படு முனியாய் வந்து
விசயன்வில் விறுத்த போதும்
இப்பொழு திருந்த வீரர்
யாவரு மிருந்தி லேமோ ? (20)

"இப்பிறப் பொழிய வின்னும்
ஏழெழு பிறப்பி னனும்
மெய்ப் பிறப் பற்ற நீதித்
தருமனை வெல்ல மாட்டோம்;
ஒப்பறப் பணைத்த தோளாய்,
உபாயமெங் கேனு மொன்றால்
தப்பறச் சூது கொண்டு
சதிப்பதே கரும" மென்றான். (21)

துச்சாதனன் அதற்கு உடன்படல்

தன்பெரு மாமன் சொல்லத்
தரணிபன் தம்பி தானும்
"வன்பெருஞ் சேனை கொண்டு
மலைவதற் கவர்க ளஞ்சார்;
இன்பெரு நேய மிக்க
இவன்மொழிப் படியே மாயப்
புன் பெருஞ் சூது கொண்டு
பொருவதே புந்தி" யென்றான். (22)

துரியோதனன் சகுனியை அருகழைத்து, 'சூதால் வெல்வது
எப்படி ?' என்று கேட்டல்

கோமகன் நெஞ்சும் நாவும்
குளிர்ந்துபே ருவகை கூர்ந்து
மாமனைத் 'தவிசின் கண்ணே
வருதி'யென் றிருத்திக் கொண்டு,
"பாமரு பனுவன் மாலைப்
பாண்டவர் தம்மை நின்கைக்
காமரு சூதால் வெல்லுங்
கருத்தெனக் குரைத்தி" யென்றான். (23)

சூதினால் வெல்லும் உபாயத்தைச் சகுனி கூறல்

"மன்ன, நின் செல்வக் கோயில்
மண்டப மொன்று தேவர்
பொன்னுல கினுக்கு மில்லை
என்பதோர் பொற்பிற் றாகப்

பன்னுநூற் சிற்பங் குன்ருப்
பஃறொழில் வினைஞர் தம்மால்
நன்னில விரிவுண் டாக
நாளையே யியற்று விப்பாய். (24)

"மண்டபங் காண வெம்முன்
வருகவென் றழைத்து, வந்தால்
கண்டுகண் களித்து மற்றக்
காவல ரிருந்த போதிற்
'புண்டர விசால நெற்றிப்
புரவல, பொழுது போக
அண்டரும் விரும்பு வன்சூ
தாடுதும், வருக' வென்போம். (25)

" அதிர்முர சுயர்த்த கோவும்
ஐயெனத் துணியும் பின்னை
மதிமரு ளியற்கைத் தாகும்
மாயவெஞ் சூது தன்னல்
விதியெனப் பொருது வாழ்வும்
மேதகு வரசும் தங்கள்
பதிமுதற் பலவும் தோற்கும்
படிசெருத் திடுவ" லென்ருன். (26)

துரியோதனனும் அவன் தம்பிமாரும் மகிழ்ச்சிகொள்ளல்

இன்னதே கரும மென்றென்
றிளைஞரும் விழைந்து சொன்னர் ;
அன்னதே கரும மாக
அவர்வழி யொழுகு நீரான்
தன்னதே யாகு மிந்தத்
தலமெனுங் கருத்தால் மாமன்
சொன்னதே துணிந்து மார்பும்
தோள்களும் பூரித் திட்டான். (27)

—வில்லிபுத்தூரார்

4. நைடதம்

தமயந்தியின் சுயம்வரம்

இந்திரன் முதலிய நான்கு தேவர்கள் நளனுருவைக் கொள்ளுதல்

பொன்னகர் புரக்கும் வேந்தும்
பொங்கழற் கிறையு முந்நீர்
மன்னனுந் தறுகட் பேழ்வாய்
மறலியும் மடமான் நோக்கி
நன்னுதல் நளனுக் கன்றி
நறுந்தொடை சூட்டா ளென்ன
அன்னவன் உருவு தாங்கி
அணிநகர் மேயி னாரே. (1)

நளனது வருகை

கூற்றெனக் கொல்லும் வேழம்
கொடியணி கொடிஞ்சித் திண்டேர்
பாற்றிரைக் கவரி நெற்றிப்
பண்ணமை கலினப் பாய்மா
மாற்றருஞ் சீற்றத் துப்பின்
வரிசிலை யுழவ ரீட்டம்
நாற்றிசைப் பரப்பும் போர்ப்ப
நாமவேல் நளனும் வந்தான். (2)

வீமன் அனைவரையும் வரவேற்றல்

விரைசெறி அலங்கன் மாலை
விண்ணவர் விஞ்சை மன்னர்
உருகெழும் உரக வேந்தர்
ஒங்குநீர் உடுத்த ஞாலத்
தரசிளங் குமர ரோடும்
அளவளாய் முகமன் கூறி
வரிசையின் வழாமை நோக்கி
வான்சிறப் பியற்றி னானே. (3)

நளனைக் கண்ட அரசர் ஒளி மழுங்குதல்

தெரியல்சூழ் குவவுத் திண்டோள்
சிலைவலான் இனிதி னெய்த
அரசவை யிருந்த செவ்வி
அரசிளங் குமர ரெல்லாம்
குரைகடன் முகட்டில் தோன்றும்
குளிர்மதி காண்ட லோடும்
விரிகதிர் மழுங்கும் வானின்
மீனின மென்ன லானார். (4)

தேவர்களின் அழுக்காறு

கடிமலர்ப் பகழி யேந்துங்
காமனு நாணும் பொற்பின்
அடல்கெழு பரிதி வைவேல்
ஐயனை யினிதின் நோக்கித்
தொடுகழல் அமரர் யாரும்
துயரொடும் அழுக்காறெய்தி
"வடிவினிற் சிறந்தா னேனும்
மானிட னலனே!" வென்றார். (5)

மன்மதன் சிவனை வியத்தற்குக் காரணம்

கொங்கவிழ் உருவப் பைந்தார்க்
குமரனை யினிது நோக்கி
இங்கிவன் வனப்புக் கொவ்வா
திழிவர லெய்தி டாமல்
ஐங்கணைக் கிழவன் வெய்ய
அழற்கணு லருவ மாக்குந்
திங்களங் கண்ணி முக்கண்
தேவினை வியக்கு மன்றே! (6)

தோழி தமயந்திக்கு அரசரைக் காட்டிவருதல்

“அமிழ்தினை முனிந்து சார
லருவிதாள் மலேய மீன்ற
தமிழினு மினிய தீஞ்சொல்
தையலீண் டிருந்த கோமான்
இமிழ்திரை கொழித்த முத்தம்
ஏழைநின் முறுவல் காட்டும்
கமழலந் துறைசூழ் தெண்ணீர்க்
கங்கைநா டாளும் வேந்தே. (7)

“மாழைமென் னோக்கி ஈங்கு
வைகிய மான வேலான்
தாழைமுப் புடைக்காய் வீழ்ந்து
தாற்றிளங் கமுகு செற்று
வீழ்சுளை வருக்கை போழ்ந்து
வெம்புலி யடிய பைங்காய்க்
கோழரை யரம்பை சாய்க்கும்
குடகநா டாளும் வேந்தே.” (8)

என்னமற் றினைய வாறே
யெறிமணி மாடஞ் சேர்ந்த
மன்னவர் குலமும் பேரும்
வரன்முறை வழாது கூறி
மின்னகு பரிதி வைவேல்
நளனுருக் கொண்டு மேய
அன்னவர் தமையு மற்ற
நளனையும் அறைய லுற்றாள். (9)

இந்திரனுக்கும் நளனுக்கும் சிலேடை

“கலைவளர் திங்க ளென்னக்
கடிகமழ் கமலம் வாட்டும்
திலகவாள் முகத்தா யீங்கு
வைகிய சினவேற் காளை

வலனுடை வயிர வாளான்
கற்பக மலிந்த தோளான்
பலபகை வரைமுன் செற்ற
பகட்டெழின் மார்பி னனே. (10)

அக்கினிக்கும் நளனுக்கும் சிலேடை

"நகைமதி முகத்தா யீங்கு
வைகிய நாம வேலான்
புகலரும் வெகுளி யுள்ளத்
தொருவினன் பொங்கி யார்த்த
பகையிருட் பிழம்பு சீக்கும்
பலசுட ருமிழும் வாளான்
தகைமைசால் புலவ ரேத்துந்
தாலமே மூடைய கோவே. (11)

எமனுக்கும் நளனுக்கும் சிலேடை

" அஞ்சன மெழுத லாற்ரு
தம்மவோ வென்று நையும்
வஞ்சிநுண் ணிடையா யீங்கு
வைகிய நாம வேலான்
எஞ்சலில் தருமன் தெண்ணீர்
இருங்கட லுலக மெல்லாம்
செஞ்சவே யோகை போய
தீதறு செங்கோல் வேந்தே. (12)

வருணனுக்கும் நளனுக்கும் சிலேடை

"பாற்றிரை யமிர்த மூறும்
படரொளிப் பவளச் செவ்வாய்க்
கோற்றொடி மடந்தை, ஈங்கு
வைகிய குவவுத் தோளான்
மாற்றருஞ் சிறப்பின் மிக்க
வளங்கெழு புவன வேந்தன்
நாற்றிசைப் பரப்புஞ் சூழ்போ
நலங்கெழு நேமி வேந்தே. (13)

தோழி நளனைக் குறித்தல்

"போதரி நெடுங்கண் நல்லாய்
பொருசிலை வேனி லானில்
கோதையர் மனமுங் கண்ணும்
கூட்டுணுங் குவவுத் தோளான்
தாதவிழ் கமலப் போது
மலர்ந்தபூந் தடங்கள் தோறும்
மாதர்மென் முகங்கள் காட்டும்
வளங்கெழு நிடத வேந்தே." (14)

தமயந்தி நளனை அறிந்தவாறு

எள்ளுற வேனை யோரை
யிரட்டுற மொழித லானும்
வள்ளன்மார் பணிந்த தாரில்
வண்டுவீழ்ந் தரற்ற லானும்
உள்ளுறப் பிணித்த அன்பின்
ஊழ்வினைத் தொடர்பி னானும்
நள்ளிருள் பருகும் பைம்பூண்
நளனையே நளனென் றோர்ந்தாள். (15)

தமயந்தி நளனுக்கு மாலையிடல்

இன்னரிச் சிலம்பு செம்பொற்
கிண்கிணி யார்ப்ப வேகி
மன்னவர் மனமுங் கண்ணும்
வண்டெனத் தொடர்ந்து வீழக்
கொன்னுனை வயிர வொள்வாள்
நிடதர்கோன் குவவுத் தோள்மேல்
பொன்னரி மாலை சூட்டிப்
பூங்கழல் வணங்கி நின்றாள். (16)

—அதிவீரராம பாண்டியர்.

5. அரிச்சந்திர புராணம்

இசை மாதரும் அரிச்சந்திரனும்

கோசிகர் மூச்சினில் இரண்டுபெண்கள் உதித்தல்

பேச்சினில் கிளிபோல் செங்கால்
பெயர்ச்சியில் பெடைபோல் செய்கை
வீச்சினில் மின்போல் சீற்ற
மிகுதியால் முனிவன் விட்ட
மூச்சினில் பிறந்தி ரண்டு
மோகினி மாத ராழி
நீச்சினில் நிலைத்து நிற்கும்
நீலமென் கொடிபோல் நின்றார். (1)

அம்மாதர் புலைச்சியரானமையை உணர்த்தல்

தீதிலா மறைகள் நான்கும்
தெளிவுற வுணர்ந்த நீர்மைக்
கோதிலாக் குணத்தோர்க் கெல்லாம்
கோபம்சண் டாள மென்பார்;
ஆதலால் முனிவன் மூக்கின்
ஆரழல் சீற்றத் தூடே
போதலா லந்த மாதர்
புலைச்சிய ராயி னாரே. (2)

கோசிகர் அவர்களுக்குக் கலைகளைப் புகட்டல்

மாதரை முனிவன் பார்த்து
வரவழைத் திருத்தி நான
பேதமும் எழுத்தும் சொல்லும்
பெருங்கலை யிருநா லெட்டும்
கீதமும் நாத யாழும்
கின்னரம் முதல வாய
போதமும் வாரி நீரிற்
கரைத்துடன் புகட்டி னானே. (3)

கோசிகர் அவர்களுக்குக் கட்டளை யிட்டனுப்பல்

“பெடைநடை மடவீர்! வாவிப்
பெருங்கரை தன்னில் வந்த
படையுடை வேந்தன் பால்போய்ப்
பாடலா லுருக்கி வெற்றிக்
குடையினைக் கொண்மின்; அல்லால்
கொழுநனைக் கொண்மின்” என்று
விடை கொடுத் திடலும் மாதர்
விரைவினில் தொழுது போனார். (4)

பாண்மகளிர் அரிச்சந்திரனைப் புகழல்

“யாணர்க்குள் யாண! நின்னை
எய்துதற் கிழைத்த வேதா
வீணர்க்குள் வீணன்; எம்மை
விதித்தவன் றிந்தி ரற்கும்
வாணர்க்கும் அனந்த னார்க்கும்
வாய்த்தவா றேபோல் நின்னைக்
காணற்குத் தொழற்கு வாழ்த்தக்
கண்கைநாப் படைத்தி லானே! (5)

“வையம்நின் நகரி; செம்பொன்
வடகிரி நினது பீடம்;
வெய்யவன் நினது தீபம்;
வேலைமஞ் சனநீர்ச் சாலை;
செய்யவள் நினது பாரி;
திங்கள்நின் கவிகை; செவ்வேல்
ஐய, நின் பெருமை எம்மால்
அளவிடற் கரிதே” என்றார். (6)

‘நீவிர் யார்?’ என மன்னன் கேட்ப மாதர் மறுமொழி கூறல்

சொல்லிய மாற்றம் கேளாத்
தோன்றலும் வியந்து நோக்கி,
“வல்லியீர், யார், ஏ தூர்தான்?
வந்தவா றேதீண்” டென்றான்;

"அல்லியந் தொடையல் மார்ப!
இவ்வனத் தகத்து வாழ்வோம்;
புல்லிய சாதி யினப்
புலைச்சியர் யாங்கள் ஐயா! (7)

"வேதமா முனிவன் வைகும்
மேதகு சாரல் நின்றுன்
பாதமே பணிந்து நோக்கும்
அருத்தியில் பதறி வந்தோம்;
போதமும் நெறியு மில்லாப்
புல்லியேம், நல்லி யாழும்
கீதமும் சிறிது வல்லேம்;
கேள்" எனக் கிளத்திப் பின்னர். (8)

பாண்மகளிர் பாடியதன் சிறப்பு

காவியங் கண்ணும் மூடா;
கவிரிதழ் தாமும் கோடா;
வாவியங் கமல மன்ன
வதனமும் நுதலு மேரு;
தூவியந் தோகை நல்லார்
சுவரின்மே லெழுதி வைத்த
ஓவியம் பாடிற் றென்னப்
பாடினா ருருக யாரும். (9)

மன்னனும் சந்திரமதியும் மகிழ்தல்

நல்லியல் மகர யாழின்
நாதமும் மிடறும் ஒன்றப்
புல்லிய கீத ஓதை
செவிவழிப் புகுத லோடும்
வல்லியர் தம்மை நோக்கி
மலர்த்திருக் கரமமைத்து,
மெல்லியல் தானும் வென்றி
வேந்தனும் மிகம கிழ்ந்தார். (10)

அரசன் அளித்த பரிசுகளை மறுத்துக் குடையைக் கேட்டல்

மணியொடு கடகம் செம்பொன்
வளையெரி மணிப்பொன் னாரம்
அணிதுகில் பிறவும் நீட்டிக்
"கொண்ம்" என வளித்த லோடும்,
"பணிகளும் துகிலும் பொன்னும்
பெறற்கியாம் படர்ந்தே மல்லேம்;
திணிசுடர் முடியாய், யாங்கள்
தேடிய பரிசில் கேளாய். (11)

"ஏத்திய பரிசி லாளர்க்
கெண்ணிய வனைத்தும் நல்கும்
பார்த்திவ! இவையெ லாம்நின்
திருவுளப் படியா லுள்ளேம்;
மூர்த்திகள் மூவர்க் காகும்
முடிபுனை யந்நா ளேநீ
சாத்திய தவளக் கொற்றக்
கவிகையைத் தருதி" என்றார். (12)

அரிச்சந்திரன் அதனை மறுத்தல்

"பழிவழி ஒழுகா நீதிப்
பானுவின் குலத்து வேந்தர்
வழிவழி வந்த கொற்றக்
கவிகையை வழங்க மாட்டேன்;
விழிவழி கண்ட வேறு
கவிகையை விளம்பில் உங்கள்
மொழிவழி தருவேன்" என்று
மொழிந்தனன் மன்னர் கோமான். (13)

[பின்னர் அப் பெண்கள் தம்மை மணந்துகொள்ளுமாறு மன்னனை வற்புறுத்தினர். அதனைக் கண்ட அமைச்சன் கீழ்வருமாறு கூறினான்.]

"கொடுப்பன கொடுப்ப தல்லால்
கொடாதன கொடுக்க மாட்டார்;
விடுப்பன விடுப்ப ரென்றும்
விடாதன விடவு மாட்டார்;
தொடுப்பன தொடுத்து நும்மால்
சொல்வன சொல்லி நுங்கட்
கடுப்பன கொண்மின்; அல்லால்
அகன்மின்" என் றமைச்சன் சொன்னான்.

மாதரின் வசவு மொழிகளும் மன்னனின் கட்டளையும்

"வள்ள லென் றடைந்தோ முன்பால்;
வந்திரந் தோர்க்கொன் றீயாக்
கள்ளனென் றறிந்தா லிங்கு
வருகலம் கண்டாய்!" என்றார்;
உள்ளமும் கண்ணும் செந்தீ
உருத்தெழச் சினந்து வேந்தன்,
"தள்ளும்!" என் றருளிச் செய்தான்
விளைவது தன்னை யோரான். (15)

பாண்மகளிர் பயந்தோடல்

பார்த்திவ னுரைப்பக் கேட்டுப்
பப்பரர் நெருங்கிச் சீறித்
தீத்திரள் செங்கண் சிந்த
நூக்குவான் செல்ல வேங்கிக்
காத்திரம் நடுங்கக் கையும்
கால்களும் நடுங்க, மார்பில்
சேர்த்திய யாழும் போகட்
டிரிந்தனர் திசைம யங்கி. (16)

அவர்கள் அலங்கோலத்துடன் முனிவன் முன் வந்துசேரல்

ஆறுகொண் டோடார் செல்ல
அடவியில் சென்று மேனி
மாறுகொண் டுதிரம் சிந்த
மஞ்சினைப் பழித்த கூந்தல்
தூறுகொண் டீர்க்கச் சோர்ந்த
துகில்கிழிந் தகலச் சாப
வீறுகொண் டேவி விட்ட
முனிவன்முன் வீழ்ந்தார் வந்து. (17)

வேறு

அப்பெண்களின் முறையீடு

"ஐய!கேள் நின்னருள் படியினல்
அரசன்மாட் டணுகினின்றே
பையவே ழிசைகளும் பாடி, நீ
சொன்னவப் பரிசுரைத்தேம்;
கையனெங் களையடித் துமரெனச்
செய்தவக் கண்டனத்தால்
உய்யவும் போகுமோ! உரையுமுண்
டோ!வெமக் குயிருமுண்டோ!" (18)

கோசிகர் சினத்துடன் அரிச்சந்திரனிடம் செல்ல எழல்

எனவுரைத் திடவெயர்த் திடியிடித்
தெனநகைத் திருகணும்
கனல்தெறித் திருபுடைக் கடமனைத்
தும்புகை கடிதுமூடச்
சினமிகுத் திறைவனுக் கிடர்விளைத்
திடுவதே செயலெனத்தன்
மனம்நினைத் தருமறைத் தவமுனித்
திரளுடன் வரநடந்தான். (19)

—நல்லூர் வீர கவிராயர்.

6. திருவிளையாடற் புராணம்

திருமுகங் கொடுத்த படலம்

பாணபத்திரர் அரசன் சேவையை விடுத்துச் சிவபிரான்
சேவையிலேயே ஈடுபடல்

இனிமதி யெமக்கீ தென்னு
யாழ்வல்லோன் அன்று தொட்டுப்
பனிமதி மருமான் கோயில்
பாணிசைக் கிழமை நீத்துக்
குனிமதி மிலைந்த நாதன்
கோயில்முப் போது மெய்திக்
கனிமதி அன்பிற் பாடும்
கடப்படு நியமம் பூண்டான். (1)

சிவபெருமான் பத்திரரின் வறுமையைப் போக்க, பாண்டியன்
தன் போக்கிஷ அறையிற் பொருள்களை எவருமறியாது
கவர்ந்து கொடுத்தல்

இத்தொழி லன்றி வேறு
தொழிலிவற் கின்மை யாலே
பத்திர னிலம்பா டெய்தப்
பொறுப்பரோ பழனக் கூடல்
சித்தவெம் மடிகள்; வேந்தன்
பொன்னறைச் செல்வம் வௌவிப்
பத்தர்யா ழிடத்தோ ளேந்திப்
பாடுவான் காண வைப்பார். (2)

சிலபொலங் காசு சின்னாள்
மணிக்கலன் சின்னாள் செம்பொற்
கலவகை சின்ன ளம்பொற்
சாமரைக் காம்பு சின்னாள்

அலர்கதிர் அரிமான் சேக்கை
ஆடகத் தகடு சின்னாள்
குலமணி வருக்கஞ் சின்னாள்
கொடுத்திடக் கொண்டு போவான். (3)

பத்திரர் அப்பொருள்களை உபயோகித்த விதம்

கைவரும் பொருளைத் தந்த
கள்வருந் தானு மன்றி
எவ்வெவர் தமக்குந் தோற்று
தெரியிலிட் டழித்துஞ் சின்னஞ்
செய்வன செய்துந் தன்னைச்
சேர்ந்தவர் இரந்தோர் கைபார்த்
துய்பவர் பிறர்க்கு மாறு
துதவியுட் கவலை தீர்ப்பான். (4)

வறுமையுற்று நலியும் பாணர்க்குச் சிவபிரான் கனவில் அருளியது

வைகலுங் கொடுப்போர் பின்னாள்
மறுத்தன ராகப் போய்ப்போய்க்
கைதொழு திறைஞ்சி வாளா
வருமவன் கலியின் மூழ்கி
உய்வகை வேறு காணு
தொக்கலு மொக்க வாடிக்
கையற வடைய நோனு
துறங்கினன்; கனவி னெல்லை (5)

சித்தவெம் பெருமான் வந்து
செப்புவா "னப்பா, நிம்பத்
தொத்தவன் கோசம் தன்னில்
தும்பியுண் கனியின் வெளவி
இத்தன மின்று காறு
மீந்தன மெம்பா லன்பு
வைத்தவன் அறிந்தாற் சங்கை
மனத்தனய் விகற்பங் கொள்வான். (6)

“ மயலறக் கற்புக் காக்கும்
மகளிர்போல் துறவு காக்க
முயலும்யோ கரிலுட் காப்பும்
முரசெறி புறஞ்சூழ் காப்பும்
கயலிலச் சினையு நிற்கக்
கவர்ந்ததற் புதமிக் கள்வன்
உயிர்தொறும் ஒளித்த கள்வ
ஞெருவனே வறியேன் என்பான். (7)

“ கோமக னினைய செய்தி
யறியுமேல் கோசங் காப்போர்க்
காமுறு தண்டம் ; நின்போல்
அன்பகத் தெம்மை வைத்த
தேமரு போந்தின் கண்ணிச்
சேரமான் தனக்கிப் போது
நாமொரு முடங்கல் தீட்டி
நல்குவம் போதி” என்ன (8)

மறைக்குரை செய்த வாக்கான்
‘ **மதிமலி புரிசை** ’ யென்னுஞ்
சிறப்பியல் சீர்சால் செய்யுட்
பாசுரஞ் செப்பித் தீட்டி
பிறைச்சடைப் பெருமான் நல்கி
மறைந்தனன் ; பெரும்பாண் செல்வன்
உறக்கநீத் தாடிப் பாடி
யுவகைமா கடலி லாழ்ந்தான். (9)

வேறு

பாணபத்திரர் முடங்கலுடன் சேரநாடு செல்லல்

வாங்கிய திருமுக மணிப்பட் டாடையிட்
டாங்கிறை யடிபணிந் தகன்று பத்திரன்
ஓங்கிய கோயிலை வலங்கொண் டொல்லென
நீங்கிமேல் வரைப்புல நெறிக்கொண் டேகுவான். (10)

கொல்லையுங் குறிஞ்சியுங் கொதிக்கும் வெம்பரல்
கல்லத ரத்தமும் கடந்து முட்புறப்
பல்சுளைக் கனியடி யிடறப் பைப்பைய
நல்வளங் கெழுமலை நாடு நண்ணினன். (11)

கொடுங்கோளூரின் சிறப்பு

அறமக ளாக்கமும் மலரின் மேயசெந்
நிறமக ளாக்கமும் நீதி சான்றபோர்
மறமக ளாக்கமும் வடசொற் றென்கலைத்
திறமக ளாக்கமும் சிறந்த தந்நகர். (12)

சேரமானுக்குச் சிவபெருமான் கனவில்தோன்றி யுரைத்தது

மண்புக ழுந்நகர் மறுகின் மாடொரு
தண்புனற் சாலையிற் சார்ந்து ளானிப்பால்
விண்புகழ் நீதியவ் வேந்தற் கன்றிராக்
கண்புனை நுதலினர் கனவிற் றோன்றினர். (13)

"தென்னவன் மதுரையி லிருக்குஞ் சித்தர்யாம்
நின்னிடை வந்துளேம் நின்னைக் கண்டுதான்
நன்னிதி வேண்டநம் ஓலை கொண்டுநம்
இன்னிசைப் பாணபத் திரனிங் கெய்தினன். (14)

"மற்றவற் கருநிதி கொடுத்து மன்னநீ
தெற்றென வரவிடு" கென்று சித்தர்தாம்
சொற்றனர் போயினர் சுரக்குந் தண்ணளி
ஒற்றைவெண் குடையினன் உறக்க நீங்கினன். (15)

சேரர் பத்திரரைத் தேட நினைத்து ஆட்களைப் போக்கல்

கங்குல்வாய்க் கண்டவக் கனவைப் பெண்ணையந்
தொங்கலான் தமரொடு சொல்லிச் சேற்கணாள்
பங்கினன் திருமுகம் கொணர்ந்த பத்திரன்
எங்குளான் கொல்லெனத் தேட வெண்ணுவான்.

மற்றவர் தமைத்துரீஇ வருக தில்லெனக்
கொற்றவ னேவலோர் குறுகி மாடமும்
தெற்றியும் நியமமும் மன்றுஞ் சென்றுசென்
றெற்றிகழ் மணிநக ரெங்குந் தேடுவார். (17)

காவலருரைத்த வழிசென்று மன்னவர் பாணரைக்
கண்டு மகிழ்ந்தது

தருமநீர்ப் பந்தரி லிருக்குந் தந்திரி
வருமிசைக் கிழவனைக் கண்டு வல்லைபோய்த்
திருமகற் குணர்த்தினர் சேனையோ டெழீஇப்
பெருமகன் பாணர்தம் பிரானை நண்ணினன். (18)

கண்டனன் முகிழ்த்தகைக் கமலஞ் சென்னிமேல்
கொண்டனன் பாடினன் கூத்து மாடினன்
தண்டென வீழ்ந்தன னன்பில் தண்ணரு
வண்டென மகிழ்ந்தனன் மன்னர் மன்னனே. (19)

திருமுகம் வாங்கிப் படித்து மகிழ்தல்

வாங்கினன் திருமுகம் மலர்க்க ணேற்றினன்
தாங்கினன் முடிமிசைத் தாமம் போன்மகிழ்
தூங்கினன் தடங்கணீர் துளிப்ப மெய் யெலாம்
வீங்கினன் பொடிப்பெழ வேந்தர் வேந்தனே. (20)

வேறு

"மின்னவிரும் செம்பொன்மணி மாடக்கூடல்
மேயசிவன் யாமெழுதி விடுக்குமாற்றம்
நன்னர்முகி லெனப்புலவர்க் குதவுஞ்சேரல்
நரபாலன் காண்கதன்போல் நம்பாலன்பன்
இன்னிசையாழ்ப் பத்திரன்றன் மாடேபோந்தான்
இருநிதியம் கொடுத்துவர விடுப்ப" தென்னத்
தென்னர்பிரான் திருமுகத்தின் செய்திநோக்கிச்
சேரர்பிரான் களிப்பெல்லை தெரியா னாகி (21)

வேறு

சேரரால் பாணபத்திரர் உபசரிக்கப்பெற்ற சிறப்பு

பொன்னின் தளிகை மிசைவைத்துப்
புழைக்கை மதமான் தலையேற்றி
மன்னுங் கொளையாழ்ப் புலவனைமுன்
வைத்துப் பின்னே தானிருந்து
மின்னுங் கதிர்கால் இணைக்கவரி
வீசிப் பலவே றியங்கலிப்பத்
தென்னென் றளியா ரிசைத்தாரான்
திருமா நகரை வலஞ்செய்யா (22)

பஞ்சு தடவுஞ் சீறடியார்
பலமங் கலங்கொண் டெதிர்போத
மஞ்சு தடவும் நீள்குடுமி
மாட மனையிற் கொடுபோகி
நஞ்சு தடவும் அணிகண்டன்
அன்பன் தனைநன் னீராட்டி
அஞ்சு தடவி ஓவியஞ்செய்
தமைத்த மணிமண் டபத்தேற்றி (23)

அம்பொற் றவிசிட் டருச்சனைசெய்
தாறு சுவையின் னமுதருத்திச்
செம்பொற் கலவை நறுஞ் சாந்தம்
தீம்பூ வாதி முகவாசம்
பைம்பொற் கலத்து வெள்ளிலை தீம்
பழுக்காய் பிறவு முறைநல்கி
“ உம்பர்க் கிறைவன் திரு முகத்தில்
உய்ப்ப தெனலால் உய்த்து ” மென (24)

சேரர் "உமக்கிஷ்டமானவற்றைப் போக்கிஷத்தி லிருந்து எடுத்துக் கோள்க" வேனப் பத்திரர் "தாங்கள் கோடுப்பது அமையும்" என்னல்

செம்பொன் னறையைத் திறந்தழைத்துக்
காட்டி "இனைய திருவெல்லாம்
உம்பர் பெருமான் அடியீர், நீர்
உடையீர் கவர்ந்து கொண்மி"னென
இம்பர் நிழற்றும் வெண்குடையான்
இசைப்ப வெதிர்தாழ்ந் திசைக்கிழவன்
"நம்ப னருளுக் குரியீர், நீர்
நல்கிற் றமையு மெனக்"கென்ன (25)

சேர மன்னர் நிதிகோடுத்துபசரித்தனுப்பல்

மன்னன் தானெண் ணியவாற்ருல்
வழங்க வழங்க மறுத்துமறுத்
தின்னல் தீரும் இசைக்கிழவன்
இலங்கும் பொலம்பூ ணிருநிதியம்
பொன்னஞ் சிவிகை கரிபரிமான்
பொற்பட் டாடை பலபிறவும்
தன்ன தென்னு மளவாற்ருல்
தானே கொள்ளத் தார்வேந்தன் (26)

பின்னே முடியோ சேட்சென்று
பெருமை சான்ற வரிசையினுல்
தன்னே ரிசையான் தனைவிடுத்து
மீண்டா னகத் தமிழ்மதுரை
மின்னேர் சடையார் இசைத்தொண்டன்
தானும் மீண்டு வெயில்விரிக்கும்
பொன்னேர் மௌலி நிதிக்கிழவன்
போல மதுரை நகர்புக்கான். (27)

பாணபத்திரர் அந்நிதியைப் பயன்படுத்திய விதம்

வந்து மதுரைப் பெருமானை
வணங்கிக் கொணர்ந்த நிதியெல்லாம்
இந்து மருமா னகருள்ளார்
யாரும் அறிய யாவர்க்கும்
முந்தை வேத முதல்வர்க்கும்
புலவோர் தமக்கும் முறைநல்கிச்
சந்த யாழி னிசைப்பாணர்
தரும மனையான் வைகினான். (28)

—பரஞ்சோதி முனிவர்.

ச. இனிய பகுதிகள்

1. கார்கால வருணனை

நஞ்சினில் நளிர்நெடுங் கடலின் நங்கையர்
அஞ்சன நயனத்தின் அவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செய்கையின்
நெஞ்சினி னிருண்டது நீல வானமே.

—கம்பராமாயணம்.

கொடிநுடங் கொளிசெய் மின்னுக்
கூத்தியர் வான ரங்கத்
திடிமுழா முழக்கம் விம்ம
எழில்பட ஆடி யாடிப்
படுகடல் குறையவுண்டு
பாய்புயல் எழினி யுள்ளாக்
கடிதுபுக் கொளித்தல் மௌவல்
கண்டிள முறுவல் பூத்த.

—சீகாளத்திப்புராணம்.

2. தமயந்தி கானகத்திற் புலம்பல்

"கான்றூர் உயிர்ஒழுகக் கண்ணீர் கவுள்அலைப்ப
ஊன்தோய் கணைப்பட் டுழலும் பிணையொத்தேன்;
மான்தேர்அரசர் முடிஉழுத வார்கழற்கால்
தோன்றாலென்கண்களிப்பஇன்னமுமென்தோன்றலையே (1)

நேரலார் போரேறே, நிடதத்தார் கோமானே,
ஆரவரை மார்பா, அளியேன் உயிர்க்குயிரே,
காரிருள்வாய் யான்புலம்பக் கானகத்து விட்டகன்றும்
சாரலையால் இன்னும்; இதுவேநின் தண்ணளியே! (2)

நெஞ்ச மெலிவேன் நினது தடந்தோளும்,
கஞ்ச மலர்முகமுங் காணாது கண்பனிப்ப;
மஞ்சுதவழ் வெற்பெறிந்த வச்சிரத்தோன் அன்றளித்த
விஞ்சை பயின்று விளையாட் டயருதியோ! (3)

ஞாலத் திருள்நடப்ப, நாட்கமலம் வாய்நெகிழ,
வேலைத் திரைமுகட்டில் வெய்யோன் எழுந்தனனால்;
மாலைக் கதிர்வடிவேல் மன்னர் பெருமானே,
காலைக் கடவ கடன்கழிக்க வாராயோ! (4)

வாவும் இளமான்காள், மயில்காள், மடப்பிடிகாள்,
கூவுங் கரிய குயில்காள்,மென் புள்ளினங்காள்,
ஆவி யெனமேவி அகலேம் எனவகன்ற
காவலன்றான் போன வழிஎனக்குக் காட்டீரே." (5)

—அதிவீரராம பாண்டியர்.

3. ஒரு தூதியின் அரும் இயல்புகள்

மண்ணியல் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூல் ஓதிய நாவினள்;

* * *

உறுப்புப்பல அறுப்பினும் உயிர்முதல் திருக்கினும்
நிறுத்துப்பல ஊசி நெருங்க வூன்றினும்
கறுத்துப்பல கடியக் காட்டினும் காட்டாது
சிறப்புப்பல செயினும் திரிந்து பிறி துரையாள்;

* * *

இன்னது செய்கென ஏவ லின்றியும்
மன்னிய கோமான் மனத்தை யுணர்ந்து
முன்னியது முடிக்கும் முயற்சியள்; ஒன்னார்
சிறந்தன பின்னும் செயினும் அறியினும்
புறஞ்சொல் தூற்றாது புகழுந் தன்மையள்;
புல்லர் வாய்மொழி யொரீஇ நல்லோர்
துணிந்த நூற்பொருள் செவியுளங் கெழீஇப்
பணிந்த தீஞ்சொற் பதுமை யென்னும்
கட்டுரை மகள்..............................

—பெருங்கதை.

4. அரசனுக்குப் புலவர் கூறிய புத்திமதி

இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன் ;
கருஞ்சினை வேம்பின் தெரியலோ னல்லன் ;
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே ; நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே ;
ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே ;
இருவீர் வேறல் இயற்கையு மன்றே அதனால் ;
குடிப்பொரு ளன்றுநும் செய்தி ; கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே.

—புறநானூறு.

5. சிவபிரான் பிச்சையேற்றல் தகாதென்றல்

"குறையின்மா ணிக்கமலை
வெள்ளிமலை நாளும்
குலவுசோற் றுத்துறைபாற்
றுறைநெய்த்தா னமுநீர்
உறையில்; கரச் சிலையம்பொன்
வரை; நெடுமான் முதலோர்க்
குறுபோகங் கொடுப்பதுநுந்
திருவருள்; பா லுறைவாள்
கறையிலறம் பலவளர்ப்பாள்;
ஒருதோழன் நிதிக்கோன்;
கரையில்பொருட் பங்களிப்பார்
கனவணிக ருளர்; நீர்
முறையிலெனும் பாதியணிந்
தையமேற் றுழல்வீர்;
முடித்தழும்பீ ரிதுதகுமோ
மொழிமினடி யேற்கே."

—வாட்போக்கிக் கலம்பகம்.

6. அகத்தியரின் பெருமை

முடிது மெனமறை முதலிய பரவவும்
முறிது மெனநிசி சரர்குல மிரியவும்
முரிது மெனவெழு குலகிரி குலையவும்
முனிது மெனவெழு புணரிகள் மறுகவும்
மடிது மெனமகி தலம்நிலை தளரவும்
மறிது மெனவடி சுரபதி வருடவும்
வரத ஞெருதமிழ் முனிவரன் வரவரு
மலய வரையர மகளிர்கள், திறமினே.

—தக்கயாகப் பரணி.

7. பெண்ணின் வீரம்

கன்னின்ரு னெந்தை ; கணவன் களப்பட்டான் ;
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர் ;—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தானென் ஏறு.

—புறப்பொருள் வெண்பா மாலை.

8. புது மணப்பெண்ணின் சமையல்

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே.

—குறுந்தொகை.

ரு. தனிப் பாடல்கள்

1. புலவரைச் சிறப்பித்த பூபன்

கனந்தந்தான் கனகாபி டேகந் தந்தான்
களங்கமிலாக் கருப்பொருளை யழைத்துத் தந்தான்
மனந்தந்தான் முடிசூட்டு மாலை தந்தான்
வாணிசிங்கா தனத்திருத்தி வரிசை தந்தான்
இனந்தந்தா னிராமகதை யெவர்க்குந் தந்தான்
எனைராமா யணக்கவிஞ னெனப்பேர் தந்தான்
அனந்தந்தான் மணலிமுத்துக் கிருஷ்ண பூபன்
அகந்தந்தா னிருமையிலும் சுகந்தந் தானே. (1)

—சீர்காழி அருணசலக் கவிராயர்

2. அன்பாலிடுவதே அமுது

கெட்டசாறு தவிடுகஞ்சி
கிருமியுண்ட மாவரைக்
கீரைவேர் தெளிந்தமோர்
முறிந்தபாகு கிண்டிமா
இட்டசோறு கொழியலும்பி
டாதபுற்கை யாயினும்
எங்குமன்ப தாகநுங்க
இன்பமா யிருக்குமே;
பட்டபாகு பசுவினெய்
பருப்புமுக்க னிக்குழாம்
பாளிதங்கள் தாளிதங்கள்
பண்ணியார வகையுடன்
அட்டபாற் குழம்புகன்னல்
அமுதமோடு முதவினும்
அன்பினோ டளித்திடாத
அசனமென்ன வசனமே. (2)

—பெயர் தெரியாத ஒருவர்.

3. பெருக்கத்திற் புலவர்காட்டிய பணிவு

பத்துகொண் டனதிக்கும் பதறிப்போய் முடியப்
பைம்பொற்ரு ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருள்மானு பரணு!
முத்துப்பந் தரில்நிற்கும் குருளைக்கும் சினவேல்
முருகற்கும் பொதியக்கோ முனிவற்கும் பதுமக்
கொத்தற்கும் சடிலக்குந் தளருக்கும் அல்லாற்
கூழைத்தண் டமிழுக்கேன் கொடியுங்கா ளமுமே. (3)

—ஒட்டக் கூத்தர்.

4. வள்ளுவரும் குறளும்

ஓதற் கெளிதா யுணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்ரூேர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. (4)

—மாங்குடி மருதனர்.

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞால முழுதும் நயந்தளந்தான்;—வாலறிவின்
வள்ளுவரும் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து. (5)

—பரணர்.

5. பொய்யாமொழிப் புலவரின் கவிகள்

அறமுரைத் தானும் புலவன்; முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்;—குறுமுனி
தானும் புலவன்; தரணி பொறுக்குமோ,
யானும் புலவ னெனின்? (6)

அளிகொ ளுந்தொடை யானர சைக்குமன்
ஒளிகொள் சீநக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாம் தித்தியா நிற்குமே. (7)

6. என்ன வெயில்!

என்ன வெயில்! என்ன வெயில்! கதிரோன் கோபம்
இத்தனையேன் உயிர்களின்மேல் காட்டு கின்றான்;
பொன்னைவெளி யினில்வைத்தால் உருகி யோடும்;
புழுக்கத்தால் உடல்வேர்வை வெள்ள மூழ்கும்;
சின்னவிசி றிகளையசைத் தாட்டிப் பியத்துச்
செய்வதென்ன? காற்றென்னும் பேரு மில்லை;
இன்னமுயன் றிடின்கானற் காற்றே வீசும்;
என்னவெயில்! என்னவெயில்! என்னே! என்னே!!(8)

மூச்சுவிட முடியவிலை; கண்க ளெல்லாம்
மூண்டெரிச்சல் அடங்கவிலை; எங்கே னும்போய்
வாச்சபணி செயவென்றாற் கீழு மேலும்
மண்டுவெயி லுடலையுருக் கிடுமா லந்தோ!
சீச்சியிந்த வெயிலோனுக் கிந்தக் காலம்
சீற்றமிக எவரிழைத்தார் கொடுமை? நீரால்
போச்சுதிந்த வெப்பமென்றே இருப்ப தற்கும்
போதவிலை; என்செய்வோம்? என்னே! என்னே!! (9)

பார்த்தாலுங் கண்ணெரிச்சல்; நடந்தாற் காலிற்
படரெரிச்சல் தலையெரிச்சல்; மேலெல் லாமும்
வேர்த்தாலங் குடம்பெரிச்சல்; விசிறிக் காற்றோ
மிகத்தழலை வீசியள்ளிக் கொட்டும்; நாவில்
நீர்த்தாகம் எதனாலும் தீர்வ தில்லை;
நினைந்துநினைந் தேபாழும் வயிற்றில் ஆழி
வார்த்தாலும் வறட்சியடங் கினபா டில்லை;
வையகமே நெருப்புலக மாயிற் றம்மா! (10)

—ஜோதி.

உரை நடைப் பகுதி

1. இந்திய இலக்கியக் கழகம்*

முன்னுரை

புண்ணிய பூமியாகிய பாரத வர்ஷத்திலுள்ள பலவேறு நாடுகளினின்றும் இலக்கிய ஆராய்ச்சியின் பொருட்டு இங்கே வந்து கூடியிருக்கும் உங்களுடைய காட்சி என்னுடைய உள்ளத்தில் ஆனந்தத்தை உண்டாக்குகிறது. தென்னிந்தியர் சார்பாக உங்களைச் சந்தோஷத்தோடு வரவேற்கிறேன். மேலும், சிறியதாயினும் என்மனம் விசுவரூபத்தை அடைந்து இந்திய நாடு முழுவதையும் இப்பொழுது தழுவிக் களிக்கின்றது. எல்லாச் சபைகளிலும் அறிவு விளக்கத்தைத் தரும் சபைகளே சிறப்புடையனவாகும். அறிவின் பெருக்கத்தையும் இலக்கிய ஒற்றுமையையும் குறித்து நாம் கூடியிருக்கின்றோமென்று எண்ணும் பொழுது என்னுடைய ஞாபகம் பழைய காலத்துக் காட்சிகளிற் போய்ப் பதிகின்றது. தமிழரசர்களுடைய ராஜதானிகளிலும் வட நாட்டு நகரங்களாகிய உஜ்ஜயினி முதலிய இடங்களிலும் பல பாஷைகளைப் பேசும் அறிஞர்கள் தமக்குள் மனங்கலந்து பழகிய செய்திகள் என் அகக்கண் முன் தோன்றுகின்றன; இக் கழகத்தினால் உண்டாகும் அரிய பயனை நினைந்து இன்ப சாகரத்தில் உள்ளம் ஆழ்ந்து விடுகிறது.

இந்த ஸாஹித்ய பரிஷத் அறிவொளியைத் தரும் மலைமேல் விளக்காகத் திகழ்கின்றது. இந்த விளக்கை ஏற்றி வைத்த பெரியார் இன்று தலைவராக வீற்றிருத்தல் இதன் விசேஷ வளர்ச்சிக்கு நல்ல அறிகுறியாகத் தோற்றுகின்றது. உலகத்துப் பேரறிஞர்களால் புகழப் பெற்றவரும் "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரும்" ஆகிய மகாத்மா

---

* பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் முதலாவது மகாநாட்டு வரவேற்புப் பிரசங்கம். 27-3.37.

காந்தியடிகளின் அன்பினுல் உண்டான இந்த மகா சபையில் நானும் கலந்துகொள்ளும்படி நேர்ந்த இந்த நாளை என் வாழ்க்கையிற் சிறந்த நாளாக எண்ணுகின்றேன்.

திராவிட பாஷா ஸமூகத்தின் தாயிடமாக விளங்கும் இச் சென்னையில் நடைபெறும் இந்தப் பரிஷத்தில் உங்களை வரவேற்கும் தகுதிவாய்ந்த பெரியோர்கள் பலர் இருக்கின்றார்கள். திராவிட பாஷைகளுள் பழமையான தமிழில் பல வருஷங்களாக ஈடுபட்டுக் கரையானேடும் ராம பாணப் பூச்சிகளோடும் போராடி ஏட்டுச் சுவடிகளின் புழுதியால் மங்கிய கண்களோடு முதுமைப் பருவமும் துன்புறுத்த, உங்கள் முன் வந்து நிற்கும் என்பால் உள்ள குறைபாடுகள் பல. ஆனுலும் புதியவனென்ற ஞாபகத்தினுல் இந்த நாட்டினர் உங்களை வரவேற்கும் பொருட்டுத் தங்களுடைய பிரதிநிதியாக என்னை முன்னே நிறுத்தி யிருக்கிறார்கள். உங்கள் வரவு நல்வர வாகுக!

எனக்குத் தமிழையன்றி வேறு பாஷைகளிற் பயிற்சியில்லை; ஆதலால் தமிழ் நூல்களால் அறிந்த சில விஷயங்களை மட்டும் உங்களுக்கு இப்போது தெரிவிக்கிறேன்.

தமிழ் வித்துவான்களின் தலைமை

தமிழ் நாட்டில் எந்தக் காலத்திலும் வித்துவான்களுக்கே தலைமை இருந்து வந்தது. அவர்கள் அறிவைப் பரப்புவதற்குச் செய்துவந்த தொண்டுகள் சிறந்தனவாக யாவராலும் கருதப்பட்டன. அரசர்கள் புலவர்களுக்கு உயர்ந்த மதிப்பை அளித்தனர். அவர்களுடைய அறிவுரையைப் பொன்னே போற் போற்றிவந்தனர். சில சமயங்களில் புலவர்கள் அரசர்களுடைய குற்றங்களை எடுத்துக் காட்டிக் கண்டித்ததும் உண்டு. சில புலவர்கள் மந்திரிகளாகவும் வேறு பல சிறந்த உத்தியோகஸ்தர்களாகவும் இருந்து அரசாங்கம் நல்வழியில் நடைபெறுவதற்குக் காரணமாக விளங்கினர்.

புலவர்களின் ஒற்றுமை

புலவர்களிடத்தே காணப்பட்ட ஒற்றுமை வியக்கத் தக்கதாக இருந்தது; "புலவர்களோடு சேர்ந்து பழகும் இன்பத்தைக் காட்டிலும் தேவலோக இன்பம் சிறந்ததாக இருக்குமாயின் ஒரு முறை பார்த்து வரலாம்" என்று பல நூற்றுண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட நாலடியாரிலுள்ள ஒரு செய்யுள் சொல்லுகிறது. சுவர்க்க இன்பத்தைவிட அறிவுடையோர்கள் ஒருவரோடு ஒருவர் பழகும் இன்பமே சிறந்ததாக அவர்கள் கருதி இருந்தார்கள்.

பழைய காலம் புலவர்களிடத்தில் பகைமை யென்பது மருந்துக்கும் இல்லை; "எல்லாத் தேசங்களும் எங்கள் தேசமே; எல்லாம் எங்கள் ஊரே; யாவரும் எங்கள் சுற்றத்தாரே; பகைவர் யாரும் இல்லை" என்று புறநானூற்றில் ஒரு புலவர் சொல்லி யிருக்கிறார். ஒருவருக்கொருவர் விரோதம் பாராட்டிய அரசர்களிடத்தில் வித்துவான்கள் சென்று மகிழ்வித்துப் பரிசுகளைப் பெற்று வந்தனர்; பின் அப் பகையரசர்களைச் சமாதானப்படுத்தி ஒற்றுமையாக வாழச் செய்தார்கள். ஒற்றுமையும் சமரஸ பாவமும் வித்துவான்களுடைய சிறந்த இயல்புகள். அவர்களுக்கு எல்லோருடைய வீடுகளும் திறந்திருந்தன.

பிற நாட்டினரோடு பழக்கம்

தமிழ் நாடு முழுவதும் சென்று பழகியதோடு பிற நாடுகளுக்கும் அவர்கள் சென்று அங்கங்கேயுள்ள அறிஞர்களுடைய பழக்கத்தைப் பெற்றனர். அப்படியே பிற நாட்டிலுள்ள வித்துவான்களும் தமிழ் நாட்டிற்கு வந்து பழகிப் பாராட்டப் பெற்றுச் சென்றார்கள்.

சிலப்பதிகாரமென்னும் பழைய தமிழ் நூல் இற்றைக்குச் சற்றேறக்குறையப் பதினேழு நூற்றுண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டது. காவிரிப்பூம் பட்டினத்தில் பல பாஷைகளைப் பேசும் பல நாட்டு மனிதர்கள் மனங் கலந்து இனிது வாழ்ந்து வந்தனரென்று அது தெரிவிக்கின்றது.

மதுரை முதலிய நகரங்களிலும் அப்படியே இருந்தார்கள். அவர்கள் தங்கள் தங்கள் பாஷைகளின் நயங்களை ஒருவர்க் கொருவர் சொல்லி இன்புற்றனரென்பது சொல்லாமலே விளங்கும்.

இப்பொழுது கிடைக்கும் தமிழ் நூல்களில் மிகப் பழையதும் பல ஆயிர வருஷங்களுக்கு முன் இயற்றப் பெற்றதுமாகிய தொல்காப்பியத்தில், கல்யாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தும் தலைவன் படிப்பதற்காக வேற்று நாட்டிற்குப் போவதைப்பற்றிய விஷயம் சொல் லப்பட்டிருக்கிறது. மற்ற நாட்டாரோடு வியாபாரம் செய் தவர்கள் புறத்தேயுள்ள அவ்வந் நாட்டுப் பாஷைகளில் வல்லுநராக இருந்தார்களென்பதை மணிமேகலை முதலிய நூல்கள் சொல்லுகின்றன. காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்திருந்த வியாபாரி ஒருவன் நாக சாதியினர் வாழும் தீவிற் சிக்கிக்கொண்டான். அச்சாதியினர் நர மாமிச பக்ஷணிகள். அவர்கள் அவனைக் கொல்ல வந்தபோது அவன் அவர்களுடைய பாஷையை அறிந்திருந்தானதலின் அதிலேயே பேசினன். உடனே அவர்கள் மகிழ்ந்து தம் தலைவனிடம் கொண்டு சென்று பல பரிசுகளை அளித்து அனுப்பினர்கள். இது மணிமேகலையிற் கண்ட வரலாறு.

கூர்ஜரம், வங்கம், நேபாளம், இலங்கை முதலிய இடங்களிலுள்ள சிற்பிகளும் தொழிலாளிகளும் தமிழ் நாட்டு வேலைக்காரரோடு கலந்து உழைத்துக் கட்டிடங்களை அழகு படுத்தினர்; தங்கள் கலைத் திறனைப் பல வகையில் அமைத்து விளக்கினர்.

பதினெண் பாஷை

முற்காலத்தில் இந்திய பாஷைகளில் முக்கியமானவை பதினெட்டு என்றதொரு கொள்கை இருந்தது. அப் பதி னெட்டுப் பாஷைகளிலும் வல்லவர்கள் தமிழ் நாட்டில் அங்கங்கே இருந்தார்கள்; மகளிரும் வேறு பாஷைகளில் அறிவு வாய்ந்தவராக இருந்தனர்.

ஆரியர்

தமிழ் நூல்களை ஆராய்ந்தால், வட நாட்டினரைத் தமிழர் ஆரியரென்று குறித்து வந்ததாகத் தெரிகின்றது. சிலர் கருதுவதுபோல ஆரியரென்பது ஒரு சாதியின ரையோ, ஒரு குலத்தினரையோ குறிப்பதாகத் தோற்ற வில்லை. வட நாட்டுக் கூத்தரை ஆரியக் கூத்தரென்றும், வட நாட்டு அரசர்களை ஆரிய அரசர்களென்றும், பல சாதி யினரும் கலந்த வட நாட்டுப் படையை ஆரியப் படையென் றும் கூறும் தமிழ் நூல் வழக்கங்களால் இது விளங்கும்.

வடநாட்டு அரசர்களுள் ஒருவனாகிய ஆரிய அரசன் பிரகத்தனென்பவன் தென்னாட்டுப் புலவர் பெருமானாகிய கபிலரிடம் தமிழ் கற்றான். தமிழின் நயங்களை அவனுக்குப் புலப்படுத்துவதற்காக அவர் 'குறிஞ்சிப் பாட்டு' என்ற ஒரு நூலை இயற்றினார். அது தமிழுக்குச் சிறப்பாக அமைந்துள்ள தெய்விகக் காதலைப்பற்றிச் சொல்வது. பல அரிய மலர்களின் பெயர்கள் அதில் வந்துள்ளன; அதைக் கேட்ட அரசன், "தமிழர் எத்தகைய உயர்ந்த லக்ஷ்யங்களை உடையவர்கள்! அவர்கள் இயற்கையை எவ் வளவு நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். எத்தனை மலர்கள்! எத்தனை மரங்கள்!" என்று ஆச்சரியப்பட்டிருப்பானென்ப தில் ஐயமில்லை.

மற்றோர் ஆரிய அரசனாகிய பிரமதத்தனென்பவன் மதுரைத் தமிழச் சங்கத்தில் ஒரு புலவனாக இருந்து தமிழ்ச் செய்யுட்களை இயற்றியிருக்கின்றான். அவன் இந் நாட்டு இலக்கியங்களைப் பயின்றதையன்றி இந் நாட்டுக்கே உரிய இசையையும் பயின்று தமிழ் நாட்டு இசைக் கருவியாகிய யாழில் வல்லவனானான். இதனால் அவன் ஆரிய வரசன் யாழ்ப் பிரமதத்தன் என்று வழங்கப்பட்டான்.

கோசர்

தமிழரசர்களுடைய நியாய சபையில் வடதேசத்து அறிஞர்கள் இருந்தனர். அங்ஙனமிருந்த கோசரென்ற

ஒரு வகையார் வட நாட்டில் இருந்த சத்திய புத்திரர்களைச் சேர்ந்தவர்களென்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இது காறும் கூறிய விஷயங்களால் பண்டைக்காலத்தில் இந்திய பாஷைகளைக் கற்ற வித்துவான்களுள்ளும் மற்றவர்களுள்ளும் ஒற்றுமை யிருந்த தென்பதும் தமிழர் பிற பாஷைகளைக் கற்றதன்றிப் பிற நாட்டினருக்குத் தமிழைக் கற்பித்து வந்தனரென்பதும் புலனாகும்.

பிற நாட்டிற் பரிசுபெற்ற புலவர்

பிற்காலத்தில், இற்றைக்குச் சற்றேறக் குறைய ஆயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த கம்பர் தெலுங்கு நாட்டிற்குச் சென்று தம்முடைய தமிழறிவை வெளிப்படுத்திப் பிரதாபருத்திரனென்ற அரசனால் சம்மானம் பெற்றார். முந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்த குமர குருபர முனிவரென்பவர் ஹிந்துஸ்தானி பாஷையை நன்றாகக் கற்று டில்லி பாதுஷாவினிடம் ஸம்மானங்கள் பெற்றுக் காசியில் மடங்கட்டிக் கொண்டு வாழ்ந்தார். அங்கே அவர் கம்ப ராமாயணப் பிரசங்கம் செய்வதுண்டென்றும், அக்காலத்தில் அம்முனிவரோடு பழகிய ஸ்ரீ துளஸீ தாஸர் தம்முடைய இராமாயணத்தில் கம்பர் கருத்துக்களை அமைத்திருக்கின்றனரென்றும் சிலர் கூறுவர். அருணகிரி நாதர் முதலியோரும் அங்ஙனமே வடநாட்டினராற் போற்றப்பட்டனரென்பதற்குரிய குறிப்புக்கள் கிடைக்கின்றன.

தமிழ் நாட்டுச் சங்கீத வித்துவான்கள், மகா ராஷ்டிரம், ஹிந்துஸ்தானி, தெலுங்கு, முதலிய பாஷைகளையும் அறிந்து உபயோகப் படுத்தினர்; அந்த அந்த நாட்டிற்குச் சென்று புகழ்பெற்றனர். இவை பழைய வரலாறுகள்.

இக்காலத்து நிலை

இப்பொழுது, அரசியல் சம்பந்தமான விஷயங்களாலும் சாதி சமய வேறுபாட் டுணர்ச்சியாலும் பாஷை விஷ

யத்திலும் வேறுபாடான சில கொள்கைகள் உண்டாயிருக் கின்றன. ஆயினும் தமிழன்பர்களுடைய முயற்சிகளால் புது வகையில் தமிழ் நூல்கள் இயற்றப்பட்டு வருகின்றன. கலை, கதை, ஆராய்ச்சி முதலிய விஷயங்களில் உபயோக முள்ள அபிவிருத்தி ஏற்பட்டு வருகின்றது.

இந்தப் பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் நோக்கம் எவ் வளவு உயர்ந்தது! இதன் முயற்சிகளால், குறுகிய நோக் கங்களும் சிறு வேறுபாடுகளும் ஒழிந்து தமிழர்களுள் ஒற் றுமை, திராவிட பாஷா ஸமூகத்தாருள் ஒற்றுமை, பாரதீய பாஷா ஸமூகத்தாருள் ஒற்றுமை ஆகிய மூன்றும் ஒன்றன் பின் ஒன்ருக உண்டாகுமென்றே நம்புகிறேன்.

இந்தியாவின் பொது மொழி

இந்தப் பரிஷத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று, ஒரு பாஷையிலுள்ள அரிய விஷயங்களை எல்லாப் பாஷை களுக்கும் பொதுவாக்கிக் கொள்ளுதலாகும். நம்முடைய பொதுப் பாஷையாக ஹிந்தியை ஏற்றுக்கொண்டிருக் கிருேம். இந்தியாவிலுள்ள பல பாஷைகளிலும் இது பொதுவாக இந்தியாவிற்கே உரியதென்பதை இதன் பெய ரமைதியே குறிக்கின்றது. பழைய காலத்தில் ஸம்ஸ்கிரு தம் இந்தியாவின் பொது மொழியாக இருந்ததென்று சில பழைய நூல்களால் தெரியவருகின்றது.

சில காலமாகத் தமிழ் நாட்டு இலக்கியப் பகுதிகளிற் சில 'ஹம்ஸ்' முதலிய பத்திரிகைகளில் வெளி வந்திருக் கின்றன. தமிழின் விரிந்த நூற்பரப்பைப் பார்த்தால் அது பல அரிய விஷயங்களை உலகத்திற்கே உதவும் பெருமை வாய்ந்ததென்பதை அறியலாம்.

தமிழின் பழமை

இப்பொழுது இந்திய நாட்டில் வழங்கும் பாஷைகளுள் வடமொழியை யல்லாமல் இலக்கிய வளம் படைத்தவற்றுள் மிகப் பழமையானது தமிழ். இதன் இலக்கணத்தை நாட்

டும் தொல்காப்பியம் இன்ன காலத்ததென்று வரையறுக்கப்படாத நிலையில் உள்ளது; மூவாயிரம் வருஷங்களுக்கு மேற்பட்ட பழமையுடையதென்பதில் தடையொன்றும் இல்லை.

சங்க நூல்களென்று சொல்லப்படும் நூல்கள் 2000 வருஷங்களுக்கு முன் இயற்றப்பட்டவை. அவற்றுள் அழிந்தன போக இப்பொழுது கிடைக்கும் நூல்கள் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்று மூன்று பிரிவாக வகுக்கப்பட்டுள்ளன. தமிழருக்கே சிறப்பாக அமைந்த இசை நூல்களும் நாடக நூல்களும் பிற கலைகளைப் பற்றிய நூல்களும் அழிந்தன. பெருங் கடலைப் போலப் பரந்திருந்த அக்கலைகளிற் சில துளிகளே இப்பொழுது கிடைக்கின்றன.

இலக்கியத்திலும் பல நூல்கள் இறந்துவிட்டனவாயினும் முற்கூறிய முப்பத்தாறு நூல்கள் இப்பொழுது புத்தக உருவத்தில் வெளி வந்துள்ளன.

தமிழின் சிறப்பு

தமிழ் மொழியில் மற்றப் பாஷைகளில் வரையறுத்துச் சொல்லப்படாத பொருளிலக்கணமென்ற பகுதியொன்று சிறப்பாக இருக்கிறது. அகப்பொருள், புறப்பொருள் என்று இரண்டு வகைப்படுவது அது. அகப்பொருள் காதல் வாழ்வைப்பற்றியது; புறப்பொருள் பல வகையாக அமைந்தாலும் அதிற் பெரும்பகுதி வீர வாழ்வைப் பற்றியது. இலக்கியத்துக்கு உயிரை ஊட்டும் காதலும் வீரமுமே தமிழர் பொருளிலக்கணத்தால் வரம்பு செய்யப்பட்டிருக்கின்றன. சங்க நூல்களில் இவ்விரண்டு வகையிலும் உள்ள செய்யுட்கள் பல.

பண்டைத் தமிழ் நூல்களில் இயற்கையழகின் வருணனை அதிகம். ஸ்வபாவோக்தியாகிய தன்மை நவிற்சியணியே எங்கும் காணப்படும்; அதிசயோக்தி பெரும்பாலும் இல்லையென்றே சொல்லவேண்டும்.

பண்டைத் தமிழ்க் கவிதை

அக் காலத்துப் புலவர்களின் கவிதை இயற்கைத் தாயின் மடியில் தவழ்ந்து, தெய்விகக் காதலிலும் அறந் திறம்பா வீரத்திலும் விளையாடி, சமரஸ நிலையில் வீற்றிருக் கின்றது. கவிஞர்களுடைய சிருஷ்டிகளில், அருவிகள் இடையறாத சங்கீதத்தோடு வீழ்வதும், அதில் மகளிர் துளைந்து விளையாடி இன்புற்று மலர்களைப் பறித்துப் பாறை யிலே குவித்து அழகு பார்ப்பதும், நாயகன் ஒருவன் வேட்டையாடிக்கொண்டு வருவதும், அவன் அம்மகளிர் கூட்டத்திலுள்ள நாயகி யொருத்தியைக் காண்பதும், இரு வர் கண்களாகிய மடை வழியாகப் பாய்ந்த அன்பு வெள் ளத்தில் இருவருள்ளமும் கலந்து கரைவதுமாகிய நிகழ்ச்சி களைப் பார்க்கிறோம்.

ஏழை இடையன் வீட்டில் பந்தற்காலில் கட்டியிருக்கும் தழையை ஆட்டுக்குட்டி உண்பதும், கடற்கரையிலுள்ள வலையர் தெருக்களில் முத்துக்களைக் கிளிஞ்சிலுக்குள் இட் டுக் குரங்குகள் குழந்தைகளோடு கிலுகிலுப்பை விளையாடு வதும், இடையன் மாலைக் காலத்தில் தன்னுடைய புல்லாங் குழற் கீதத்தினால் பசுக்களையெல்லாம் ஒன்று கூட்டி வீட் டுக்கு வருகையில் வழியிலே மலர்ந்துள்ள முல்லைப் பூக் களைக் கொத்தோடு பறித்துத் தலையிற் செருகிக் களிப்பது மாகிய காட்சிகளைக் காண்கிறோம். அரசர்கள் வித்துவான்க ளோடு கூடிப் பொழுது போக்குவதும், காலவரையறைப் படி அரசியற் காரியங்களைச் செய்வதும், குடிகளுடைய வழக்கை நடு நிலைமை பிறழாது தீர்ப்பதும், விழாக்கொண் டாடுவதுமாகிய காட்சிகளையும் பார்க்கிறோம்.

நெடு நாட்களாகத் தீ மூட்டப்படாமையால் காளான் முளைத்த அடுப்பும் ஓட்டைக்கூரையும் உள்ள வறுமை நிலை யும் ஒரு பக்கம் சித்தரிக்கப்படுகின்றது; பல பண்டங்களை விற்கும் இடங்களில், பகலிற் கொடிகளாலும் இரவில் விளக்குகளாலும் பாஷை அறியாதவர்களும் அறிந்து

கொள்ளும்படி இன்ன இன்ன பண்டங்கள் விற்கப்படு மென்பதைக் குறிப்பிக்கும் கடை வீதிகளிலும், அரண் மனைகளிலும் திருமகள் நடனம் புரியும் கோலம் ஒரு புறம் சித்தரிக்கப்படுகின்றது.

வீரம், காதல், கருணை, சோகம் முதலிய ரஸபாவங்கள் அங்கங்கே அமைந்து விளங்குகின்றன. இவற்றிலெல்லாம் தமிழர் காட்டிய நடையை மற்றவர்களும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமன்றோ?

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப் பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்"

[துன்பத்தைப் பொறுத்து விரதமிருப்பவர்கள் ஆற்று வது பசியை; அவர்கள் செய்யும் தவம் அப்பசியை அன்ன தானத்தால் மாற்றுபவர்களுடைய தவத்திற்குப் பிற்பட் டதேயாகும்]

"சாதலின் இன்னாததில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

[மரணத்தைக் காட்டிலும் துன்பந் தருவது வேறொன் றில்லை; ஆயினும் கொடுக்க முடியாதபோது அம்மரணமும் இனிதாகும்]

என்பவை போன்ற பல நீதிகள் அடங்கிய திருக்குறளும்,

"......................நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்"

[தம்முடைய உண்மை யன்பர்கள் கொடுப்பாராயின் நஞ்சினையும் நாகரிகர் உண்பார்கள்]

"சென்சாந் தெறியினும் செத்தினும் போழினும்
நெஞ்சோர்ந் தோடா நிலைமை

[உடம்பின் மேல் சந்தனத்தை எறிந்தாலும் உடம் பைச் செதுக்கினாலும் பிளந்தாலும் மனத்தில் வேறுபா டுண்டாகாத சமநிலை]

"செய்தி கொன்றோர்க் குய்தியில்

[நன்றி மறந்தவர்களுக்குப் பிராயச் சித்தமே இல்லை] என்பன போன்ற நீதிகளைச் சொல்லும் வேறு பல நூல்களும் அடங்கிய தமிழருடைய பொக்கிஷத்தை யாவரும் வாரிக் கொண்டு பயன் படுத்த வேண்டாமா?

பகைவனுக்குப் பயந்து காட்டிலிருந்தபோது தன்பால் பரிசுபெற வந்த புலவனுக்குத் தன் கைவாளை நீட்டித் தன் தலையை அரிந்து சென்று பகைவனிடம் கொடுத்துப் பொருள் பெறும்படி சொன்ன குமண வள்ளலது வள்ளன்மையையும், தம்முடைய நண்பராகிய புலவர் இன்ன நாளில் வருவாரென்று கூறித் தான் உயிர் நீங்கும்பொழுது அவருக்கும் இடமொழிக்கச் செய்த கோப்பெருஞ்சோழனென்னும் அரசனுடைய நட்புணர்ச்சியையும், பசுவின் கன்று இறத்தற்குக் காரணமாகிய குற்றத்தை அறியாமற் செய்த தன் மகனைத் தேர்க் காலின் கீழ் இட்டுக் கொல்லத் துணிந்த சோழனது நீதி நிலைமையையும், தம்மைக் குத்திய பகைவனுக்குத் தீங்கு நேரா வண்ணம் செய்து பின் உயிர்விட்ட மெய்ப் பொருள் நாயனருடைய மன வலியையும் மற்றப் பாஷைகளைப் பேசுவோர் படித்து அறிந்து பாராட்டினல் அப்பொழுதாவது தமிழருக்கு ஓர் ஊக்கம் உண்டாகாதா?

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம், முதலிய காவிய ரத்னங்களை இந்தியர் யாவரும் ஆராய்ந்து ஆனந்த மடையும் நாள் வந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்!

நிலப் பகுப்பு

தமிழர் நிலங்களைப் பகுத்த பகுப்பும், காவிய கதியை வரையறுக்கும் இலக்கணங்களும் மற்றப் பாஷைகளுக்குப் புதியவை. தமிழ் நாட்டார் நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்தார்கள். மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி; காடும் காட்டைச் சார்ந்த இடமும் முல்லை; வேனிலால்

நீரற்றுப்போன மலையும் காடும் சேர்ந்த இடம் பாலை; வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம்; கடலும் கடலைச் சார்ந்த இடமும் நெய்தல். இவ்வைந்து நிலங்களுக்கும் தனித்தனியே தெய்வம், மக்கள், விலங்கு, பறவை, மரம், மலர், நீர்நிலை, தொழில் முதலிய வரையறைகள் உண்டு. பூமி சாஸ்திரம், தாவர சாஸ்திரம், பிராணி சாஸ்திரம், மனோதத்துவம் முதலிய பல சாஸ்திரங்களால் அறியப்படும் உண்மைகளுக்கு இவை பொருத்தமாக இருக்கின்றன.

சென்னை ஹைகோர்ட்டில் நீதிபதியாக இருந்து விளங்கிய டாக்டர் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் மதுரை நகர சபைத் தலைவராக இருந்த காலத்தில் அந் நகரைச் சார்ந்த சில இடங்களில் சில மரங்களை வைத்து வளர்க்கச் செய்தனர். முதலில் வைத்த மரங்கள் பட்டுப் போயின. தமிழ் நூல்களை அறிந்தவராதலின் அப் பெரியார் அப்பொழுது தமிழ் அகப்பொருள் நூல்களைப் படிக்கச்செய்து அந்த அந்த இடத்திற்கேற்ற மரங்கள் இன்னவை என்பதை யறிந்து அவற்றை வைக்கச் செய்த காலத்தில் அவை நன்றாக வளர்ந்தனவாம். இச்செய்தியை அவர்களே என்னிடம் சொல்லி யிருக்கிறார்கள். இதனால் தமிழ் இலக்கியத்திலுள்ள செய்திகள் இயற்கையோடு பொருந்தியிருத்தலை அறியலாம்.

அரசியல் முதலியன

நாட்டை ஆளும் முறை, நகரத்தின் அமைப்பு, பாதுகாப்பு, ஒழுக்கங்கள், தெய்வ வழிபாடு முதலியவைகளைப் பற்றித் தமிழ் நூல்களில் உள்ள செய்திகளைப் பார்த்தால் தமிழர் நாகரிக வாழ்வின் நிலை நினைக்குந்தோறும் வியப்பை உண்டாக்குகிறது. அரசன் குடிகளோடு கலந்து நாட்டு நன்மைகளைச் செய்வதும், அறிஞர்களுடைய சபையைக் கூட்டி நன்றாக ஆராய்ந்து காரியங்களைச் செய்வதும் ஆகிய செயல்கள் தமிழர் அரசாட்சியைச் சிறந்த நிலையில் வைத்தன. குடிகளுக்கு எந்த வகையிலும் துன்ப மில்லாத

அரசியல் ஏற்பட்டிருந்தமையால் தமிழர் வாழ்வு இன்ப வாழ்வாக இருந்தது; அதனுல் அரசனைத் தெய்வமாகக் கருதி வந்தனர். வைஷ்ணவ பக்தர்களுள் ஒருவராகிய நம் மாழ்வார், "அரசனைக் கண்டால் திருமாலைக் கண்டவன் போலாகின்றேன்" என்று ஒரு தலைவி சொல்வதாக அமைக்கின்ருர். அங்கங்கே நகரங்களிலும் ஊர்களிலும் இருந்த அதிகாரிகள் உலகமே பிறழ்ந்தாலும் தம் கடைமையைக் குறைவின்றி நிறைவேற்றி வந்தனர். அரசன் குடிகளின் சேவகனுக வாழ்ந்தான். புலவர்களுக்குள் ஒரு புலவனுகவும், வீரர்களுக்குள் ஒரு வீரனுகவும் ரஸிகர்களுக்குள் ஒரு ரஸிகனுகவும் ஏழை ஜனங்களுக்குள் ஓர் ஏழை மனிதனுகவும் இருந்து குடிகளுக்கு உயிரைப் போல் விளங்கினுன். இத்தகைய அரசியலைப் பற்றித் தமிழ் நூல்களிற் காணும் அரிய செய்திகள் நம்மை ஒரு கனவுலகத்திற்கு இழுத்துச் செல்கின்றன.

கலைகள்

தமிழ் வைத்திய நூல்கள் அருமையான விஷயங்களடங்கியவை. சித்த வைத்திய நூல்களென்று அவை வழங்கப்படும். சிற்பம் முதலிய கலைகளின் திறத்தில் தமிழ் நூல்களின் உதவியால் பல விஷயங்களை அறிந்து கொள்ளலாம். பிற்காலத்தில் ஸ்தல சம்பந்தமான இலக்கியங்களும் பிரபந்தங்களும் ஆயிரக்கணக்காகத் தமிழில் உண்டாகி யிருக்கின்றன.

புலவர்களின் ஒற்றுமையால் உண்டாகும் பயன்

பழைய தமிழ் நூல்களிலுள்ள அரிய சரித்திர விஷயங்களிற் பல இன்னும் விளங்காமல் இருக்கின்றன. பரந்து வளர்ந்த இந்திய நாகரிகம் ஒன்றுபட்டு நின்ற காலத்தில் இயற்றப்பட்ட அந் நூல்களைப் பரந்த அறிவோடு பார்க்கும்போது பல உண்மைகள் வெளியாகலாம். ஜாவா, கம்போடியோ, ஸையாம் முதலிய இடங்களிலுள்ள சிற்பங்களாலும் அங்கே வழங்கும் வரலாறுகளாலும் இது காறும் விளங்காத தமிழ் நூற் செய்திகள் பல விளங்குகின்றன.

இந்திய பாஷா பண்டிதர்களுள் ஒற்றுமை உண்டாகுமாயின் அவர்கள் இந் நூல்களைப் படித்தோ, மொழிபெயர்க்கச் செய்தோ அறிந்து கொண்டு ஆராய்ந்து பல விஷயங்களை விளங்கச் செய்யலாம். இனி, நாம் இயற்றப் புகும் இலக்கியங்களில் இந்த ஒற்றுமையைப் பயன்படுத்திக் கொள்வது நலமாகும்.

நம் கடமை

பிற்காலத்து நூல்களில் வரவர உயர்வு நவிற்சியும், ஸ்வபாவ விரோதமாகிய வருணனைகளும், அளவுக்கு மேற்பட்ட சிருங்காரமும், விரோத உணர்ச்சியை உண்டாக்கும் மத விஷயங்களும் புகுந்து ஒற்றுமைக்குப் பங்கம் விளைவித்தன. இனி நூல் செய்யப் புகுவோர் அவற்றை நீக்க வேண்டும்; பழைய நூல்களில் இருந்தால் அவற்றை இலக்கிய இன்பத்துக்காகப் பாதுகாத்துக் கற்றல் வேண்டும்.

புது இலக்கியங்கள் இயற்றுவதற்கு எவ்வளவோ துறைகள் இருக்கின்றன. பல பாஷைகளிலுள்ள விஷயங்களை அறிவதனல் இத்துறைகள் இன்னும் விரிவடையும். நாளடைவில் மனிதர்களுடைய வாழ்க்கை நிலை மாறுபடுகின்றது; அதற்கேற்பக் கொள்கைகளும் மாறுபடுகின்றன; அக் கொள்கைகளுக்கு ஏற்றபடி இலக்கியங்களும் நல் வழியில் மாறவேண்டியது இயல்பே யாகும்.

தங்கள் தங்கள் நாட்டினரின் உள்ளத்தை வசீகரிக்கும் இலக்கிய ஆசிரியர்களாகிய நீங்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள். உங்களுடைய பேரறிவின் துணையினல் பொதுவாகத் தென்னட்டாரும் சிறப்பாகத் தமிழ் நாட்டாரும் அறிய வேண்டிய பல விஷயங்கள் இருக்கின்றன. உங்களுடைய தேச பாஷைகளாகிய ஆறுகள் ஞானமாகிய சாகரத்தில் ஒன்று சேர்ந்து விளங்குகின்றன. இந்தப் பாரதீய ஸாஹித்ய பரிஷத்தின் மூலமாக உங்களுடைய ஞானச் செல்வம் இந் நாட்டினருக்குப் பயன்பட்டு நம் மிடையே பரந்த பாஷாபிமானத்தையும் அன்பையும் விருத்தி செய்வதாகுக! இறைவன் நமக்குத் தோன்ருத் துணையாக இருந்து நல்லருள் பாலிப்பானுக!

2. முற்கால இந்தியா

(கலை, காவியம், ஓவியம், இசை)

1. கலை

பழைய இந்தியாவில் வாழ்வுக்குரிய கலைகள் படிப்படியே பிறந்தன; வளர்ந்தன. அவை தொகையில் ஆறு; வகையில் அறுபத்து நான்கு. அவைகளிற் சிறந்து விளங்குவன சிலவே. அறம் மலிந்த அரசாட்சியில்—வறுமையற்ற ஆட்சி முறையில்-நல்ல கலைகள் அறிஞர் வாயிலாகப் பிறத்தல் இயல்பு. முற்கால இந்தியாவிலேயே சிறந்த கலைகள் தோன்றின எனில், நம் நாட்டின் தொன்மையை என்னென்று புகழ்வது?

முற்கால இந்தியரின் **கல்வி நிலை** எப்படி இருந்தது? அந்நாளில் ஏட்டுக் கல்வி பயில்வோர் தொகை சிறிதாகவும் தொழிற் கல்வி பெறுவோர் தொகை பெரிதாகவும் இருந்தன. அதனல் நாட்டிடை ஒழுக்கமும், அமைதியும் நிலவியிருந்தன. அந்நாளில் ஏட்டுக் கல்வி கட்டாயப் படுத்தப் படவில்லை. கட்டாய அரக்கன் அந் நாளில் தோன்றவேயில்லை. எதற்குங் கட்டாயங் கூடாது. ஏட்டுக் கல்வியே கல்வி என்று கருதல் தவறு. தொழிலுங் கல்வியே: இரண்டும் வாழ்வுக்குத் தேவை. ‘ஒன்று உயர்ந்தது—மற்ரென்று தாழ்ந்தது’ என்று கருதுவது அறியாமை.

சிலர் மனம் ஏட்டுக் கல்விமீது செல்லும்; சிலர் மனம் தொழிற் கல்வி மீது செல்லும். அவரை இக் கல்வி பயிலுமாறும், இவரை அக் கல்வி பெறு மாறும் வலியுறுத்துவது மூர்க்கமே யாகும். அவரவர் இயல்புக்குத் தக்க கல்வியை அவரவர் பெறுமாறு விடுவதே இயற்கை. கட்டாயமும் வலியுறுத்தலும் இயற்கையாகா; அவை செயற்கை. செயற்கை, துன்பம் விளைத்தல் இயல்பு.

முற்கால இந்தியர் இயற்கை நுட்பத்தை நன்கு தெளிந்தவர்; எப்பொழுதும் ஒழுக்கத்தையும் அமைதியையும் விரும்பியவர்; அவைகளை நாட்டிடை நிலைபெறுத்த முயன்றவர். அக்கால இந்தியப் பேரறிஞர் மன்பதையில் ஒழுக்கத்தையும் அமைதியையும் நிலை பெறுத்த இயற்கை வழி காண முயன்றபொழுது, இயற்கையன்னை தன் இன் முகங் காட்டி, 'என் படைப்பில் ஏட்டுக் குரியர் சிலராகவும் தொழிற் குரியர் பலராகவும் தோன்றுவர். என் படைப்பு வழி நின்று கல்வி பயில ஒழுக்கமும் அமைதியும் நிலவும்' என்று அருளியிருப்பள். அவள் வழி நின்று பண்டை மக்கள் கல்வி பயின்று வந்தமையால் அவர்கள் வாழ்வில் ஒழுக்கமும் அமைதியும் ஒன்றி நின்றன; போராட்டம் புகவில்லை. இந் நாளில் இயற்கை நோக்குக்கு மாறுபட்ட முறையில் கல்வி மக்களிடை வளர்ந்து வருதலால், எங்கணும் ஒழுக்கமும் அமைதியுங் குலைந்து போராட்டம் மிகுந்து வீறிடுகிறது.

2. காவியம்

காவியக் கலையில் இந்தியா பேர் பெற்றது. இந்தியக் காவியங்கள் மலையெனக் குவிந்து கிடக்கின்றன; கடலெனப் பரந்து கிடக்கின்றன. பழைய இந்தியக் கவிகள் இயற்கைச் சூழலிடை வாழ்ந்தவர்கள். அவர்தம் புலன்களும் மனமும் இயற்கையில் ஒன்றி இயற்கை வண்ணமானவை. இயற்கை மனத்தினின்றுஞ் சுரக்கும் எண்ணங்கள் இயற்கைப் பாக்களாகு மல்லவோ? இயற்கைப் படங்களே இயற்கைப் பாக்கள் என்பன.

இந்தியக் காவியத்துக்குக் கால் கொண்டவர் எவர்? வால்மீகி என்று இந்தியக் காவிய உலகங் கூறும். வால்மீகி இயற்கைப் பசுமையிடை—பறவைப் பாட்டிடை—வாழ்ந்தவர்; வளர்ந்தவர். அவரே பழைய இந்தியக் காவியத் தந்தை. அவர் வாயினின்றும் பிறந்த இராமாயணம், காவிய உலகுக் கோர் இலக்கியம்; வாழ்வுக் கோர் எடுத்துக்

காட்டு; பழம் பாரதத்தின் உயிரோவியம்; இயற்கை நிலையம்; அறத்தின் உறையுள்; சரித்திரக் கூடம்; காதலின் காதல்; வீரத்தின் வீரம். வால்மீகியின் வழி வழித் தோன்றிய சேய்கள் பல.

கி. மு. ஆறும் நூற்றாண்டிலேயே பதினைந்து வித இலக்கணங்கள் தோன்றின என்று சரித்திர ஆசிரியன்மார் கூறுகின்றனர். அந் நூற்றாண்டுக்கு முன்னரே பல நற்காவியங்கள் நாட்டிடை மலிந்திருத்தல் வேண்டும்! இந்தியக் காவிய உலகின் தொன்மையை என்னென்று கூறுவது?

3. ஓவியம்

ஓவியம் காவியம் போன்றதே. காவியமும் இயற்கைப் படம்; ஓவியமும் இயற்கைப் படம். இயற்கைக் கூறுகள் காவியத்தில் ஒருவித மாகவும் ஓவியத்தில் வேறு விதமாகவும் இறக்கப்படும். இறக்கப்படும் விதத்தில் இரண்டிற்கும் வேற்றுமையுண்டு. பொருட்பயனில் இரண்டுக்கும் வேற்றுமை இல்லை. ஓவியம் காவியமே; காவியம் ஓவியமே.

பாரதமாதாவே ஓர் ஓவியம். மலை முடியும், ஆற்றணிகளும், பசும் போர்வையும், நீலக்கடலுடையும் கொண்ட ஓரழகிய வடிவம் ஓவியமன்றோ? தாயின் ஓவிய இயல் அவள் கருவிடைத் தோன்றும் சேய்களிடத்திலும் அமைதல் இயல்பன்றோ!

இந்தியா ஓர் ஓவியக்கூடம். எவ்வோவியத்தை ஈண்டு எடுத்துக் காட்டுவது? பல தோன்றித் தோன்றி மறைகின்றன. ஒன்று நினைவில் உறுத்து நிற்கிறது. அஃது எது? அஃது **எல்லோரா.**

எல்லோரா, இமயக் கொடியில் பொலியும் ஒரு வெள்ளிய மலரின் ஓவியம். அவ் வோவியத்தைக் காண்போர், 'இது மனிதனல் செய்யப் பட்டதா? தெய்வத்தால் செய்யப் பட்டதா?' என்று ஐயுறுவர். ஒரு பெரும் பாறை, எல்லோரா ஓவியமாக அமைந்துள்ளது. அதை வடித்த ஓவி

யரே, அதைப் பார்த்துப் பார்த்து, 'இஃது என்னிடத்தி னின்று முகிழ்ந்ததா' என்று ஐயுறுவாராம். இதை யொட்டி ஓர் அற்புதக் கதையும் வழங்கப்படுகிறது. 'ஓவியத் தெய் வமே ஒரு சிற்பனுருக் கொண்டு எல்லோராவை அமைத் தது போலும்' என்று பேசுவோரு முளர்.

எல்லோராவை யொத்த ஓவியங்கள் பலப்பல பார தத்தை அழகு செய்கின்றன. பழைய இந்தியர் கோயில் களில் உயிரோவியங்கள் பல இன்னுங் காட்சி யளித்துக் கொண்டிருக்கின்றன.

பழைய இந்திய ஓவியங்களை எடுத்த அறிஞர், பள்ளி களில் பணந்தந்து படித்துப் பட்டம் பெற்றவரல்லர்; பிற நாடு சென்று தேர்ச்சி பெற்று வந்தவரல்லர். ஏட்டுப் படிப்பில் அவர் நாட்டஞ் செலுத்தியதில்லை. முன்னாளில் ஓவியக்கலை எப்படி வளர்ந்தது? அது வழி வழியே வளர்ந்து வந்தது. பழைய இந்திய ஓவியர் எவ்வழியில் காவியப் புலவோர்க்குக் குறைந்தவ ராவர்? முன்னுக. தொழிற் கல்வியின் மாண்பு என்னே! என்னே! மற்று முள்ள தொழிற் கல்வித் துறைகள் பலவும் வழிவழிப் பிறந்து வளர்ந்தனவே.

4. இசை

இந்திய இசைக்கு ஒப்பாகவோ உயர்வாகவோ வேறு ஒரு நாட்டு இசை இன்னும் தோன்றவில்லை; இனியும் தோன்ருதென்றே கூறலாம். இந்தியாவின் தட்ப வெப்ப இயற்கை நிலை இசை வளர்ச்சிக்குத் துணை செய்யும் நீர்மை யது. அதனல் இந்திய மக்கள் சரித்திரக் காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இசையின் எல்லையைக் காணும் பேறு பெற்ருர்கள்.

தற்போது பலதிறக் கலை வளரும் இடம் மேல்நாடு என்று எவருங் கூறுவர். ஆனல் அந்நாட்டிலும் இசைக் கலை இன்னும் ஓங்கி வளராது ஓரிடத்தில் தேங்கியே நிற்

கிறது. காரணம் என்னை? மேல் நாட்டின் இயற்கை நிலையே காரணம். மேல் நாட்டில் குளிர் அதிகம். குளிர் மிகுந்த நாட்டில் இசை வளர்ச்சி ஓரளவிலேயே நின்று விடும்.

மேல் நாட்டு இசையும் இசைக் கருவிகளும் புறக் கருவி காரணங்களில் மட்டும் நுழைந்து கிளர்ச்சி யுண்டு பண்ணும்; அகக் கருவி காரணங்களில் நுழைந்து அமைதி யுண்டு பண்ணு; சில சமயம் அவை வெறியை எழுப்பிவிடும்.

மேல் நாட்டின் இயற்கை, தத்துவங்களிலெல்லாம் ஊடுருவிச் சென்று அவைகளை ஆய்தற்கு மக்களை விடுவதில்லை. மேல் நாட்டார் பெரிதும் ஐந்து பூதங்களையே ஆய்ந்து ஆய்ந்து, அவைகளிலுள்ள சக்திகள் சிலவற்றைக் கண்டு கண்டு, அவைகளைப் போருக்கும் கொலைக்கும் பயன் படுத்திவருவது கண்கூடு. ஐம்பூதங்கட்கு மேலுள்ள தத்துவ நுட்பங்களைக் காணும் பேற்றை மேல் நாட்டுச் சகோதரர் பெறுவாராயின், அவர் பூத சக்திகளைத் தவறான வழியில் பயன் படுத்த முற்பட மாட்டார்.

* * *

தத்துவ மென்பது மாயா காரியம். மாயையே இயற்கை. இயற்கை, இறைவனது உடல் போர்வை. இயற்கையின் கூறுகளாகிய தத்துவங்கள் முப்பத்தாறு. அவை பிருதிவி முதல் நாத மீறு யிருப்பவை. இயற்கையின் எல்லை முடிந்த இடம் நாதம். நாதத்துக்கு அணித்தே ஒளிர்வது தனித்த இறை. நாதம் இறைக்கு மிக அணுக்கமாய் இறுதிப் போர்வையா யிருத்தலான், அதை 'நாதப் பிரம மென்றும் ஆன்றோர் கூறிப் போந்தனர். அந் நாதமே இசையின் மூலம்.

இசை மூல மாகிய நாதங் கண்டு இசையின் எல்லையைக் கண்டவர் முற்கால இந்தியர். குளிர் நாட்டவர் அவ்வளவு தூரஞ் செல்ல அந் நாட்டின் இயற்கை அவரை விடுவதில்லை.

நம் முன்னோர் நாதத்தில் இசை நுட்பங் கண்டவராதலின், அவரிடத்திருந்து ஏழிசையும், யாழ் குழல் என்ற இசைக் கருவிகளும் பிறந்தன. யாழுங்குழலும் விலங்குகளையும் வயப்படுத்தும் நீர்மையன; மனிதரிடத்துள்ள விலங்கியல்புகளைக் கல்வி யொழிக்குந் தன்மையன. கண்ணபிரானும் ஆனுயரும் இசை முழக்கியபோது பலவித விலங்குகளெல்லாம் தங்களை மறந்து - பகைமையை மறந்து - ஒன்ருகி, இன்பம் நுகர்ந்ததை நமது நாட்டு நூல்களிற் காண்க. தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் இயற்றிய 'கருணமிர்த சாகரம்' என்னும் நூலில் முற்கால இந்தியரின் இசை நுட்பங்கள் பேசப் பட்டுள்ளன.

நமது நாட்டு இசை, நாத தத்துவத்தினின்றும் தோன்றிய ஒன்ருதலானும், அத்தத்துவத்துக்கு மேல் வேறு தத்துவம் இன்மையானும், அதைக் கடந்து சாந்தத் தெய்வம் விளங்குதலானும், அது தன்னை முழக்குவோரையும் கேட்போரையும் சாந்தத்தில் திளைக்கச் செய்யும். எத்துணையோ யோகியர் எத்துணையோ யாண்டு, தவங் கிடந்தும் அடைய இயலாத சாந்த நிலையை, நமது நாட்டு நல்லிசை எளிதில் கூட்ட வல்லதெனில், அதன் மாண்பை விரித்து விரித்துக் கூறுதல் வேண்டுங் கொல்?

3. கிருமிகள்

ஓர் ஊரிலுள்ள பலரும் ஒரே காலத்தில் விஷபேதியால் பீடிக்கப்படுவதும், பெரியம்மையால் வாட்டப்படுத லும் பார்த்திருக்கிறோம். இந்நோய்களும் இவைபோன்ற பிளேக் முதலியவைகளும் ஒருவரிடமிருந்து மற்றொருவ ருக்கு எளிதாகப் பரவுகின்றன. இப்படிப் பரவக் கார ணம் என்ன என்பதைச் சமீபகாலம்வரை மருத்துவர்களும் விஞ்ஞான சாஸ்திரிகளும் அறிந்திருக்கவில்லை. சாமானிய மக்கள் இவைபோன்ற வியாதிகளுக்குத் தெய்வங்களைப் படைத்து அவற்றைத் தொழுதுவந்தனர்.

சுமார் அறுபத்தைந்து வருடங்களுக்கு முன்புதான் தொத்து வியாதிகள் சில நுண்ணிய உயிர்களால் ஏற்படு கின்றன என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வுயிர்கள் சாதாரணமான கண்ணுக்குத் தெரியா; பலமடங்கு பெரி தாக்கவல்ல பூதக்கண்ணாடியைக் கொண்டு பார்த்தால் இவற்றைப் பார்க்கலாம். இவை தாவரவருக்கத்தைச் சேர்ந்தவை; பிராணி வருக்கத்தைச் சேர்ந்தவையல்ல. இவைகளில் இருபதினாயிரத்தை வரிசையாக ஒட்டி அடுக்கி வைத்தால் ஓர் அங்குல நீளமாகும்.

இவை சர்வ வியாபியாகிய கடவுளைப்போல் எங்கு மிருப்பன. காற்று, நமது ஆகாரம், ஜலம், நமது குடல், தரை, குப்பைகள் முதலிய பலவிடங்களும் இவற்றிற்கு உறைவிடம். ஆயினும் இவற்றிற்கு ஆகாரமாகத்தக்க பொருள்களிருந்தால்தான் அவற்றின்மூலம் இவை விருத்தி யாகும். இவை எப்படி வளருகின்றன என்று விஞ்ஞானி கள் சோதனை செய்திருக்கின்றனர். கிருமிகளுக்கு ஆகார மாகத்தக்க ஒரு ஜவ்வு தயாரித்து அதில் சில கிருமிகளை வைத்துப் பூதக்கண்ணாடிக்குக் கீழ் வைத்துச் சோதித்ததில் ஒவ்வொன்றும் இரண்டாகப் பிரிவதும் மறுபடியும் வளர்ந்து பிரிவதும், இவ்வாறே இவை விருத்தியாவதும்

தெரிந்தது. ஒருநாளைக்குள் ஒரே கிருமியிலிருந்து சுமார் இரண்டுகோடி கிருமிகள் தோன்றக்கூடும்.

ஆயினும் கிருமிகள் யாவும் நமக்கு விரோதமானவை யல்ல. சிலவகைக் கிருமிகளால் நமக்கு நன்மையே. கிருமிகள் இல்லாவிடில் உலகம் மனிதர் வாழ வசதியற்றதாகும். இறந்த மனிதர் பிராணிகள், தாவரங்கள் எல்லாம் பலநாட்களுக்குப் பிறகு அழுகி மண்ணுடன் மடிந்து போவதைக் காண்கிறோம்; இறந்தவற்றின் உடல்களிலுள்ள பொருள்களைக் கிருமிகள் பிரித்துப் பிராணவாயு, உப்புவாயு, முதலிய மூலப் பொருள்களாக்கிவிடுகின்றன. பால் புளித்து மோராவது கிருமிகளாலேதான். நாம் சில தாவரங்களை நீரில் அழுகவைத்து நார் எடுப்பதும் கிருமிகளின் உதவியால்தான்.

நமக்கு விரோதமான கிருமிகள் பல வியாதிகளுக்கு மூலகாரணமாகின்றன. விஷபேதி, க்ஷயம், வயிற்றுக்கடுப்பு முதலிய பல வியாதிகள் கிருமி வகைகளால்தான் தோன்றுகின்றன. உடல் நலம் மிகுந்துள்ள மக்களிடமும் கிருமிகள் காணப்படுகின்றன. நளன்மீது பாயத் தருணம் பார்த்திருந்த சனிபகவானைப் போல அம்மக்களின் உடலில் பெருகுவதற்கு அக்கிருமிகளும் காலம் பார்த்திருக்கின்றன. அவர்களுடைய உடல்நலங் குறைந்த சமயத்தில் அவை பரவத்தொடங்கி வெவ்வேறு நோய்களைக் கொடுக்கின்றன. ஆகவே உடலைத் தளரச் செய்வதும், குடி, புகையிலை முதலியவற்றை உபயோகிப்பதும், அசுத்தமான காற்று ஆகாரம், இவற்றை உட்கொள்வதும் மக்கள் நோய்வாய்ப்படக் காரணமாகின்றன.

விஞ்ஞான சாஸ்திர விற்பன்னராகிய லூயி பாஸ்டர் என்பவர் பாரிஸ் நகரத்தில் மிகவும் பெயர்பெற்று விளங்கினர். தென் பிரான்ஸில் பிழைப்புக்கு வழியாயிருந்த பட்டு உற்பத்தித் தொழிலுக்கு இவர் நாளில் கேடுண்டாயிற்று. 1865-ஆம் வருடத்தில் பட்டுப் பூச்சிகளை அழிக்கும்

நோயின் காரணத்தை ஆராய்ந்து அறியும்படி லூயி பாஸ்டர் நியமிக்கப்பட்டார். அலாய் என்ற நகரத்திற்குச் சென்று அவர் தமது ஆராய்ச்சியைத் தொடங்கினர். முட்டை, கம்பளிப்புழு, கூட்டுப்புழு, பட்டுப்பூச்சி முதலிய எல்லாவற்றையும் பூதக்கண்ணாடியில் வைத்துச் சோதித்தார்.

நுண்ணிய பல கிருமிகள் இவற்றில் காணப்பட்டன. இவையே அந்நோய்க்குக் காரணமென்று பல சோதனைகளால் அறிந்தபின், அக்கிருமிகள் பரவும் வழிகளை ஆராய்ந்தார். நோய்ப்பட்ட புழுக்களுடைய மலங்களை மற்றப் புழுக்கள் விழுங்குவதாலும் அக்கிருமிகள் காற்ருல் பரவப்படுவதாலும் பட்டுப்புழு நோய் பரவுகின்றது என்று தம் பூதக் கண்ணாடியைக் கொண்டு நிரூபித்தார். பிறகு அந் நோயைத் தீர்ப்பதற்கு ஒரு வழியும் கூறினர். ஒரு பட்டுப்பூச்சி முட்டையிட்டவுடன் இறந்து போம்; உடனே அதைப் பூதக் கண்ணாடிக்குக் கீழ்வைத்துப் பார்த்து அதற்கு நோய் இருக்கிறதா இல்லையாவென்று அறியலாம். வியாதியுள்ள பூச்சியையும் அதன் முட்டைகளையும் கொளுத்திவிட்டு நோய்வாய்ப்படாத முட்டைகளையே வளரவிட்டால் அவ்வியாதி ஒடுங்கிவிடும். இப்படியாகப் பட்டு உற்பத்தித் தொழிலைக் காத்துப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பிழைப்பைக் கொடுத்தார்.

ஒரு நோய்க்குக் காரணத்தைக் கண்டுபிடித்தவுடன் பாஸ்டர் மற்ற நோய்களையும் ஆராய எண்ணங்கொண்டார். ஒவ்வொரு நோய்க்கும் ஒரு காரணக் கிருமி உள்ளதென்றும் அதைக் கண்டுபிடித்து அதன் குணங்களை அறிந்து அந்நோயை நீக்கலாமென்றும் லூயிபாஸ்டர் திடமாக நம்பினர்.

மண்ணீரல் சம்பந்தமான ஒரு காய்ச்சலால் பிரான்ஸில் ஆடுகள் பெருவாரியாக உயிர் துறந்தன. இந்த நோய்க்குக் காரணம் ஒருவிதக் கிருமி என்று சில விஞ்ஞானிகள்

அறிந்திருந்தனர். 1877-இல் பாஸ்டர் இந்நோய்க்கு மருந்து கண்டறிய முயற்சிக்கத் தொடங்கினர். இந்நோயின் கிருமிகளைத் தனியே ஒரு புட்டியில் ஏற்ற உணவுப் பொருள் கூடிய திரவத்தில் வளர்த்தார். நோயின் கிருமியைப் பலவகையில் ஆராய்ந்தும் அந்நோயை ஒழிக்க வழி காணப்படவில்லை. இச்சமயத்தில் பாஸ்டர் கோழிகளின் கழிச்சல் வியாதிக்குக் காரணமான கிருமிகள் வளரும் ஒரு திரவமானது நாள் செல்வதாலேயே வீரியம் குறைவதைக் கண்டார். இந்த வீரியம் குறைந்த திரவத்தை ஒரு கோழியின் இரத்தத்திற் சேரும்படி ஊசி போட்டால், அக்கோழிக்குக் கழிச்சல் நோய் வருவதில்லை என்று கண்டுபிடித்தார். அவ்வருடத்தில் தமது குறையைப் பழித்துவந்த விரோதிகளை அறிவுறுத்த ஒரு சோதனை செய்து காட்டினர். ஐம்பது ஆடுகளில் இருபத்தைந்திற்கு ஒருநாள் அவ்வியாதியின் வீரங்குறைந்த தொற்று நீரை (கிருமிகளுள்ள திரவம்) உடலுக்குள் புகுத்தினர். சில நாட்கள் கழிந்தபின் மிகவும் வீரியமுள்ள கிருமி நீரை எல்லா ஆடுகளுக்கும் புகுத்தினர். இரண்டு முறை குத்தப்பட்ட ஆடுகள் பிழைத்தன. இரண்டாம் முறை மட்டும் குத்தப்பட்ட இருபத்தைந்து ஆடுகளும் மாண்டன. ஊசி குத்தித் தொத்து வியாதிகளைக் குணப்படுத்தும் முறையை பாஸ்டரே முதன் முதலில் கண்டு பிடித்தார். முடிவாகப் பாஸ்டர் கண்டுபிடித்தது வெறி நாய்க்கடிச் சிகிச்சையே. இவ்வியாதியும் ஒரு கிருமியாலேதான் பரவுகிறது; பைத்தியம் பிடித்த நாய் மூலமாக அக்கிருமிகள் பரவுகின்றன. நாய்களின்மேல் பல சோதனைகள் செய்து, கடிபட்ட நாய்க்கு ஒருவிதத் தொற்று நீரை ஊசியால் ஏற்றினல் அவ்வியாதி தீர்ந்துவிடுகிறதென்று கண்டுபிடித்தார்.

பிறகு நாய்க்கடியால் துன்பப்படும் மக்களின் மீதும் சோதித்து இவ்வியாதியைக் குணப்படுத்தினர். இம்முறையைப்பற்றி எங்கும் விவாதங்கள் நடைபெற்றன. ஆயி

னும் வெறிநாய் கடியுண்ட பலர் இவரிடம் வந்து குண மடைந்து சென்றதால், இவருடைய விரோதிகள் அடங் கினர். இவர் புகழ் எங்கும் பரவிற்று. 1888-இல் பாரிஸ் நகரில் "**பாஸ்டர் ஸ்தாபனம்**" ஒன்று கட்டப்பட்டது; அவரு டைய வைத்திய முறை அங்கு இன்றும் கையாளப்பட்டு வருகிறது.

கிருமிகள் பலகோடிக் கணக்கில் இருப்பதும் தக்க இடங்களில் விரைவாய்ப் பரவுவதும் நமக்குப் பயத்தைக் கொடுக்கின்றன. ஆனால், நாம் செய்யவேண்டிய இரண் டொரு காரியங்களைச் சரிவரச் செய்துவிட்டால் கிருமிகளுக் குப் பயப்படவேண்டியதில்லை. நமது உடலே கிருமிகளை ஒழிக்க முயற்சிக்கிறது; நமது உடல் நலம் எத்துணை சிறந் திருக்கிறதோ அத்துணை தற்காப்புச் சக்தி அதற்கு உண்டு. ஆதலின், நல்ல உணவு, நீர், காற்று முதலியவற்றை உபயோகிப்பதையும் ஏற்ற அளவு வேலை செய்வதையும் அவசியமாகக் கொள்ளவேண்டும். சூரிய ஒளி இக்கிருமி களுக்குப் பரம விரோதி; சூரியனுடைய கிரணங்கள் வீட்டுக் குள் நுழையட்டும்; அவை கிருமிகளை அழித்து நன்மை அளிக்கும். நல்ல காற்றும் வீட்டுக்குள் வீசட்டும். ஜப்பா னியர்கள் கடிதத்தால் செய்த வீடுகளில், சூரிய கிரணமும் காற்றும் உட்புக வாழ்கின்றனர். அவர்களைப்போல வேறெந்த நாட்டினரும் நோயற்ற வாழ்க்கையை அவ் வளவு திருப்திகரமாக நடத்தவில்லை.

---

4. கரிகாலன் இறைமாட்சி

இனி, சோழன் கரிகாலன், செங்கோல் கைக்கொண்ட காலத்து இளம் பருவத்தன் எனினும், சமயத்திற்கேற்ற சாதுரிய புத்தியும், தீரா வழக்கையும் தீர்க்கவல்ல பேரறிவும், நடுநிலை தவறுமையும், பகை, கொலை, களவு கடிந்து சமாதான மேலிட நாடாட்சி செய்யும் வன்மையும் உடையவனாக விளங்கினான்.

ஒரு நாள் இவன் அத்தாணி மண்டபத்தே அரசு வீற்றிருக்கையில், தம்முட் பகைமை கொண்டு முறை வேண்டி வருவார் இருவர், இவனை நெடுந்தூரத்தே கண்டனர். இவன் சிறுவனாக இருந்தமையின், 'இவ்விளைஞனோ நாம் உரைக்கும் சொல்லின் முடிவு கண்டு நமக்கு முறை செய்ய வல்லான்' எனத், தம்மில் ஐயுற்று உரையாடி வருவாராயினர். அதனைக் குறிப்பானுணர்ந்த இவன், அயலிலிருந்த அறையில் விரைவிற் புகுந்து, நரை முடித்துவந்து முன் போலவே சிங்காதனத்து அமர்ந்திருந்தனன். அப்பொழுது அவ்விருவரும் அணுகி நோக்கியபோது, இவன் முதியோனாய் இருப்பது கண்டு மனமகிழ்ந்து தம் வழக்கினை உரைப்பாராயினர்.

அக்காலத்தில் அரசனுக்குதவியாக **ஐம்பெருங் குழு** எனப் பெயர் பூண்ட ஐந்து அவைக்களங்கள் இருந்தன. அவற்றுள், ஒருவர்க்குரிய உரிமையை ஏனையோர் கைக்கொள்ளா வண்ணம் பாதுகாத்தற் பொருட்டு, நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற, ஜனப்பிரதிநிதிகளாகிய **மாஜனங்களும்**, மத சம்பந்தமான சடங்குகளை நிறைவேற்றும் குருக்களாகிய **பார்ப்பாரும்**, அரசனும் குடிகளுமாகிய இவர்களின் சுகாதாரத்திற் கேற்றவைகளை எல்லாம் உற்று நோக்கும் **மருத்துவரும்**, நன் முகூர்த்தம் குறித்தலும், தெய்வத்தாலாவது மக்களாலாவது பின்னே நிகழும் தீமைகளை, உற்பாதத்தால், முன்னறிந்து காத்தலும் செய்யும் **நிமித்**

தரும் அரசிறைப் பொருளின் வரவு செலவுகளைக் கவனிப் போரும், அரசற் குறுதி சூழ்வோரும் மன்றத்திலிருந்து நீதி செலுத்துவோருமாகிய **அமைச்சரும்** குழீஇ இருப்பர். அரசனே, எல்லாக் காரியங்களையும் தானே செய்தற்குப் பெரிதும் உரிமை யுடையவன் எனினும், இவ் வைம்பெருங் குழுவினேடு ஆலோசித்தும், நல்லிசைப் புலவரைத் துணை கொண்டும் அரசியல் நடாத்தும் வழக்கிருந்தது. ஆனல், இவ்விஷயத்தில் இவன் எவரோடும் உசாவிடாது; அம்முதி யோர் சொல்லிய சொற்களை நன்கு ஆராய்ந்து, அனுபவ முதிர்ந்த நீதிபதியைப்போல, எவரும் வியந்திடுமாறு முறை செய்தனன்.

இவன் காலத்தில், காவிரிப்பூம் பட்டினத்தில், பல வகைப்பட்ட கோயில்களும், அமண் பள்ளிகளும், பௌத்த மடங்களும் பிறவும் இடையூறின்றி விளக்கமுற்றிருந்தமை அறியக் கிடத்தலால், தமது ஆட்சிக்குட் பட்டவர்களைத் தாம் கைக்கொண்ட கொள்கை ஒன்றையே அனுட்டிக்கு மாறு தண்டிக்கும் கொடுங்கோல் அரசரைப் போலாது, இவன் தன்கீழ் வாழ்வார் எவரும் தங்கள் தங்கள் மனத் திற்கினிய சமயநெறியைச் சார்ந்தொழுகும் உரிமையை அளித்திருந்தனன் என்பது வெளியாதல் காண்க.

இன்னும், இவன்கீழ்க் குடிகள் மருவூர்ப் பாக்கத்தில் வாணிகங் காரணமாக வந்து குடியேறிய சோனகர், சீனர், சாவகரை உள்ளிட்ட புறநாட்டு மக்களோடு பகை சிறிது மின்றிக் கலந்துறவாடிக், கொலை கடிந்து, களவுநீக்கி, நடு நிலை தவருமல் வாய்மைமொழிந்து வாழ்ந்திருந்தனர் என் பது இனிது விளங்கிக் கிடத்தலால், 'அரசன் எவ்விதம் குடிகளும் அவ்விதம்' என்பதற் கேற்ப, குடிகளின் ஒழுக லாறு கொண்டு இவன் தன்மை உய்த்துணரக் கிடத்தல் காண்க.

இவ்வாறு, இவன் நீதிதவருது அரசாட்சி புரிந்து வந்த மையின், குடிகள் அதிகரித்தனர். குடிகள் அதிகரிப்பவே,

நாட்டில் இடம் போதாதாயிற்று. ஆகவே, காடுகளை யெல்லாம் வெட்டி, அக்காடுகளிருந்த இடங்களிலெல்லாம் நாடுகளை உண்டுபண்ணினன். நீர் நிலைகள் பலதொட்டு, நாட்டில் வளம் பெருக்கினன். கோயில் எடுத்தனன். ஞாயிலொடு மதிலெழுப்பி நகர்க்கு அரண் அமைத்துக் குடிகளை இடங்கடோறும் நிறுத்தினன்.

இவ்வண்ணமாக நாட்டிற்கு நலம் புரிந்து வருகின்ற கரிகாலன், காவிரிநதிப் பெருக்கால் உண்டாகும் தீமையை மாற்றுதற்கும், வேளாண் வாழ்க்கையை விருத்தி செய்வதற்கும் யாது செய்வதென ஆராய்வானயினன். ஆராய்ந்துழி, இவ்வியாற்றிற்கு இருமருங்கினும் கரை அமைத்தலை அல்லது வேறு வழி இல்லை எனத்தேர்ந்தனன். உடனே, இந்த நதி எந்த எந்த ஊர்வழியாகச் செல்கின்றதோ, அந்த அந்த ஊர் அரசர்க்கெல்லாம் கரை கட்டுவதற்குத் திருமுகம் விடுத்துப், பங்கு அளந்து கொடுக்க உத்தரவு செய்தனன். இவ்வாறு அளந்து கொடுக்கப்பட்டவர்களில், **பிரதாபருத்திரன்** என ஓர் அரசனும் இருந்தான். இவனும், மற்றைய மன்னரும், இலங்கை நகரத்துச் சிறைகளும் அரசன் ஆணையை மேற்கொண்டு கரைகட்டுவாராயினர்.

இவ்வாறு மன்னரெல்லாம் தனது ஆணையை மேற்கொண்டு காவிரி நதியின் கரையைக் கட்டி முடித்தபிறகு, கரிகாலன், பற்பல வாய்க்கால்களையும், வடிமதகுகளையும் அமைத்திட்டுத், தண்ணீரை அழிவுறுமற் பாதுகாத்து, வேளாண் வாழ்க்கையைப் பெருக்கினன். பெருக்கவே, விதைத்த ஒன்று ஆயிரமாக விளைந்திட நாடு வளம்படுவதாயிற்று. எகிப்து நாட்டை நீல (நயில்) நதியின் நன்கொடை என்றுற்போலச் சோழநாட்டைப் பொன்னி நதியின் நன்கொடை யெனப் புலவர் புகழ்ந்துரைப்பாராயினர். விவசாய விருத்திக்கு வேண்டியவைகளைச் செய்து, நாட்டை வளம் படுத்திய இவனுக்கு நன்றி செலுத்தும் கடப்பாடு கொண்டனர் குடிகள். அவர்கள், தாம், கொண்ட

நன்றிக்கு அறிகுறியாக, இவனைக் 'கரிகால்வளவன்' எனலை ஒழித்துக், 'கரிகாற் பெருவளத்தான்' என்று அழைப்பாராயினர். தம் நாடு வளம் எய்துவதற்கு ஏதுவாயிருந்த காவிரியைப் 'புண்ணிய நதி' எனவும் 'பொன்னி' எனவும் கொண்டாடினர். இப்பொன்னி நதியால் வளம் மல்கிய சோணாட்டை அரசு புரிந்தமையின், சோழர்கள், 'வளவர்' எனப் பெயர் பெற்றார்கள்.

---

5. கனவும் கதையும்

இரவு சுமார் பத்து மணி இருக்கும். உலகத்தை ஆளுகிற அமைதியில் ஊரொலிகள் அடங்கிவிட்டன. நிலவு வெள்ளத்தில் எல்லாம் தோய்ந்து கிடந்தன. தூரத்தில் ஒரு கோயிலின் வாசலில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. நெருங்க நெருங்க ஒரு பெருங்கூட்டம் கடல் போலப் பரந்து கிடப்பதைக் கண்டேன். விருத்தர்கள், பாலர்கள், ஆடவர், பெண்டிர், சிறுவர் சிறுமியர் எல்லோரும் ராமர் படத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு பாகவதர் பொழிகிற கதாமிருதத்தைச் செவியாரப் பருகிக்கொண்டிருந்தனர்.

அசோக வனத்திற் சாம்புகின்ற சீதையின் ஓவியம் புகையுண்டது போன்ற உருவத்தை வர்ணித்தார் பாகவதர். ராமனிடத்தில் அனுமான் சீதையின் நிலையைப் பற்றிக் கூறுகிற விஷயத்தை அவர் விஸ்தாரமாகச் சொல்லிக்கொண்டே போனர்; "பனி சோர்ந்து அழகு உதிர்ந்த பத்மம் போலத் தேவி இருந்தாள்; சோகத்தில் தன் கணவனையே சிந்தித்துக்கொண்டிருந்தாள்" என்ற கதியில் போகும் வால்மீகியை விளக்கும் பாகவதரின் ஞாபகத்திற்குக் கம்பராமாயணத்திலிருந்து ஒரு பாடல் வந்தது. அவர் தம் இன்னிசைக் குரலில் அதை உருக்கமாய்ப் பாடினர்;

" விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீ ரிலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்;
இற்பிறப் பென்ப தோன்றும் இரும்பொறை யென்ப தோன்றும்
கற்பெனும் பெயர தோன்றுங் களிநடம் புரியக் கண்டேன் "

அப்பாட்டாகிய அலை ஒவ்வோர் உள்ளக்கரை மீதும் மோதிற்று. அவ்வலை மீது சீதையின் சோக உருவம் மிதந்து வந்தது. பாகவதர் கண்களிலிருந்தும், கூடியிருக்கிற ஜனங்களின் கண்களிலிருந்தும் வழிந்த நீர்த்துளிகள் நிலவில் முத்துப்போல விழுந்தன.

அச்சமயத்தில் அவ்வழகிய பாட்டில் என் மனம் ஈடுபடவில்லை. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்ட காவியம் இன்றும் பல்லாயிரக் கணக்கான உள்ளங்களை உருக்கி வருகிறதே என்ற சிந்தையில் என் மனம் ஆழ்ந்தது. மலையும் ஆறும் போல எக்காலத்திலும் இம் மகா காவியம் விளங்கப் போகிறது என்று சான்ரோர் கூறிய மொழியும் என் மனத்தில் ஒலித்தது.

என் கண்முன் ஒரு வனம் விரிந்தது. அவ்வனத்தில் இரண்டு அழகுள்ள சகோதரர்கள் தபோதனர்களுக்கு மத்தியில் யாழ் இசைக்கு இணங்க மதுரமான குரலில் வால்மீகி இயற்றிய ராம கதையைப் பாடிக்கொண்டிருந்தனர். கேட்டோர் உள்ளங்கள் தேனித்தன. உவகை வெறியில் தங்கள் தங்களிடம் இருந்த பொருள்களை ரிஷிகள் வெகுமதியாக அச்சிறுவர்களுக்கு அளித்தனர். முனிவர்களில் ஒருவர் எழுந்து அவர்களுக்கு மரவுரிகள் தந்தார்; மற்ரெருவர் அவர்களுக்குக் கலசங்கள் ஈந்தார்.

இதே கானவிருந்து ராமனுடைய அரண்மனை மண்டபத்தில் நடந்தது. அரணியத்தில் மலர்ந்த ஓர் அற்புத காவியம் வேந்தர் அவைகளிலும் போய் மணங் கமழ்ந்தது போலும்! நைமிசாரண்யத்தில் பன்னிரண்டு வருஷ ஸத்ர யாகத்திற்காகக் கூடியிருந்த மகரிஷிகளின் மத்தியில் சூதர் பாரதக் கதையைச் சொல்லுகிற காட்சியும் என்முன் வராமல் இல்லை. கதையின் சுவையிலே யாகத்தின் கடுமையை அவர்கள் மறந்தனர். **வாழ்வின் கசப்பை நீக்கி மனத்தில் இன்பத்தைப் பெய்கிற இயல்பு கதைக்கு இருக்கிறது** என்பது உண்மையன்ரே?

நம் நாட்டு மஹா காவியங்களை நினைத்தபோது என் மனம் கடல்களையும் தாண்டிக் கிரேக்க தேசத்தில் திரிந்தது. அங்கே ஒரு தீவில் கடற்கரையிலே ஒரு கம்பீர புருஷர் வீற்றிருப்பதைப் பார்த்தேன். அவர் முகத்தை நோக்கியபொழுது எந்த எந்தச் சிந்தா சாகரங்களின்மீது

அவர் மனம் நீண்ட பிரயாணங்கள் செய்ததோ என்ற எண்ணம் என் மனத்தகத்தே பாய்ந்தது.

அந்தக மஹாகவியாகிய **ஹோமர்** கடலின் கானத்தோடும் காற்றின் நல்லிசையோடும் இயையப்பாடிய இலியடும் (Iliad), ஆடிசியும் (Odyssey) அரணியத்தில் தோன்றிய இராமாயணம் போலவே முதல் முதல் ஏகாந்தத்தில் ஒரு தனித்தீவில் உள்ளத்தில் வெள்ளம்போலப் பெருகியிருக்கவேண்டும். எத்தனை பிரபுக்கள் மாளிகைகளில், எத்தனை வேந்தர் அரண்மனைகளில் அவைகள் பாடப்பட்டிருக்கும்! எத்தனை பேர்கள் அவைகளைக் கேட்டு இன்புற்றிருப்பார்கள்! ஆண்டுகள் பல தேய்ந்து போனால் என்ன? இன்னும் கற்றோர் இதயத்தை அவை களிக்கச் செய்கின்றன. எல்லா ஆசைகளையும் விட்டுக் காட்டில் திரிகிற ரிஷிகளுக்கும் கதைகேட்கிற ஆசை போகவில்லை. இவ்வுலகப்பற்றை விட்டாலும், இடுகாட்டிற்கு அப்பால் இலங்கும் அழியா உலகைப்பற்றி அவர்கள் கனவு காண்கிறார்கள்; அக்கனவைக் கதையில் சமைக்கிறார்கள். உலகப் படைப்பில் மனிதன் தோன்றியது முதல் அவன் கதை சொல்ல ஆரம்பித்துவிட்டான். உலகம் பிறந்த விதத்தைப் பற்றிச் சொல்லுகிறான்; தான் வந்த விதத்தைப்பற்றி மொழிகிறான்; இனி அடையும் உம்பர் நாட்டைச் சித்திரித்துப் பார்க்கிறான். கனவும் கதையுமாயுள்ள வாழ்விலே அவன் மற்றொரு கனவு காண்கிறான்; மற்றொரு கதை கட்டுகிறான். தன் கற்பனைத்தறியில் கனவுகளையும் கதைகளையும் நெய்வதே மனிதன் தொழிலாய்ப் போய்விட்டது.

வனம் வனாந்தரங்களில் மனிதன் வேட்டையாடி ஜீவனஞ் செய்தகாலத்தும் இரவில் விலங்குகள் நெருங்காவண்ணம் ஒரு கொழுந்தீயை மூட்டி அதைச்சுற்றி மற்ற வேடர்களோடு உட்கார்ந்துகொண்டு நக்ஷத்திரம் தெளிந்த நீண்ட இரவைக் கதையில் போக்கினான்; இப்பொழுதும் போக்குகிறான்.

பாட்டி குழந்தைக்குப் பால் நிலவு காட்டிப் பழங் கதை சொல்லி அமுது ஊட்டுகிறாள்.

“பாட்டி, பாட்டி! ஓர் கதைசோல்ல மாட்டாயா?
படுத்துக்கோள் வோமேன்று சோல்லிவிட்டால்
நீட்டி இனித்த கதைகளை எத்தனை
நேரம்சோல் வாள்! அதில் ஈடுபட்டால்
வீட்டில் இருக்குமேங் கள்மனம் காட்டிலும்
விண்ணிலும் ஓடி விளையாடும்.”

காதற் கனவில் உள்ளம் வெதும்புகின்ற தலைவியை ஆற்றும் பொருட்டுச் செவிலி புனைகதை சொல்லுகிறாள்.

அடுப்பங்கரையில் ‘கம்’ என்று கணப்புக்காயும் கிழவனையும், விளையாட்டில் கொம்மாளம் போடும் சிறுவனையும் கதை ஒரு கணத்தில் கவர்ந்து விடும்.

இவ்வுலகச் சிறையிலிருந்து வெளியிலே பறந்து செல்லக் கதை ஒரு கருவியாக இருக்கிறது; அல்லது கதையின் மூலம் ஒவ்வொரு கலைஞனும் வாழ்வின் தத்துவத்தைத் தான் கண்டபடி வெளியிடுகிறான்; கதை மட்டுமா? எல்லாக் கலைகளுடைய நோக்கங்களும் இவைகளில் ஏதாவது ஒன்றைத் தழுவிக்கொண்டு போவனவே.

கிரேக்க தேசத்தில் ஒரு குட்டைக்கு ஒரு கதை, ஒரு சுனைக்கு ஒரு சரித்திரம். நம் நாட்டிலும் அப்படியே. கங்கைக்கு ஒரு புராணம், கடலுக்கு ஒரு புராணம் நாம் புனைந்திருக்கிறோம்.

மனிதன் உலகத்தில் உள்ளவரையில் கனவு காண்பான்; கதை சொல்லுவான். ஏனெனில் கதை கருவிலே ஊறியது: ரத்தத்தில் கலந்தது; கருத்தில் சதா ஒலிக்கக் கூடியது.

———

6. கூட்டுறவுப் பண்டசாலைகளின் சிறப்பும் அவசியமும்

கடந்த ஒரு நூற்றாண்டாகப் பொருளாதார உலகில் பெரிய மாறுதல்கள் உண்டாகி வருகின்றன. நம் நாட்டைவிட மேல் நாடுகளில் இம் மாறுதல்கள் இன்னும் அதிகம். பொருளுற்பத்தி முறையில் பெரிய மாறுதல்கள் உண்டாவதன்முன் பல பண்டங்களையும் பல தொழிலாளிகளே செய்து வந்தார்கள். அதனால் வரும் இலாப நஷ்டங்களை அவர்களே அனுபவித்து வந்தார்கள். இப்போது அந்தப் பண்டங்களெல்லாம் பெரிய பெரிய தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன. பொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கும் அவைகளை வாங்கி அனுபவிப்பவர்கட்கும் இடையே நெருங்கிய சம்பந்தம் இல்லை.

சாமான் வாங்குகிறவர்கள் சில்லறைக் கடைகளில் வாங்குகிறார்கள். சில்லறைக் கடைக்காரர்களோ, மொத்த வியாபாரிகளிடம் வாங்கி விற்கிறார்கள். மொத்த வியாபாரிகள், பொருள் உற்பத்தி செய்வோரிடம் வாங்குகிறார்கள். சில சமயங்களில் ஒரு பொருள் அதனை உற்பத்தி செய்வோரிடமிருந்து அதை அனுபவிப்பவர் கைக்கு வருவதற்குள் அநேக வியாபாரிகளில் ஒவ்வொருவரும் சிறிது சிறிது இலாபம் வைத்துக்கொண்டாலும், மொத்தம் அதிகமாகி விடுகிறது. பெரும்பாலும் சில்லறைக் கடை வைத்திருக்கும் வியாபாரிகள் அதிக இலாபத்தையே விரும்புகின்றார்கள். கடைக்காரர்கள் தங்களுடைய சிரமத்திற்குக் கொஞ்சம் ஊதியம் பெற விரும்புவது நியாயமானதே. ஆனால், அவர்கள் அடையும் இலாபம் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு எவ்வளவு இருக்கலாமோ அதைவிட மிகவும் அதிகமாகவே இருக்கின்றது எனப் பல தேசங்

களிலும் பண்டங்களை வாங்குவோர் எண்ணவேண்டி இருக்கிறது. பொருள் உற்பத்தி செய்வோருக்கும், அவைகளை உபயோகிப்போருக்கும் இடையில் எந்த நடுவர்களும் இல்லாவிட்டால், அநேகமாக எல்லாச் சாமான்களையும் குறைந்த விலைக்கே பெறமுடியும் என மக்கள் எண்ணலானார்கள். எனவே, வியாபாரிகளின் உதவி இல்லாமல் சாமான்களைத் தாங்களே வாங்குதல் பல வகையிலும் நல்லது என உறுதிகொண்ட சிலருடைய முயற்சியே இப்போது கூட்டுறவுப் பண்டசாலைகள் என்னும் உருவம் பெற்று விளங்குகிறது. பண்டங்களை நேரே வாங்கும்போது, பலர் சேர்ந்து வாங்கலாம். பலர் சேர்ந்து அதிகமான அளவு பண்டங்களை வாங்கும்போது குறைந்த விலைக்கு வாங்கவும்கூடும். நல்ல சாமான்களாக வாங்க முடியும். முன் வியாபாரிகளைச் சேர்ந்த இலாபமெல்லாம், இப்பொழுது பண்டங்கள் வாங்குவோரையே சேரும். இதுவே கூட்டுறவுப் பண்டசாலைகள்தோன்றியதன் முக்கிய காரணம்.

அநேகமாக ஏழைகளே தாங்கள் வாங்கும் சாமானுக்கு அதிகவிலை கொடுக்கும்படி நேரிடுகிறது. ஏழைகளும் தொழிலாளிகளுமே சில்லறைக் கடையிலே தங்கட்கு வேண்டிய சாமான்களை வாங்குகிறார்கள். ஒரு மாதத்திற்கு வேண்டிய சாமான்களைக்கூட மொத்தமாக வாங்க அவர்கட்கு முடியாது. பெரும்பாலும் ஒரு நாளைக்கு, ஒரு வாரத்திற்கு வேண்டிய சாமான்களை அவர்கள் வாங்குகிறார்கள். அந்தச் சாமான்களுக்குச் சில்லறைக் கடைக்காரர் வைத்ததுதான் விலை. அநேகமாக அந்தக் கடைக்காரர் வைத்து விற்கும் சாமான்கள் மிகவும் மோசமானவை. சில்லறை வியாபாரிகள் தாழ்ந்த சரக்குகளை உயர்ந்த விலைக்கு விற்று ஏழைகளின் ஜீவிய ஆதாரத்தை உறிஞ்சிவிடுகிறார்கள். இன்னும் கடனுகச் சாமான் வாங்குவதென்றாலோ, கேட்கவேண்டுவதில்லை! விலை உயர்ந்துவிடும்;

சாமானுடைய தரம் இன்னும் குறைந்துவிடும். இக்கஷ்டத்தினின்று முக்கியமாக ஏழைகளை விடுவிக்க எழுந்துள்ளது கூட்டுறவுப் பண்டசாலையாகும்.

பண்டம் வாங்குவோர்தாம் இக்கூட்டுறவுப் பண்டசாலைகளை நடத்துகின்றனர். 'வியாபார நுட்பங்கள் தெரியாத கௌரவ உழைப்பாளிகள், இக்கூட்டுறவுப் பண்டசாலைகளை எப்படிச் சிக்கனமான முறையில் திறமையாக நடத்த முடியும்?' என்று சிலர் நினைக்கக்கூடும். 'இலாபத்தைக் கருதி உழைக்காத சிலர் இந்தப் பண்டசாலைகளை நன்ருக நடத்துவதில் எப்படி அக்கறை எடுத்துக்கொள்ளக்கூடும்?' எனச் சிலர் கருதலாம். ஆனல், நடைமுறையில் இப்பண்டசாலைகள் மிகச் செவ்வையாகவே வேலைசெய்து வருகின்றன. ஏனெனில், இப்பண்டசாலைகட்குத் தனிப்பட்ட சில வசதிகள் இருக்கின்றன.

இப்பண்டசாலைகள் சாமான்களை உறுப்பினர்கட்கே விற்கின்றன. பண்டசாலையின் உறுப்பினர்கள் அங்கேயே எல்லாச் சாமான்களும் வாங்குவதால், யாராவது வாங்க வருவாரோ, வரமாட்டாரோ என்னும் கவலை இதை நடத்துவோருக்குச் சிறிதும் இல்லை. மாதந்தோறும் அங்கத்தினர் இவ்வளவு வாங்குவர் என்னும் ஒரு திட்டந்தெரியுமாதலால், அதிகமாகக் கட்டுக்கடைச் சரக்குத் தங்குவதற்கு இடமில்லை. சாதாரணக் கடைகளைப் பலருடைய கண்ணில் படும்படி பெரிய இடத்தில் பெரியதெருவில் வைக்கவேண்டியிருக்கிறது. சாதாரணக் கடைகளுக்கு விளம்பரம் அவசியம். ஆகையால், அவைகள் இக்காரியங்களுக்காக அதிக பொருள் செலவிடவேண்டி யிருக்கிறது. கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கோ, இந்தவகையில் செலவே இல்லை. ஒரு சந்தில் வைத்தாற்கூட அங்கத்தினர்கள் வந்துசேர்ந்துவிடுவார்கள். அங்கத்தினரல்லாத மற்றவர்கட்கு விளம்பர மூலமாகத் தெரிவிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சாதாரணக் கடையை ஒருவர் மற்ருருவருக்குச் சிபார்சு

செய்யமாட்டார். ஆனால், கூட்டுறவுப் பண்டசாலையையோ ஒருவர் தம்நண்பர் பலருக்கும் சிபார்சு செய்ய விரும்புவர்.

சாதாரணப் பண்டசாலைகளில் கடன் வியாபாரமும் நடக்கிறது. பலருக்குக் கடன் கொடுக்கும்போது, சிலர் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் மோசம் பண்ணவும் கூடும். இதுபோலச் சில கடன் கொடுக்கப்படாமல் போனாலும் தங்களுக்கு நஷ்டம் உண்டாகாதவாறு, கடன் வியாபாரத்திலெல்லாம் சாமான்களை அதிக விலைக்குத்தான் அந்த வியாபாரிகள் கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுப் பண்டசாலையில் இவ்வகையான அதிகவிலையே இல்லை. ஏனென்றால், கூட்டுறவுப் பண்டசாலைகளில் நடைபெறும் வியாபாரம் எல்லாம் ரொக்க வியாபாரமே; கடன் வியாபாரம் இல்லவே இல்லை. ஆகவே, கூட்டுறவுப் பண்டசாலையின் சாமான்கள் அதிக விலையுடையவை அல்ல.

தனிப்பட்ட மனிதன் கடைவைத்து நடத்தினால், எல்லா வேலைக்கும் சம்பள ஆட்களையே வைக்கவேண்டி இருக்கிறது. கம்பெனி முறையில் வைத்து நடத்தினாலோ மானேஜர் முதலியவர்கட்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆனால், கூட்டுறவுப் பண்டசாலைகளிலோ, பெரும்பான்மையான வேலைகள் ஊதியத்தை விரும்பாதவர்களால் செய்யப்படுகின்றன. அநேகர் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்ய முன் வருகின்றனர். ஒரு பெரிய உபகாரமான இயக்கத்துக்கு வேலை செய்யும்போது குறைந்த ஊதியம் கிடைத்தால் போதுமென்று பலர் எண்ணுகின்றனர். பல சிறந்த அறிவாளிகள் கூட்டுறவு ஸ்தாபனங்களில் மிகக் குறைந்த சம்பளம் பெற்றுக்கொண்டு ஊக்கத்துடன் உழைத்து வருகிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்துவந்த ஒரு பெரிய அறிவாளரை ஒருவர் கேட்டபோது, "நான் அதிக சம்பளத்தை விரும்பவில்லை. என்னை என்னுடன் வேலை செய்பவர்கள் பெரிதும் மதிக்கிறார்கள். என்னிடம் அதிகாரம் இருக்கிறது,

எனக்குக் கூட்டுறவு இயக்கத்தின் இலட்சியத்தில் முழு நம்பிக்கை உண்டு. இவைதாம் என்னை முற்றிலும் திருப்தி அடையச் செய்கின்றன," என்று சந்தோஷமாகப் பதில் கூறினாராம்.

ஒவ்வொரு சங்கமும் பண்டசாலையும் அதற்கு வேண்டிய சாமான்களைத் தனியே வாங்குவதில்லை. இந்தக் கூட்டுறவுப் பண்டசாலைகள் பல சேர்ந்து, கூட்டுறவு மொத்த வியாபாரப் பண்டசாலைகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. இந்த மொத்தப் பண்டசாலைகள் சாமான்களை அதிகமாக வாங்குவதால் குறைந்த விலைக்கு வாங்க முடிகிறது. மேலும் மொத்தப் பண்டசாலைகள் தாங்களே தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நடத்திப் பல கூட்டுறவுப் பண்டசாலைகட்கும் வேண்டிய சாமான்களைக் கொடுக்கின்றன. உதாரணமாக இங்கிலாந்தின் மொத்தப் பண்டசாலை, தனக்கு வேண்டிய தேயிலை, காப்பிக் கொட்டை இவைகளைத் தனக்குச் சொந்தமான தேயிலை காப்பித் தோட்டங்களிலேயே உற்பத்தி செய்து கொள்ளுகிறது. இந்தத் தொழிற்சாலையில் செய்யும் சாமான்களையே பல பண்டசாலைகளும் வாங்கி விற்கின்றன.

இந்தப் பண்டசாலைகளில் சாமான்களை வாங்குவதனால் நம்மை யறியாமலே நாம் பணத்தைச் சேர்க்கிறோம். எப்படி என்றால், இப்பண்டசாலைகள் நாம் வாங்கும் சாமான்கள் எவ்வளவெனக் கணக்கு வைத்துக்கொள்கின்றன. ஆறு மாதங் கழித்தோ, ஒரு வருஷங் கழித்தோ, பண்டசாலையின் கணக்குப் பார்க்கும்போது வருகிற இலாபத்தைச் சாமான் வாங்கிய அளவுக்கேற்பப் பங்கிட்டுக் கொடுப்பதால், நமக்கு ஒரு மொத்தமான தொகை கிடைக்கிறது.

இந்தக் கூட்டுறவுப் பண்டசாலைகள் ஆங்காங்குத் தோன்றி இருப்பதால், அந்த இடங்களிலெல்லாம் ஏனைய வியாபாரிகளும் தங்களுடைய சாமான்களைக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். அவ்விதத்தில் இப்பண்டசாலை

களின் உறுப்பினர்களே அன்றி மற்றவர்களும் நன்மை யடைகிறார்கள்.

பண்டசாலைகள் அநேக ஏழைத் தொழிலாளிகட்கு அறிவூட்டும் ஸ்தாபனங்களாகவும் விளங்குகின்றன. புரப சர் சி. ஆர். பே (Prof. C. R. Fay) என்பவர், இப்பண்ட சாலைகள் நான்குவகையாகத் தொழிலாளர்கட்கு உதவியா யிருக்கின்றன எனக் கூறியிருக்கிறார்.

முதலாவது, தொழிலாளிகளிடையே இது தன் ஆட்சி முறையைப் புகுத்தி இருக்கிறது.

இரண்டாவது, தொழிலாளர்கள் எல்லாச் சாமான் களையும் காசு கொடுத்தே அதாவது ரொக்கத்துக்கே வாங் கும்படிச் செய்திருக்கிறது.

மூன்றாவது, தொழிலாளர்களிடையே சிக்கனத்தைப் பரப்பி, அவர்கள் பணம் சேர்த்து வைக்கும் பழக்கத்தை விருத்தி செய்துள்ளது.

நான்காவது, தங்களுடையவும், பொதுவாக எல்லாத் தொழிலாளர்களுடையவும் அறிவு விருத்திக்காகவும் நன் னடத்தை விருத்திக்காகவும் எல்லா அங்கத்தினரும் தியாகம் செய்துவருகின்றனர்.

இவை இப்பண்டசாலைகளால் உண்டாகும் சமூக நன் மைகளாகும்.

(1) இந்த ஸ்தாபனங்களில் ஒவ்வோர் உறுப்பின ருக்கும் ஒவ்வோர் ஓட்டே இருப்பதால், சில கம்பெனி களில் இரண்டொருவர் தம்முடைய ஓட்டு வன்மையால் மற்றவர்கள் முயற்சியை வீணாக்கல்போல, இங்கே செய்வ தற்கில்லை. பண்டசாலைகளின் பல காரியங்களையும் அங்கத் தினர்களே பார்ப்பதால், வியாபாரத்திலும், சிறு ஸ்தாப னங்களை நடத்துவதிலும், அங்கத்தினருக்குப் பயிற்சி உண் டாகிறது. இந்த அப்பியாசத்தினால் அவர்கள் தங்கள் நன் மைக்கான பல காரியங்களைச் செய்துகொள்ளும் சக்தியைப் பெறுகின்றார்கள்; பல பொறுப்பான ஸ்தாபனங்களை வகிக்கத் திறமை உடையவர்களாகின்றார்கள்.

(2) அநேக வியாபாரிகள் சாமான்களைக் கடன் கொடுக்கிறார்கள். அநேகமாகப் பலர் கடனுக்குச் சாமான்களை வாங்குவதையே விரும்புகின்றனர். இக்கூட்டுறவுப் பண்டசாலைகளில் சேர்வோர் கடன் வாங்காதிருப்பதால், நாளடைவில் சிக்கன வாழ்க்கை முறைகளைக் கற்றுக் கொள்ள வசதி ஏற்படுகிறது; வருவாய்க் கேற்ற செலவு செய்யும் பழக்கமும் உண்டாகிறது.

(3) இலாபத்தில் பங்கு கொடுப்பதென்றமுறை சிக்கனத்தை விருத்தி செய்கிறது. இந்த வகையில் இங்கிலாந்து தேசத்தில் உறுப்பினர் பெருந்தொகையினராயிருக்கின்றனர்.

(4) கூட்டுறவு ஸ்தாபனங்களில் வரும் இலாபத்தில் ஒரு பகுதி கல்வி யபிவிருத்திக்காக உபயோகிக்கப்படுகிறது. இங்கிலாந்திலே இவ்வகையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் செலவிடும் தொகை அதிகம்.

இந்தப் பணத்திலிருந்து கூட்டுறவைப்பற்றிய அறிவைப் பரப்பும் வேலை செய்யப்படுகின்றது. அங்கே கூட்டுறவு இயக்கத்தின் சரித்திரமும், கூட்டுறவு இயக்கம் பல தேசங்களிலும் எப்படி நடக்கிற தென்ற விவரங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இந்த ஸ்தாபனங்கள் அநேக புஸ்தகசாலைகளையும் வைத்து நடத்துகின்றன; பல சொற்பொழிவுகள் நடைபெறும்படி செய்கின்றன.

இவை மேலும் பல வாசகசாலைகளை ஏற்படுத்தி யிருக்கின்றன; வெளியூருக்குப் பலர் சேர்ந்து போகும் ஏற்பாடுகளைச் செய்கின்றன; பலவித விளையாட்டுகளையும் உறுப்பினரின் நன்மைக்காக ஏற்படுத்துகின்றன.

கூட்டுறவுப் பண்டசாலைகள் தொழில் உலகிலும் தலைசிறந்து நிற்கின்றன. இப்பண்டசாலைகள் தங்கட்கு வேண்டிய சாமான்களில் பலவற்றைத் தாங்களே செய்து கொள்கின்றன.

---

7. பாணர்கள்

1. பாணர் என்ற சொல்லின் பொருள்

பாணர் என்ற சொல் பாண் என்ற பகுதியினின்றும் தோன்றியது. பாண் என்பது பாட்டு; அது பண் என்பதன் அடியாகப் பிறந்தது பாட்டுப் பாடுதலைத் தம் தொழிலாகக் கொண்ட ஓரினத்தவரின் சாதிப் பெயராகப் பாண் என்ற சொல் வழங்கலாயிற்று. எனவே பாணர் என்பதற்குப் பாடுவோர் என்பது பொருள். இச்சாதியாரில் ஆண்மகன் பாணன் பாண்மகன் என்றும் பெண்மகள் பாடினி, பாட்டி, பாணிச்சி, பாண்மகள், விறலி என்றும் வழங்கப்படுவர்.

2. பாணர் கீழ்மக்களே

பாணர்கள் கீழ்மக்கள் என்பதனைப் புலப்படுத்தப் பல ஆதாரங்கள் உண்டு. இவர்கள் தாழ்ந்தவராகக் கருதப்பட்டு வந்த காரணத்தால் பாண் என்ற சொல் 'தாழ்மை' என்ற பொருளில் நூல்களிற் புகுந்துள்ளது. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள், "பாணே பேசி" என்று எடுத்தாளுகிருர். சீவக சிந்தாமணி ஆசிரியர், "பாண் செய்தது" என்றும், "பாண்மைச் சொல்" என்றும் கூறுகிருர். 'பாண் செய்தல், என்பதற்கு நச்சினர்க்கினியர், 'தாழ்ச்சி செய்தல்' என்று பொருள் கொண்டுள்ளார்.

பாண்சேரி புறநகரிலுள்ள ஒருசேரி என்று மதுரைக் காஞ்சி கூறுகிறது. தீண்டத் தகாதார் புறச் சேரியில் (ஊர்க்கு வெளியே ஒதுக்குப் புறமாக) வசித்து வருதலை நாம் இன்றும் பலவிடங்களிற் காண்கிருேம்.

இவர்கள் இசைப் பயிற்சியில் வல்லவர்களாக இருந்தும் கோவில்களில் அனுமதிக்கப் பெறவில்லை. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான **திருநீலகண்ட யாழ்ப் பாண நாயனரும்** பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான

திருப்பாணாழ்வார் என்பவரும், பாணர் வகுப்பினரே. இவர்களுடைய சரித்திரத்தை உற்று நோக்கும்போது பாணர்கள் கீழ்ச்சாதியாரென்றும் தீண்டத் தகாதாரென்றும் தெரிந்து கொள்ளுகிறோம்.

'தென்னிந்திய சாதிகளும் வமிசங்களும்' (**Castes and Tribes of South India**) என்ற ஆங்கில மொழியிலுள்ள ஒரு நூலால், இக்காலத்தில் மலையாளத்தில் பாணர் என்ற ஒரு பிரிவினர் வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் இழிகுலத்தவராகக் கருதப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

3. பாணரின் வகை

பாணர்களில் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் முதலிய பலவகையினர் உண்டு. இசைப்பாணர் என்பவர்கள் வாய்ப்பாட்டுப் பாடுகின்றவர்களோ இசைக் கருவிகளைக்கொண்டு இசைப்பயிற்சியால் சீவிக்கின்றவர்களோ என்று நினைக்கவேண்டி யிருக்கிறது. மண்டைப் பாணர் பிச்சை யெடுத்து வாழ்பவர்கள். மண்டை என்ற சொல் பிச்சைப்பாத்திரம் என்ற பொருளில் வழங்கி வந்துள்ளது. யாழ்ப்பாணர்கள் யாழைக் கருவியாகக்கொண்டு வாழ்பவர்கள். இவர்கள் பெரும் பாணரென்றும் சிறு பாணரென்றும் இருவகைப்படுவர். இவர்கள் கையிலுள்ள யாழினது உருவத்தின் பெருமை சிறுமைகளால் இப்பெயர் பெற்றனர் போலும். **சிறுபாணாற்றுப்படையிலே** கூறப்பட்ட பாணன் ஒருவன் சிறிய யாழை யுடையவனென்றும், **பெரும்பாணாற்றுப்படையிலே** கூறப்பட்ட பாணன் பெரிய யாழை யுடையவனென்றும் அந்நூல்களிற் குறிப்பிடப்பெற்றிருப்பது இங்கே நோக்கத்தகுந்த தொன்றாகும்.

4. பாணரது தொழில்

இசைப் பயிற்சியினால் ஐந்திணை மக்களையும் மகிழ்வித்து அவர்கள் தரும் ஊதியத்தால் வாழ்தலும் மீன் பிடித்தலும் பாணர்களுக்கு முக்கியமான தொழில்களாம்.

யாழ் வாசிப்பதில் பாணர்கள் மிகவும் வல்லவர்கள். யாழினுடைய பலவேறு உறுப்புக்களும், யாழின் இலக்கணங்களும், பலவகைப் பண்களும், அவற்றைப் பாடுதற்குரிய காலவரையறை முதலியனவும், தனித் தமிழிலேயிருந்த இசைநூல்களும் இன்னவையென்பதைப் பண்டை உரையாசிரியர்கள் காட்டியுள்ள மேற்கோள் முதலியவற்றால் நாம் தெரிந்துகொள்கிறோம். இவற்றால் பண்டைய நாளில் தமிழ்நாட்டில் இசைப்பயிற்சி உன்னத நிலையை அடைந்திருந்ததென்று தெரிகிறது. ஒரு நாட்டின் சிறப்புக்கு வித்தகக் கலைகள் (ஓவியம் சங்கீதம் முதலிய நுண் கலைகள்) இன்றியமையாதன. அவற்றுள் தலையாயது இசையே. அத்தகைய சங்கீதத்தைப் பாணர்கள் தங்களுடைய தொழிலாகக் கொண்டு காப்பாற்றிவந்தனர்.

அவர்களது பாட்டுக் கேட்டோரை அகப்படுத்தும் இயல்புடையது. ஒருவன் யாழ்வாசித்தலைச் சிறப்பிக்குமிடத்து முடத்தாமக் கண்ணியார் **பொருநராற்றுப் படையில்,**

> **“ஆறலை கள்வர் படைவிட அருளின்**
> **மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை”**

என்று கூறியிருக்கிறார். இதற்கு நச்சினார்க்கினியர், ‘வழியை அலைக்கின்ற கள்வர் தம் கையிற் படைக்கலங்களைக் கைவிடும்படி அருளினது மாறாகிய மறத்தினை அவர்களினிடத்து நின்று பெயர்க்கும் மருவுதலினிய பாலையாழ்’ என்று பொருள் கூறியிருக்கிறார்.

பாணர்கள் தங்கள் யாழைத் தெய்வமாகப் போற்றி வந்தார்கள். யாழே அவர்களுக்குத் தெய்வமென்பதும் அவர்கள் தங்கள் யாழின்மேல் சூள்கூறி உண்மையைப் புலப்படுத்துவது முண்டு என்பதும் தெரிய வருகின்றன.

தமிழ்மக்களில் தலைவன் தலைவியர்கள் தங்கள் குழந்தைகளுடன் இருந்துகொண்டு பாணனுடைய பாட்டைக் கேட்டு மகிழ்ந்து வருவது வழக்கம்.

இவர்கள் மீன்பிடித்தலையும் தம் தொழிலாகப் பெற்றிருந்தனர். பாணர் பிடித்துக் கொணரும் மீனைப் பாணிச்சியர்கள் விற்றுவந்தார்கள். அவர்கள் மீன்களை விற்று அதற்கு விலையாக நெல் முதலிய தானியங்களைப் பெற்று வந்தார்கள்.

பாணரென்பது பிற்கால நூல்களில் தையற்காரர்களுடைய பெயராகவும் வழங்குகின்றது.

5. பாணரின் வறுமையும் மன்னரின் ஆதரவும்

ஒரு பாணன் யாழ்வாசித்துக் கொண்டு பரிசில்தருவாரை நாடிச்செல்ல அவனுடன் விறலியும் பெரிய கிளையும் தொடர்ந்து செல்வதை நூல்களிலே பரக்கக் காணலாம். ஒரு பெரிய குடும்பத்திலே ஒருவனே பொருளைத் தேடும் விஷயமாகப் பாடுபடுகின்றவன் போல் தோன்றுகின்றது.

இவர்களுடைய வறுமை மிகவும் இரங்கத் தக்கவாறு நூல்களில் வருணிக்கப் பட்டுள்ளது. அக்காலத்தில் தமிழ் நாட்டிலே மிக்க வறியரா யிருந்தவர்கள் இப்பாணர்கள் தாம். ஆகையால் அக்காலத் தமிழ்வேந்தர்கள் இவர்கள் பசி தீர்த்தலையே தம் முதன்மையான கொடையாகக் கொண்டிருந்தனர். தமிழ் நூல்கள் அக்கொடையை ஒரு கடமையாகவே பாராட்டிப் **பாண்கடனிறுத்தல்** என்று கூறுகின்றன.

அரசர்கள் பாணர்களுக்குத் தரும் பரிசில்களுள் முக்கியமானது பொற்றாமரைப் பூவாம். விறலியருக்கு அவர்கள் பொன்னணிகளை வழங்கிவந்தார்கள். பாணர் பொற்றாமரைசூடுதலையும் விறலியர் பொன்னணியையும் முத்துமாலையையும் பெறுதலையும் புறநானூறு, பத்துப்பாட்டு, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களில் விரிவாகக் காணலாம்.

இவர்கள் தங்களால் வைத்துக் காப்பாற்ற முடியாத யானை தேர் முதலியவற்றையும் பரிசிலாகப் பெற்றுவந்தார்

கள். அப்பரிசில்களை இன்னவாறு உபயோகித்தல்வேண்டும் என்பதை இவர்கள் அறிந்திருந்தார்கள் என்று நினைப்பதற்கில்லை. குதிரைகள் பூட்டியதேரைத் தாற்றுக்கோலுடன் பாணர்களுக்கு ஈந்தால் கடுவிசைக்கு இவர்கள் இருத்தலாற்ருர் என்று கருதி மன்னர்கள் தாற்றுக்கோலை நீக்கிவிட்டுத் தருவதும், முன்பின் தேரேறும் பழக்க மில்லாத இவர்களை மன்னர்களே நேரில், 'இங்ஙனம் ஏறு' என்று கற்பித்து ஏற்றுவதும் உண்டென்பது,

"கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
....
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந் தேறென் றேற்றி"

(பொருநராற்றுப்படை, 163 - 7)

என்பதனல் தெரியவருகின்றது.

பெரியோரை ஏழடி நடந்துசென்று வழியனுப்புதல் ஆன்ருேர் வழக்கம். முடியுடை வேந்தர்களால் பாணர்கள் அத்தகைய மரியாதையைப் பெற்றிருந்தமை மேலே காட்டிய அடிகளால் தெரிகின்றது.

இவர்கள் வறியவர்களாயிருந்தும் தாம் பெற்றவற்றைப் பிறர்க்கு எளிதில் ஈந்துவிடும் இயல்பினர். இவர்கள் தமக்குப் பரிசிலாக வரும் யானைகளையும் பசுக்கூட்டங்களையும் அவற்றின் மதிப்பை யறியாமல் கள்ளின் பொருட்டுக் கொடுத்துவிடுத லுண்டென்று தெரிகின்றது. பாணபத்திரரை வழியனுப்பும்போது சேரமான் பெருமாணயனர் ஏழடி நடந்துசென்று வழியனுப்பியதாகப் பரஞ்சோதியார் திருவிளையாடலில் கூறியிருப்பதும் இங்கே கருதத்தக்கது.

6. பாணரும் அகப்பொருட் பகுதியும்

தலைவன்பால் தலைவிக்குள்ள மனத்தாபத்தைத் தீர்த்தற்பொருட்டுப் பாணன் தலைவியினிடம் தூதுசெல்லுதலும்

தலைவனைப் பிரிந்து தலைவி துன்ப மிகுதியால் வருந்துவதைத் தலைவனுக்குக் கூற அவன்பால் தூது செல்வதும் பாணனுக்குத் தொழிலாகும்.

7. பாணரும் புறப்பொருட் பகுதியும்

புறப் பகுதியிலும் பாணரைப்பற்றிய செய்திகள் உண்டு. அவை வருமாறு: கூத்தர், பாணர், பொருநர், விறலியர் இந்நால்வரும் ஆற்றுப் படுத்தற் குரியவர்கள். இவர்கள் பெயரால் அமைந்த ஆற்றுப் படைகள் தொகை நூல்களிலும் பிற்காலத்துக் கலம்பகம் முதலிய நூல்களிலும் தனிச் செய்யுட்களாக அமைந்துள்ளன.

போர்க்களத்தின் செல்வமிகுதியை யாழ்ப்பாணர் கூறுவதுண்டு. இது களவழி வாழ்த்து எனப்படும். வெட்சி வீரர் தாம் பகைவரிடமிருந்து கவர்ந்துவந்த பசுக்கூட்டங்களைப் பாணருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். களிறெறிந்து மறங்காட்டிச் செங்களத்தே இறந்துபட்ட வீரர்களுக்குப் பாணர்கள் நெருப்பை மூட்டி இறந்தவர்களின் ஆற்றல் தோன்றச் சாப்பண்ணை (விளரியை)ப் பாடுவதுமுண்டு. இதற்குரிய துறை பாண்பாட்டு எனப்படும். இறந்துபட்ட வீரனது நடு கல்லைப் பாணர் தொழுவதும் உண்டென்று தெரிகிறது. பாணர் அரசர்க்கு விடியற்காலையில் துயிலெடை பாடல் வழக்கமாக இருந்தது.

8. இறுவாய்

சங்கநூல்களிலே பாணர்களின் செய்திகள் பலவிடங்களிற் காணப்படுகின்றனவேனும் இக்காலத்தில் தமிழ்நாட்டில் பாணர் என்ற வகுப்பார் இலராயினர். இவர்களால் பெரிதும் போற்றிவரப்பட்ட தனித்தமிழ் யாழ்க்கலையும் ஒழிந்தது. பிற்காலத்தில் பாணர்கள் என்னவாயினர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. பௌத்தரும் சமணரும் தென்னாட்டிற்கு வந்தபின்னர் பாணர்கள் மெல்லமெல்ல அழிந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். துறவறத்தையே

சிறந்த அறமாக வற்புறுத்துகின்ற பௌத்த சமணர்கள் இசைப் பாடல்களும் அவற்றிற்குரிய கருவிகளும் சிற்றின் பத்தை யெழுப்பத்தக்கவை என்றெண்ணி பாணரது தொழிலை ஓங்கவிடாமலும், ஆதரியாமலும் அடக்கிவந்த காரணத்தினுல் பாணர்கள் தந்தொழில்களை விட்டொழித்து வயிறு வளர்ப்பதன் பொருட்டுப் பிற தொழில்களை மேற் கொண்டிருக்கலாம்.

சங்க காலத்திற்குப்பின் சில விடங்களிற்ருன் பாணர் கள் பிரசித்தர்களாக இருந்தார்கள். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் காலத்தில் கி. பி. 500 க்கும் 600-க்கும் இடையில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிரபலராக இருந் தார். அவர் காலத்துக்கு இரண்டொரு நூற்ருண்டுகளுக் குப் பின் திருப்பாணுழ்வார் வாழ்ந்துவந்தார். திருமுறை வகுத்த முதல் இராஜராஜசோழன் காலத்திலே (கி. பி. 985-1012) திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனுரின் சந்ததி யில் வந்த ஓர் நங்கையார் பண்ணமைப்பில் வல்லுநராக இருந்தாரென்றும் அவரைக்கொண்டுதான் தேவாரத் திரு முறைகளுக்குப் பண்ணடைவு செய்யப்பட்டதென்றும் கேள்விப்படுகிரேம். 11-ஆம் நூற்ருண்டிலிருந்து பாணர் களுடைய பிரஸ்தாபம் கேட்கப்படவில்லை.

ஒரே வகுப்பாரில் பெண்பாலார் ஆடலை மேற் கொண்டு அபிநயக் கலையை வளர்த்துவந்தமையும் ஆண் பாலார் இசையை வளர்த்து வந்தமையும் பற்றித் தமிழ்நாட்டிலன்றி வேறு நாடுகளில் எக்காலத்தும் நாம் கேள்வியுற்றதில்லை. இக்காலத்தே நம் நாட்டிலுள்ள தேவ தாசிகளையும் அக்குலத்து ஆண்பாலாரையும் நோக்கும் போது இசையும் கூத்தும் ஓரினத்தவரால் போற்றப்பட்டு வரும் வழக்கம் புலனுகின்றது.

8. உல்லாசப் பிரயாணம்

கல்வியின் பயன் இருவகைப்படும். ஒன்று, ஒருவன் தான் கற்கும் கல்வியினுல் தனது ஐம்புலன்களாலும், இவ்வுலகின்கண் நுகர வேண்டுவனவாகிய சிறந்தவற்றை யெல்லாம் நுகர்ந்து நாளடைவில் விசால நோக்குடையவ ஞதல்; மற்ருென்று, ஒருவன் தான் கற்ற கல்வியைப் பயன்படும் முறைகளிற் பயன்படுத்தித் தனக்கும் ஏனையோ ருக்கும் உதவி புரிதலாகும். இத்தகைய கல்வியை யடை யும் முறைதானும் பல்வகைப்படும். பண்டைக் காலத்துக் கிராமாந்தரப் பள்ளிக்கூடங்களில், மாணவருக்குக் கல்வி யளிப்பதில் பல்வகைக் கடின முறைகளையே பெரும்பாலும் அநுசரித்து வந்தனர். அச்சு யந்திரத்தின் பயனைப் பெருத அக்காலத்தில் மாணக்கர் நாள் முழுவதும் வகுப்பு அறையில் அடைபட்டு, பாடங்களை உருப்போட்டுப் 'பாராயணம்' செய்வதே வழக்கமாயிருந்தது. தற்காலத்திலோ, கல்வி முறைகள் மிகவும் மாறியிருக்கின்றன. இக்காலத்துக் கல்வி முறையின்படி, பள்ளியறையில், ஆசிரியர் புத்தகங் களிலிருந்து கற்பிக்கிற கல்வியொன்றே கல்வியாகாமல், பள்ளியறைக்கு வெளியிற் காணும் காட்சிகள், கேட்கும் விநோதச் செய்திகள், அநுபவிக்கும் இன்பங்கள் முதலிய வைகளால் அறிவை நல்வழியில் விசாலித்துக் கொள்ளும் இம்முறைகள் யாவும் கல்வியின் கூறுகளாகக் கருதப்படு கின்றன.

'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்' அநுபவிக்கிற இன்பங்களில் 'உல்லாசப் பிரயாணம்' ஓரின்பமாகும். உல்லாசப் பிரயாணத்தை முற்காலத்தி லிருந்தே நம் நாட்டுக் கல்விக் கழகங்களிற் சில, அறிவை யூட்டும் சாதனமாகக் கொண்டு, மாணவர் அங்ஙனம் செய் வதற்குரிய ஒழுங்குகளைச் செய்துவந்தன. இம்முறையைப் பல பள்ளிக்கூடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும்

பெரும்பாலும் தற்பொழுது கையாண்டு வருகின்றனர். உல்லாசப் பிரயாணத்தால் அறிவை விசாலித்துக்கொள்ளலாம் என்று பொதுவாகக் கூறியபோதிலும், மாணவர் குழாம் ஒன்று இந்தப் பிரயாணத்தால், வெளிப்படையான இன்பத்தையும், குதூகலத்தையுமே யடைந்து, அறிவை அதிகமாய் விசாலப்படுத்தாதிருந்தும் விடலாம். இது பற்றியே உல்லாசப் பிரயாணத்தில் முனைந்து நிற்கும் மாணவர் குழாம், அங்ஙனம் செய்வதன் வாயிலாக உண்மையிலே அறிவை விசாலித்துக்கொள்ள விரும்புவார்களேயாகில், கவனிக்கவேண்டிய விஷயங்கள் சிலவுள.

மாணவர், புத்தகங்களிலிருந்து வாசித்துக் கேள்வியளவில் அறிந்த அரும்பெருங் காரியங்களைக் காட்சி யறிவினுல் ஊர்ஜிதப்படுத்துவதால், அவரது அறிவும், ஐம்புலனும் வன்மை பெறுகின்றன. ஒத்த வயதினரான சகபாடிகள் ஒன்றுசேர்ந்து, பல்வகையின்பங்களையும் வழியில் நுகர்ந்து, பள்ளியறைக்குரிய கட்டுப்பாடுகளில்லாமல் சுயாதீனமான வழிகளில் அறிவை விருத்தி செய்வதற்கு, உல்லாசப் பிரயாணம் இன்றியமையாத ஒரு கருவியாயிருக்கிறது. ஆகவே, அச்சாதனத்தின் சில முக்யாம்சங்களை ஆராய்வோம்:

முதலாவது, மாணவர் எவ்விடத்தைச் சென்று காணவேண்டுமென்று விரும்புகிறுர்களோ, அவ்விடத்தைப் பற்றிய சில விவரங்களையேனும் அறிந்துகொள்ளல்வேண்டும். உதாரணமாக, தஞ்சை நகரின்கண் பல்வகை ஓவிய எழிலுடனும், சரித்திரச் சிறப்புடனும் விளங்கா நின்ற ராஜ ரஜேஸ்வரக் கோவிலைக் காணச் செல்லும் மாணுக்கருக்கு, அக்கோவிலுக்குச் செல்லு முன்னரே, அது யாரால் கட்டப்பட்ட தென்பதும், எக்காலத்தைச் சேர்ந்த தென்பதுமாகிய சில விபரங்கள் தெரிந்திருக்கவேண்டும். அங்ஙனமே, 'ஏழு பகோடா' (**Seven Pagodas**) என்று வழங்கப்படும், மஹாபலி புரத்தைப் பார்க்கப் போகின்ற

மாணுக்கர்கள், பல்லவ அரசர்களைப் பற்றியும், தென்னிந்திய சரித்திரத்தில் வந்துள்ள அவர்களின் வரலாற்றைப் பற்றியும், அப்பல்லவரின் கோயில் அமைப்பு நிலை (**Pallava Architecture**)யைப் பற்றியும், ஒரு சிறிது முதலில் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ஒருவனுக்கு முன்னுள்ள அறிவே அவன் பின்னும் அறிவை நிரம்பப் பெறும்படி தூண்டுதல் செய்யும்.

இரண்டாவது, உல்லாசப் பிரயாணம் மேற்கொண்ட மாணவர் குழாத்துடன், அவர்கள் காணப் போகும் இடத்தின் சிறப்பை யெல்லாம் எடுத்துக் கூறி விளக்கக் கூடிய ஒருவர் தொடர்ந்து செல்லவேண்டும். உதாரணமாக, சென்னையின் கண்ணுள்ள, கண் காட்சிச் சாலையைக் காண ஒரு மாணவர் குழாம் செல்லுமேயாகில், கண் காட்சிச் சாலையிலுள்ள விநோதப் பொருள்களைக் குறித்து விரித்துச் சொல்வதற்கு அத்துறையில் அறிவு பெற்ற ஒருவர் தேவை. இத்தகைய அறிவுபெற்ற ஒருவர் இல்லாவிடில், மாணவர் சிறந்த பயனடைத லியலாது.

மூன்ருவது, பிரயாணம் முடிந்த பின்னர், மாணவர் தங்கள் தங்கள் பள்ளியில் தங்கள் சகபாடிகளுடனும் ஆசிரியருடனும், தாங்கள் கண்டறிந்த காட்சியைக் கலந்து பேசி நினைப்பூட்டிக் கொள்ளவேண்டும். பல ஊர்கள் சென்று வந்ததில், வெவ்வேறு எண்ணங்களும் கோட்பாடுகளும் தோன்றி யிருக்கலாம். ஆகையால் மாணவரைத் தங்கள் மனத்துக்குத் தோன்றியவாறே, தாங்கள் கண்ட காட்சியின் விபரங்களை ஒரு கட்டுரை மூலமாகவோ, சொற்பொழிவு, சொற்போர் முதலியவைகளின் மூலமாகவோ வெளிப்படுத்தச் செய்யலாம்.

கேள்வி யறிவில் அறிந்த எல்லாக் காட்சிகளையும் நாம் கண்ணுல் கண்டு இன்புற வியலாது என்பது உண்மையே. எனினும் நமது தகுதிக்கும், அவகாசத்திற்கும் பொருந்திய சில காட்சிகளையேனும் கண்டு இன்புறலாம்.

தென்னிந்தியாவில் வளப்பமும் செழிப்பும் செறிந்து, இயற்கை யன்னையின் அரங்குபோல் விளங்காநிற்கும் திருவாங்கூர் தேசத்தைக் கண்களால் கண்டபின்பல்லவோ, அதைப்பற்றிக் கேள்வியுற்ற விஷயங்கள் யாவும் மனத்துக்கு இன்பத்தை யளிக்கின்றன. வாழை, பலா, கமுகு, தென்னை, முதலிய மரங்கள் கூட்டங் கூட்டமாய்த் தழைத்து வளரவும், அம்மரங்கள் மீது மிளகுக் கொடிகள் சுற்றிப்படர்ந்து நிற்கவும், எங்கும் செடி கொடிகள் நிறைந்து பசுமையளிக்கவும், 'பார்க்குமிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற' கரிய மலைத்தொகுதிகள் அசைவின்றி எழிலுடன் நிற்பதுமாகிய இக்காட்சிகளைக் கண்ணால் கண்டு போற்றாதவர் எவரேனு முண்டோ?

முழு முதற்கடவுளின் வல்லமையையும், இயற்கைத் தேவியின் வனப்பையும், பழஞ் சரித்திரம் மிளிரும் பல்வகைச் சிற்பத்தையும், அகக்கண்ணையும் புறக்கண்ணையும் கவரும் அழகிய ஓவியங்களையும், மானிடன் செய்த மாண்புறு செயலைக் காட்டுகின்ற பல்வகை யந்திரங்களின் அமைப்பையும் கண்ணுற்று, அவ்வியப்புக்களில், ஐம்புலன்களையும் ஈடுபடச்செய்வதற்கு, உல்லாசப் பிரயாணம் ஓர் முக்கிய சாதனமாய் நிற்கின்றது.

9. பொழுதும் போதும்

தமிழர், காலத்தைச் சிறுபொழுது பெரும் பொழுது என இருபிரிவாகப் பிரித்தனர். அவற்றுள் சிறுபொழுது ஆறு; பெரும்பொழுது ஆறு. சிறுபொழுது ஐந்தென்பது ஒரு சாரார் கொள்கை. வைகறை, காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் என்பன சிறு பொழுதுகளாம். இவை ஒவ்வொன்றும் பப்பத்து நாழிகைகளை உடையன. பெரும்பொழுதை இருது வென்று கூறுவர் வடநூலார். அவை கார் குளிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. இவை முறையே ஆவணி முதலாக இவ்விரண்டு மாதங்களை உடையன. தமிழ் அகப்பொருள் இலக்கணத்தில் இப்பொழுதுகளுள் இன்ன இன்னவை, இன்ன இன்ன திணையைச் சார்ந்தன என்ற வரையறை உண்டு. முதல், கரு, உரி, என்னும் மூவகைப் பொருள்களுள், இவை முதற்பொருளைச் சாரும்.

பொழுதை அளந்தறிவதற்குப் பண்டைத் தமிழர்கள் 'கன்னல்' என்ற ஒரு கருவியைத் துணையாகக் கொண்டனர். நீர் நிறைந்த பாத்திரத்தின் அடியிலே சிறு துவாரமிட்டு அதன்வழியே ஒரு பெற்றிப்படத் துளிக்கும் நீரைக் கொண்டு நாழிகையை அறிந்தனர்; சிறுசிறு துளியாக வரும் அமைப்பை யுடையதாதலின் அவ்வியந்திரம் 'குறுநீர்க் கன்னல்' என்றும் கூறப்படும்; நாழிகைவட்டில் என்னும் பெயரும் அதற்கு உண்டு. அக்கருவியைக் கொண்டு நாழிகையை அறிந்து கூறுவதற்கென்று அரசர்களுடைய அரண்மனையில் 'நாழிகைக் கணக்கர்' என்னும் ஒருவகை ஊழியர் இருந்து வந்தனர்.

நீர்க்கன்னலைப்போல மணல் இட்டுவைத்த வட்டிலாலும் காலத்தை அறியும் வழக்கம் இருந்தது. இவற்றையன்றி வேறு வகையான நுண்ணிய கருவிகளும் அக்காலத்தில் இருந்தனவென்று தெரியவருகின்றது. பெருங்

கதையில் காலேந்திரம், கடிகையாரம், என்னும் இரண்டு கருவிகள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் பின்னதாகிய கடிகையாரம் இக்காலத்துக் கடிகாரத்தைப் போன்ற தொரு கருவியாக இருத்தலும் கூடும்.

மேலே கூறியவை யாவும் செயற்கைக் கருவிகள். காலத்தை அறிவதற்கு இயற்கையிலேயே பல கருவிகள் அமைந்துள்ளன. யாமந்தோறும் பொழுதை அறிவிக்கும் யாமக்கோழியும், விடியற்காலத்திற் கரையும் காக்கையும் ஒருவகையாகப் பொழுதைப் புலப்படுத்து கின்றன. இவை யாவற்றிலும் சிறந்தவை மலர்கள். மலர்கள் தத்தமக்கு ஏற்ற போதிலே மலர்தலையும், குவிதலையும் உடையன. அதனாலன்றோ,

'போழுதின் முகமலர் வுடையது பூவே'

என்ற சூத்திரம் எழுந்தது.

இயற்கைப் பூம்பொழில் எப்பொழுதும் மலர்ச்சியை உடையது. பகலிலே சில மலர்கள் மலர்கின்றன; இரவில் அவை குவிந்துவிடில், வேறு பல மலர்கள் மலர்ந்து தம் மணத்தைப் பரப்புகின்றன. இவற்றால் எப்பொழுதும் நிலமகள் பூமகளாகவே விளங்குகின்றனள்.

மரநூல்வல்ல கலைஞர், மலர்கள் தத்தமக்கென வரையறையுள்ள ஒரு காலத்தில் மலர்தலினும், அங்ஙனமே குவிதலினும் தவறுவதில்லையென்று கூறுகின்றனர்; ஒருநாளில் இன்ன இன்ன போதில் இன்னஇன்ன மலர் மலருமென்ற கணக்கையும் அறிந்திருக்கின்றனர். இங்ஙனம் அறிந்த பலமலர்களின் தொகுதியைக்கொண்டு மேனாட்டுத் தாவர சாஸ்திர வல்லுநராகிய லின்னேயஸ் என்பவர் ஒருமலர்க்கடிகாரத்தை அறிவித்திருக்கிறார். அக்கடிகாரம் ஒவ்வொரு மணியிலும் மலரும் ஒவ்வொரு மலரையுடையது.

இத்துறையில் ஆராய்ந்த வேறோர் அறிஞர் நம்முடைய இந்திய நாட்டில் மலரும் மலர்களுள் ஒவ்வொரு மணியிலும் மலர்கின்ற பல மலர்களின் பெயர்களைத் தொகுத்து

ஓர் ஆங்கிலப்பத்திரிகையில் பல ஆண்டுகளுக்கு முன் எழுதி யுள்ளார். அவர் குறித்த மலர்களுள் நாம் அறிந்த சில மலர்களும் அவற்றிற்குரிய காலமும் வருமாறு :—

மலர்		மலரும் நேரம்
1. தாமரை	...	சூரிய உதயம்
2. சண்பகம்	...	காலை 6–7 மணிக்கு இடையில்
3. வாழைப்பூ	...	மாலை 5–6 மணிக்கு இடையில்
4. பவழமல்லிகை	...	மாலை 6–7 மணிக்கு இடையில்
5. மல்லிகை	...	இரவு 7–8 மணிக்கு இடையில்

மேலே கண்ட உண்மையைத் தமிழர் பண்டைக்காலத்தில் மிக நுணுகி ஆராய்ந்திருந்தனர். தமிழ் நூல்களை ஆராயும்போது மலர்களால் மக்கள் போதை அறிந்து கொண்டமைக்குச் சான்றாகப் பல செய்திகளைக்காணலாம் சிறுபொழுதுக்குரிய மலர்களைப்போலவே பெரும்பொழுதுக்கும் உரிய மலர்கள் இன்னவை என்ற வரையறை உண்டு. இங்ஙனம் போதை அறிவித்தற்கு உரியதாதல் பற்றியே மலரும் பருவத்துள்ள பேரரும்பைப் போது என்று வழங்கினர்கள். பெரும்பொழுதை அறிவிக்கும் காரணத்தால் மலருக்கு நாள் என்ற ஒருபெயரும் உண்டாயிற்று. கதிரவனும் நட்சத்திரங்களும் மேகத்தில் மறைந்த காலத்தினும், நாழிகைக் கணக்கர் அயர்ந்த காலத்திலும் அப்போதுள்ள போதைத் தம்மலர்ச்சியினல் அறிவிப்பதினின்றும் இவை பிறழ்வதில்லை.

ஐப்பசி கார்த்திகை மாதமாகிய குளிர்காலத்தில் மழையும் குளிரும் மனிதனை வெளியிலே புறப்படவொட்டாமற் செய்கின்றன ; வான முழுவதும் மேக படலங்கள் நிறைந்துள்ளன ; சூரியனுடைய தரிசனம் கிடைப்பது மிக அரிதாக இருக்கிறது ; வீட்டிலே உள்ள மகளிர் மாலைக்காலத்தில் விளக்கேற்றுதல் வழக்கம். திருமகள் விலாசத்தை தருவதற்கேற்ற அக்கடமையை அவர்கள் குறைவின்றிச் செய்வார்கள். மாலைக்காலம் வந்ததும் வராததும்

அவர்களுக்கு எப்படித் தெரியும்? கடிகாரமா வீடுதோறும் இருக்கிறது? சிறிது நேரத்திற்குமுன் அவர்கள் தம் வீட்டிற்கு அயலிலுள்ள பிச்சியின் அரும்புகளைப் பறித்துப் பூந்தட்டிலே இட்டுவைத்திருக்கிறார்கள். அவை திடீரென்று மலர்ந்து மணங்கமழ்கின்றன! அது கண்ட மகளிர், 'ஆ! மாலைக்காலம் வந்துவிட்டது!' என்ற மகிழ்ச்சியுடன் திருவிளக்கேற்றித் தெய்வம் தொழுகின்றனர். இந்தக் காட்சியையே நெடுநல்வாடை,

'மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி அரும்பின் பைங்காற் பித்திகத்
தவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுதறிந்
திரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ
நெல்லு மலரும் தூஉய்க்கை தொழுது
மல்லல் ஆவணம் மாலை அயர'

என்ற பகுதியில் நமக்குக் காட்டுகின்றது. பிச்சிப்போது மாலைப்போதை அறிவிக்கும் கடிகாரமாக உதவுதலை இந்நிகழ்ச்சியால் அறிகின்றோம்.

'போதுதெரி யாமையிற் குமுதமொடு சதவிதழ்ப்
போதுமே இருபோதையும்
தெரிக்கும் தடம்பணை உடுத்ததமிழ் வேளூர'

[முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்]

என்பதில் போது போதைத் தெரிக்குந் தன்மை எவ்வளவு அழகிதாகக் கூறப்படுகின்றது!

தமிழ் நூல்களிற் கண்ட மலர்க் கடிகாரத்தை ஆராய்கையில், தாமரை மலர் தன் நாயகனாகிய கதிரவன் எழும்போது தன் இதழ்க்கதவம் திறப்பதைக் காண்கின்றோம். நெய்தற்பூ வைகறையிலே மலர்கின்றது; "வைகறை கட்கமழ் நெய்த லூதி" என்பது திருமுருகாற்றுப் படை. கதிரவன் செல்லும் திசையையே நோக்கி நிற்கும் சூரிய காந்தியை நாம் அறிவோம்; அதைப்போன்ற மற்றொரு சிறு மலரும் உண்மையைத் தமிழ் இலக்கியங்களிற் காண

லாம். பலர் தினந்தோறும் நெருஞ்சி மலரைப் பார்க்கின்றனர்; காலால் மிதித்தும் செல்கின்றனர்; ஆனல் அது கதிரவன் உள்ள திசையை நோக்கியே தன் இதழ்களை விரித்து நிற்கும் என்பதை அறிபவர் அரியர்.

* * * *

பகற்போது இவை, இராப்போது இவை யென்னும் வரையறையைத் தமிழ்ப் புலவர் நன்கறிந்து கூறியுள்ளனர். அந்திக்காலத்தில் மலரும் ஒருவகை மலர் அக்காரணம் பற்றியே அந்தி மந்தாரை என்று வழங்கப்படுகின்றது; நள்ளிரவில் மலர்ந்து மணக்கும் இருவாட்சிப்பூ (இருள்வாசி) நள்ளிருள் நாறி யென்னும் பெயர் பெற்றுள்ளது.

* * * *

மாலைப்பொழுதென்பது சூரியன் மறைந்த பின்னர் இரவின் நடுயாமத்திற்கு முன்னர் உள்ள சிறுபொழுது. அந்தப்பொழுதை வருணிக்கும் புலவர்கள் அக்காலத்தில் மலரும் மலர்களையும் வருணித்திருக்கின்றனர்.

'முல்லை மலரும் மாலை'— (குறுந்தொகை)

என்னும் அடி மாலைப்போதை முல்லைப்போதின் அடையாளத்தாற் குறிக்கின்றது.

ஆம்பல், குருக்கத்தி, தவளம் (செம்முல்லை), பிடவு புன்னை முதலியனவும் மாலைப் போதைக்காட்டும் போதுகளாம். மாலைக்காலத்தில் தாமரை, நெய்தல் முதலிய மலர்கள் குவியும். நள்ளிருளில் நொச்சிப்பூ உதிரும்.

பகற்பொழுதிலே பெரும்பாலும் பலவகை நிறமுள்ள மலர்கள் மலருமென்பதும், இரவில் மணமுள்ள போதுகள் மலரும் என்பதும் மரநூலார் கண்டறிந்த உண்மை. மரவினத்தின் வளர்ச்சிக்கு வண்டுகள் தாதூதுதல் இன்றியமையாதது. அவை ஊதி ஒருமலரிலுள்ள தாதை மற்றொரு மலருக்குக் கொண்டுசென்று வைத்தலால் அம்மலர் கருவுற்றுக் காய்த்துக் கனிகின்றது. அதனல் மர வினங்கள் பல்குகின்றன. மலர்களின் நிறமும் மணமும் வண்டு

களைக் கவரும் பொருட்டுக் கடவுளால் அமைக்கப்பட்டவை. வண்டுகள் மலரை நிறத்தாற்கண்டு அடையும் பொருட்டுப் பகற்போதுகள் பலநிறங்களை உடையனவாக உள்ளன; நிறத்தைக் காண இயலாத இரவில் மலர்களின் மணம் வண்டுகளை அழைக்கின்றது; அதனாலேதான் இரவில் மலரும் மலர்களிற் பெரும்பாலன வெண்ணிறமுடையனவாக இருக்கும்; அவை பலவகை நிறத்தைப் பெறுவதனால் ஒரு பயனும் இல்லையல்லவா?

சிறு பொழுதுக்குரிய மலர்களைப்போலப் பெரும் பொழுதுகளுள் ஒவ்வொன்றற்கும் உரிய மலர்கள் இன்னவை என்று ஆராய்வதாயின் அவ்வாராய்ச்சி மிக விரியும். அகப்பொருட் பனுவல்களிலே பருவங்களைப்பற்றிக் கூறப்படும் இடங்களிலுள்ள செய்திகளால் இதனை அறிந்து கொள்ளலாம்.

கார்காலத்தில் முல்லை, கொன்றை, கடம்பு, பிடவு, பிச்சி, குருந்து, தெறுழம்பூ முதலியன மலரும் குளிர்ப் பருவத்தில் முசுண்டையும் பீர்க்கும் மலர்வதாக நெடுநல் வாடை உணர்த்துகின்றது. முன் பனிக்காலத்தில் அவரை, ஈங்கை, கருவிளை முதலியன மலரும்; பனிக்காலத்தில் பகன்றை மலரும், இளவேனிற் பொழுதில் அசோகு, கோங்கு, மா, பாதிரி முதலியனவும், இருவகை வேனிலிலும் இருப்பை, அதிரல் முதலியனவும் மலரும். இம்மலர்களில் சிலவற்றை அவை மலரும் காலத்தைப் புலப்படுத்தும் அடையோடு சேர்த்து வழங்குவதும் சான்றோர் மரபு:—

'கார் நறுங் கடம்பு' (நற்றிணை)
'கார்நறுங் கொன்றை' (புறநானூறு)
'வேனிற் பாதிரி' (குறுந்தொகை)
'வேனி லதிரல்' (அகநானூறு)

முருக்கின் வகையைச் சேர்ந்த பலாசம் பங்குனியில் மலரும் என்பர் கம்பர்.

'பங்குனி மலர்ந்தோளிர் பலாசவன மோப்பார்'
(இராமா ; ஊர்தேடு படலம், 70)

மலைகளில் வாழும் குறவர் வேங்கைமலர் மலர்வதைக் கண்டு தாம் மணம் செய்தற்குரிய இளவேனிற் பருவம் வந்ததென்று அறிந்து மணம் புரிவர்; மண நாளைப் புலப் படுத்தும் கணியின் (சோதிடனின்) தன்மை அவ் வேங்கை மரத்தின்பா லுண்மையின் அதனைக் கணி வேங்கையென்று வழங்குவர். மலர்களைக் கொண்டு காலத்தை அறியும் இம் மரபு நீலகிரியில் வாழும் தொது வரிடத்திலும் உண்டு. மலையிலே வளரும் குறிஞ்சியின் மலர் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை மலருமென்றும் அங்ஙனம் மலரும் காலத்தை யளவாகக் கொண்டு அத் தொதுவர் தம் ஆயுளைக் கணக்கிட்டுக் கொள்வரென்றும் கூறுவர்.

இங்ஙனம், மலர்கள் போதையும் நாளையும் காட்டும் திறத்தைத் தமிழ்நூல்களின் வாயிலாக ஆராய ஆராய, பல அரிய செய்திகளும் அவற்றை நமக்கு வழங்கும் புலவர் பெருமக்களின் நுண்ணறிவும் மேன்மேலும் புலனாகி இன் பத்தையும் வியப்பையும் விளைவிக்கு மென்பதில் ஐய மில்லை.

10. சங்க காலத்துப் பெண்களின் நிலை

சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கு வதுவையான வுடன் மனையறம் படுத்ததாகத் தெரிகிறது. அப்பொழுது அவள் வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ற பருவம் வந்தவளாக இருந்திருக்க வேண்டும். சுதமதி யென்பவளது வரலாற்றை நோக்கினும் இவ்வுண்மை தெரிய வருகின்றது.

ஆண்களைப் போலவே அக்காலத்தில் பெண்களும் நல்ல கல்வி யறிவு பெற்றிருந்தார்கள். பல பெண் புலவர்கள் இருந்தார்கள். அவர்களில் எல்லா வருணத் தினரும் உண்டு. பெருங்கோப் பெண்டும் பாரி மகளிரும் அரச குலத்தினர். ஔவையாரும், காக்கை பாடினியார் நச்சள்ளையாரும், ஒக்கூர் மாசாத்தியாரும், காவற் பெண்டும், வேறு பிறரும், பாண்டித்தியம் பெற்றுக் கவி பாடும் சக்தி யுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களில் வெண்ணிக் குயத்தி என்ற குயவர் மகளொருத்தியும், இளவெயினி யென்னும் எயினர் மகளொருத்தியும் சில செய்யுட்கள் இயற்றியிருக்கிறார்கள்.

சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டு நூல்களாலும், சில மகளிர் பௌத்த மதத்தைச் சார்ந்தும் ஜைன சமயத்தைப் பின் பற்றியும் துறவறம் பூண்டு விளங்கினரென்னும் செய்தி தெரிய வருகிறது. இவற்றால் புலமையும் அறிவும் மிக்க பெண்டிர் எல்லாச் சாதியிலும் எல்லாச் சமயத்திலும் இருந்தன ரென்று அறியலாம்.

ஒருவரே பல மனைவியரை மணக்கும் வழக்கம் இருந்தமையை நாம் அறிகிறோம். ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர் கௌணியன் விண்ணந்தாய னென்னும் பிராமணரொருவரைப் பாராட்டி ஒரு பாடல் சொல்லியிருக்கிறார். அதில் 'நின் துணைத் துணைவியர்' என்பதனால் அவருக்குப் பல மனைவியர் இருந்தனரென்று தெரிகின்றது. இவ்வாறு

பல தாரங்களை மணக்கும் வழக்கம் அக்காலத்தில் இருப்பினும், பெரும்பாலும் ஜனங்கள் ஒரு மனைவியையே மணந்து அவளிடம் உண்மை யன்புடையவர்களாக இருந்து வந்தார்கள். புலவர்கள் அரசர்களைப் புகழும் புகழ்ச்சியில் அவர்களுடைய தேவியரையும் சார்த்திப் புகழ்தல் சம்பிரதாயம். அத்தகைய இடங்களில் அரசருக்குரிய பத்தினி ஒருத்தியென்று அர்த்தமாகும்படி செய்யுளமைந்திருத்தலின் இது புலப்படுகிறது. பெண்கள் தங்கள் புருஷர்களிடம் மிக்க பக்தி புடைவர்களாக விளங்கினர். கோவலன் மனைவியாகிய கண்ணகியின் சரித்திரமே போதுமான சாட்சியாகும். மேலும், மணிமேகலையில் மாதவி,

"காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவ ரீயா ராயின்
நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயி னன்பரோடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்"

(ஊரலருரைத்த காதை)

என்று சொல்லுகிருள். இங்கே பெண்களில் மூன்று வகையினர் கூறப்படுகின்றனர். கணவன் இறந்தானென்று கேட்ட மாத்திரத்தில் இயல்பாகவே துயர் தாங்காது உயிர் விடும் பெண்டிர் முதல் வகையினர். அங்ஙனம் விடும் மனநிலையில்லாமல் தீக்குளித்து உயிரை நீக்குபவர் இரண்டாம் வகையினர். கணவன் பெற்ற பதவியைத் தாமும் பெறுவதற்கு ஆயுள் முழுவதும் கைம்மை விரதம் பூண்டு வாழ்வோர் மூன்றும் தரத்தினர். இம் மூவகையினரும் கணவர்பால் பக்தியுடையவர்களே.

கோவலனைக் கொல்வித்த நெடுஞ் செழியன் மனைவிக்கு அவன் இறந்தானென்பதை அறிந்தவுடனே உயிர் பிரிந்தது. பூத பாண்டியன் தேவியாகிய பெருங்கோப் பெண்டு தன் நாயகன் இறந்தமையால் தானும் எரியிற் புக்கு உயிர்

நீத்தாள். பிற்காலத்தில் இந்த வழக்கமாகிய 'சதி' ஒரு குற்றமாகிவிட்டது. இயல்பாகத் துயரந் தாங்காமல் தீக் குளிப்ப தென்பது போய்க் கட்டாயப் படுத்தித் தீயிற் புகுத்தும் வழக்கம் வந்து விட்டமையே அதற்குக் காரணம். பூத பாண்டியன் தேவி தீக் குளிக்கு முன் அருகிலிருந் தோர் அவளை அங்ஙனம் செய்யாது தடுத்தனர். அவள் அவர்கள் பேச்சை மீறிப் பாய்ந்தாள். தன்னைத் தடுப்ப வர்களைப் பார்த்து அவள்,

"பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே"

(புறநா. 246)

என்று இகழ்ந் துரைத்தாள்.

இவ்வாறு கணவனோடு உயிர் விடுவதென்பது எல்லாப் பெண்களிடத்தும் காணப்படவில்லை. முன்னே கூறிய மணிமேகலை அடிகளில் மூன்றும் வகுப்பினராகக் கூறப் படும் மகளிர், கணவர் இறந்த பின்னும் வாழ்ந்து வந்தவர் களே யாவர். அதனல் அவர்களை இழிவாக யாரும் கருதிய தில்லை.

பெண்கள் மேற் சொல்லியபடி பக்தியும் அன்பும் பூண்டு ஒழுகினர்களென்று சொல்லவே, புருஷர்களும் அதற்கு ஏற்ற யோக்கியதை யுள்ளவர்களாய்த் தங்கள் மனைவியரிடம் அன்பு பூண்டு ஒழுகி யிருக்கவேண்டும். அத் தகைய புருஷர்களுக்கும் பெண்களுக்கும் இடையே அமைந்த அன்பைப் புலவர்கள் மிகச் சிறப்பாக வருணித் திருக்கிறார்கள். சில இடங்களில் இக்காலத்துப் போலவே அக்காலத்தும் பெண்கள் கஷ்டப்படும் நிலைமையில் இருந் தார்கள்.

11. விசித்திர சித்தன் அமைத்த கோயில்

1

சிற்பிகளுக்கு ஒன்றும் தோன்றவில்லை; திகைத்துப் போய்விட்டார்கள். வயது சென்றவர்களுக்குக் கோபம் ஒரு புறமும் ஆத்திரம் ஒரு புறமுமாக அவர்களை அலைத்தன. அவர்களால் ஒன்றும் பதில் பேச முடிய வில்லை.

அவர்கள் சாமானியமானவர்கள் அல்லர். விசுவகர்மா, மயன் முதலியவர்களுடைய தொழிலைத் திறம்பட நடத்தி வருபவர்கள். தலைமுறை தலைமுறையாக அவர்கள் குடும் பங்களில் பயிலப்பட்டு வரும் தொழிலில் அவர்களைக் காட்டி லும் மேம்பட்டவர்கள் உண்டா? 'குலவித்தை கல்லாமற் பாகம் படும்' அன்றோ? அவர்கள் கட்டிய அரண்மனை களும், அமைத்த கோயில்களும், நிறுவிய மண்டபங்களும் பல.

அவர்கள் சாஸ்திரம் பயின்றவர்கள். ஆகமங்களில் வல்லவர்கள். லக்ஷணங்களை அறிந்தவர்கள். அவர்கள் அமைத்த சிற்பங்கள் உயிருள்ளவற்றைப் போலவே தோன்றும். உயிருள்ளவற்றினின்றும் ஒரு சிறிதும் வேறு பாடு இல்லாத சிற்பங்களை அமைத்தால், வேலை முடித்த வுடன் அச்சிற்பங்கள் உயிர் பெற்று எழும் என்று கூறுவர் பெரியோர். அந்தச் சிற்பிகள் அமைத்த உரு வங்கள் ஒன்றிரண்டு அங்ஙனம் உயிர்பெற்று எழுந்தன வென்றும் கூறுவர்.

இவ்விதம் சிற்பக் கலைக்கே சிகரங்கள் போன்று விளங்கும் கிழவர்களுக்கு ஒருவன் "வேலை கற்றுக் கொடுக் கிறேன்" என்று வந்தால், அவர்களால் சகிக்க முடியுமா? அங்ஙனம் வந்தவன் சிற்பியா? அல்ல. வயதானவனா? அல்ல. உடலை உழைத்து வாழும் தொழிலாளியா? அல்ல.

வாளேந்திப் போர்த் தொழில் நடத்திப் பொழுது போக்கும் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனவன்.

வேறு யாராவது அவ்விதம் கூறியிருந்தால் அவனை லேசில் விட்டிருக்க மாட்டார்கள் அந்தக் கிழவர்கள். ஆனல் தங்கள் அரசனே அவ்விதம் கூறினல் வேறு என்ன செய்வது? அவன் கீழ்க் குடிகளாக வாழ நேர்ந்த தங்கள் தலை விதியை நொந்துகொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

அந்தக் கூட்டத்தில் இருந்த இளங்காளைகள் கிழவர்களைப் போல அவ்வளவு நம்பிக்கை இழந்தவர்களாக இல்லை. அரசன் இஷ்டப்படி செய்து பார்க்கலா மென்றே எண்ணினர்கள். அரசன் விரும்பிய விதம் செய்து அந்தக் காரியம் சித்தி பெற்றல் அது அரசனுக் கன்றி, அதைச் செய்து முடித்த தங்களுக்கும் கீர்த்தியைக் கொடுக்கும் என்பதை அறிந்தார்கள்.

அவர்கள் அரசன் சொற்படி நடக்க இசைந்ததற்கு மற்ருெரு காரணமும் உண்டு. அரசன் வாளேந்திப் போர் செய்வதிலேயே காலம் கழிப்பவன் அல்லன். பல கலைகளையும் வளர்ப்பதையே தன் முக்கிய நோக்கமாகக் கொண்டவன். அவனும் ஸர்வ கலா வல்லவன்; கவிஞன்; இசை நூல் வல்லவன்; சைத்ரிகன். கேட்க வேண்டுமா? மனதில் தோன்றும் எண்ணங்களைக் கவிதை ரூபமாக வெளிப்படுத்தி, அதைப் பாடுவதுடன் அதனை ஓர் ஓவியமாக வரைந்து உருவகப் படுத்துவான். கவிதை உள்ளத்தில் புதுப் புது எண்ணங்கள் தோன்று மல்லவா? அவற்றைப் பரீக்ஷித்துப் பார்க்கலாம் என்று எண்ணினர்கள் இளஞ் சிற்பிகள்.

முதியவர்கள் அதை ஆமோதிக்கவில்லை. வழக்கத்திற்கு விரோதமாகச் செல்ல மறுத்தார்கள். முன்னோர் வழியினின்று சிறிதும் வழுவ விரும்பவில்லை. அவ்விதம் நடக்கும் காரியங்களில் தாங்கள் கலந்து கொள்ளவும் முடியாது என்று கூறிவிட்டார்கள்.

2

இங்ஙனம் வயது முதிர்ந்த சிற்பிகளால் பைத்தியக் காரன் என்று கருதப்பட்டவன் இன்றைக்குச் சுமார் ஆயி ரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சீபுரத்தி னின்றும் ஆண்டுவந்த பல்லவ அரசனான **மஹேந்திர வர்மன்** ஆவன். அவன் விரும்பியது புதிய முறையில் கோயில் களைக் கட்டவேண்டு மென்பதே.

அந்தக் காலத்தில் கோயில் கட்டப்பட்ட விதம் இப் பொழுது கட்டப்படுவதைப் போன்று இல்லை. அக்காலத் துக் கோயில்கள் சாதாரண வீடுகளைப் போலவே காணப் படும். கல்லும் சுண்ணாம்பும் கலந்து சுவர்களை எழுப்பி, மேலே கூரை வேய்ந்துதான் கோயில்களை அமைப்பார் கள். கூரைக்குப் பதிலாக மரச் சட்டங்களையும், பலகை களையும் அடுக்கி, ஆணி அடித்து மூடுவதும் உண்டு. அப் படிப்பட்ட கோயில்களை இப்பொழுதும் மலையாள தேசத் தில் நாம் காணலாம்.

அங்ஙனம் நிறுவப்பட்ட கோயில்கள் காலம் என்னும் கூற்றுவன் வாய்ப்பட்டு அழிந்துவிடும். மன்னனோ அழியாப் பரம்பொருளாகிய இறைவனுக்கு எழுப்பப்படும் கோயில் கள் அழிந்து விடுவதைக் காண விரும்பவில்லை. அதனால் புண்ணிய கருமத்தின் புகழைப் போல என்றும் அழியா மல் நிலைக்கும்படி கோயில்களை அமைக்க நினைத்தான்.

மன்னன் இளவரசுப் பருவத்தில் அக்காலத்தில் பல் லவர் ஆட்சிக் குட்பட்டிருந்த தெலுங்கு நாட்டின் ஒரு பகு திக்கு அதிபதியாக அமர்ந்து ஆண்டுவந்தான். அந்நாட் டிலே கிருஷ்ணா நதிக்கரை யோரமாக மலைச் சரிவுகளிலே, சுண்ணாம்பு முதலியவற்றின் கலப்பு இல்லாமலே மலையில் குடைந்து அமைக்கப்பட்ட கோயில்களைக் கண்டான். அவற்றைப் பார்த்து உள்ளங்களித்தான். அவற்றைப் போலவே தமிழ் நாட்டிலும் அமைக்க ஆசை கொண்டான்.

அன்றி, தமிழ் நாட்டில் தான் அமைக்கும் கோயில்கள் வடநாட்டில் உள்ளவற்றைத் தோற்கடிக்க வேண்டும் என்று எண்ணினன். அதனல், அவன் வடநாட்டில் உள்ளவற்றைப் போலச் சிறு அறைகளான கர்ப்பக் கிருஹங்களையும் அவற்றுக்கு முன்பு முக மண்டபம் எனப்படும் தாழ்வாரத்தையும் கொண்ட கோயில்களை உண்டாக்குவதுடன் நின்றுவிட விரும்பவில்லை. ஒரே பாறையில் வெளிப் புறங்களையும் செதுக்கி விமானம், சிகரம், ஸ்தூபி முதலியவற்றையும் பக்கச் சுவர்களில், பதுமைகளால் அலங்கரிக்கப் பட்ட பல மாடங்களையும் உண்டாக்கவே விரும்பினன். இவற்றைச் செய்து முடிக்கத்தான் வயது முதிர்ந்த சிற்பிகள் ஒப்பவில்லை.

3

இளஞ்சிற்பிகள் அரசன் எண்ணத்தைப் பூர்த்தி செய்விக்க ஒப்புக் கொண்டாலும் அவர்கள் மனத்தில் பயம் குடிகொண்டிருந்தது. தங்கள் பெரியோர்கள் கைவிட்டு விட்டார்கள். தங்கள் முயற்சி தோல்வியுறுமானல் எல்லோரும் தங்களை மட்டுமன்றி, அரசனையும் ஏளனம் செய்வார்கள். இவ்வித எண்ணங்களால் அவர்கள் ஊசலாடினர்.

அதனல் அவர்கள் தங்கள் திறத்தை நிர்மானுஷ்யமான இடத்தில் பரீக்ஷித்துப் பார்க்க விரும்பினர்கள். தலைநகரத்துக்குச் சமீபமாகப் பல குன்றுகள் இருந்தும், அவ்விடங்களை அவர்கள் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. நூறு மைல்களுக் கப்பால், ஒருவருக்கும் தெரியாத ஒரு சிற்றூருக்குச் சென்று தங்கள் கன்னிச் செயலைத் தொடங்கினர்கள்.

அது தான் இப்பொழுது விழுப்புரத்திலிருந்து புதுச்சேரிக்குப் போகும் ரயில் மார்க்கத்தில் கண்டமங்கலம் எனப்படும் சின்னபாபு சமுத்திரம் ஸ்டேஷனுக்குத்

தெற்கே இரண்டு மைல் தூரத்திலுள்ள மண்டகப் பட்டு எனப்படும் கிராமமாகும். ஏழு வருஷங்களுக்கு அதிக மாகப் பல இளைஞர்கள் ஒன்று கூடி உழைத்துத் தாங்கள் நிர்மாணிக்கும் முதல் குடவரைக் கோயிலைப் பூர்த்தி செய் தார்கள்.

முகமண்டபம் எனப்படும் தாழ்வாரத்தின் பின் புறத் தில் மூன்று அறைகள் செதுக்கப்பட்டன. அவை, பிரும்மா, ஈச்வரன், விஷ்ணு ஆகிய மூவருடைய உருவங்களைக் கொண்ட கர்ப்பக் கிருஹங்களாக இருந்தன. இருபுறத் திலும் துவாரபாலர் உருவங்கள் செதுக்கப் பட்டன. அவை ஒரு கையைக் கதாயுதத்தின் மேல் போட்டுக் கொண்டும், மற்றொரு கையை லாகவமாக வைத்துக் கொண் டும் காணப்படுகின்றன. அவ்விடத்தில் கோயில் கொண் டுள்ள மும் மூர்த்திகளுள் பரமசிவனையே பிரதான மூர்த்தி யாக அமைத்தார்க ளாதலால், துவார பாலர்களுடைய கதாயுதங்களில் பாம்பு சுற்றிக்கொண்டிருப்பது போல அமைத்தார்கள். அந்தக் கோயில் மிகவும் சாமானிய மானதுதான். மாமல்லபுரம் முதலிய இடங்களில் காணப் படும் கோயில்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது நன்கு விளங்கும். சித்திர வேலைப்பாடுகள் அதிகம் இல்லை.

எனினும்! தாங்கள் முதல் முதல் நிர்மாணித்த இந்தக் கோயில் பூர்த்தியானவுடன் அவர்கள் அடைந்த சந்தோ ஷத்துக்கு அளவே இல்லை. அரசனும் ஆனந்தக் கூத் தாடினன். "என்னை **விசித்திர சித்தன்** என்றும் பைத்தி யக்காரன் என்றும் பரிகசித்தீர்களே! இப்பொழுது பார்த் தீர்களா? பைத்தியக்காரன் எண்ணம் பூர்த்தியாகிவிட்டது. எனினும் நான் பைத்தியக்காரனுகவே விளங்கத் தீர்மா னித்து விட்டேன். என்னுடைய விசித்திர சித்தத்தைச் சிற் பத்தில் மட்டுமன்றி, ஓவியம், கவிதை, சங்கீதம், ஆகியவற் றிலும் காண்பீர்கள்!" என்று அரசன் உவகை பூத்துக் கூறினன்.

"பிரும்மா, ஈச்வரன், விஷ்ணு ஆகிய இவர்களுக்கு இருப்பிடமாகிய (அவர்களுடைய விக்ரஹங்கள் அமைக்கப் பட்ட) இக்கோயில் கல்லில்லாமலும், சுண்ணும்பில்லாமலும் விசித்திர சித்தன் என்னும் அரசனல் செய்விக்கப் பட்டது" என்று அந்தக் கோயிலில் பொறிக்கப்பட்டுக் காணப் படும் வடமொழிச் சுலோகத்தைக் கொண்ட கல் வெட் டொன்று அங்கேயிருக்கிறது.

சிறு குழந்தைகள் மணலில் சிற்றல் கட்டி விட்டாலும், எப்படித் துள்ளிக் குதித்து ஓடுமோ, அதைப் போலவே மன்னன் அடைந்த ஆனந்தமும் கரை கடந்து சென்றது என்பது இக் கல் வெட்டால் நன்கு விளங்குகின்றதல்லவா!

---

12. தென்னிலங்கைத் தெய்வம்

கணவனே தெய்வமென்று கருதி ஒழுகிய கற்புடைய மாதருள் மண்டோதரி தலை சிறந்தவளாவாள். தூய வெண்ணீறு துதைந்த மேனியும் சிவபெருமான் சேவடி மறவாச் சிந்தையும் வாய்ந்த அம்மங்கை சிவநெறி வழுவாது செம்மையாக வாழ்ந்து வந்தாள். தன் தலைவன் விதியின் விளைவால் மதிமயங்கி, நஞ்சு தோய்ந்த அமுத மாய சீதையை நயந்தான் என்றறிந்து மதிநலம் வாய்ந்த இம்மாது நடுங்கினாள். பெருமை வாய்ந்த மன்னவன் சிறியனாய் எளியனாய் சீதையின் முன்னே இரந்து வணங்கிய தன்மையை அறிந்து ஏங்கினாள். சீதையால் நேர்ந்த நெடும் போரில் தன் செல்வச்சிறுவன் இறந்தழிந்த செயல் கேட்டுச் சிந்தை நைந்த சீரிய நங்கை,

"தலையின்மேற் சுமந்த கையள்
தழலின்மேல் மிதிக்கின் றாள்போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளள்
நேசத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின்மேற் குறித்த வேடன்
கூர்ங்கணை உயிரைக் கொள்ள
மலையின்மேல் மயில்வீழ்ந் தென்ன
மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்."

மையறு மனத்தாளாய மண்டோதரி தலையின்மேல் சுமந்த கையோடு தழலின்மேல் மிதிப்பவள்போல் அஞ்சி நடந்து சென்று மலைபோற் கிடந்த மைந்தன்மீது அம்பால் அடிபட்ட மயில்போல் விழுந்தாள்; மயங்கினாள்; புலம்பினாள். தன் மைந்தன் குழவிப் பருவத்தை நினைந்து குமுறிக் குமுறி நெஞ்சங் குழைந்தாள். "ஐயனே! வளர்மதி போன்று நீ வளர்ந்துவருங் காலத்து உன் சிலையினால் அரியை வெல்லக் கண்டு வியந்தேனே! இப்போது உன் தலையிலா உடலைக் கண்டு கலங்கப் பாவியேன் என்ன

வினை செய்தேன்? இன்னும் நிலையற்ற இவ்வாழ்வை விரும்பி உயிர் வாழ்ந்திருப்பேனோ? ஐயனே! அழகனே! என் அரும்பெறல் அமிழ்தே! உலக மூன்றினும் ஒப்பற்ற வீரனே! நின் மலர்முகம் காணாது இம்மண்ணுலகில் வாழ் வேனோ?" என்று பலவாறாகப் பன்னிப்பன்னி அழுதாள். அந்நிலையில் மதிநலம் சான்ற அம்மங்கை பின் நிகழவிருக் கும் பெருந்தீமையை நினைந்தாள். நெஞ்சமுருகினாள். தேவரினும் மூவரினும் வலியனாய் இலங்கை வேந்தனும், இராமன் அம்பால் இறக்கப் போகின்றானே என்று எண்ணினாள். எண்ணிய கருத்தைச் சொல்ல நாவெழாது தரைமீது கிடந்த தன் மைந்தனை நோக்கி, "அந்தோ, இலங்கை வேந்தனும் நாளை இத்தகையனன்றோ?" என்று இயம்பும் முறை, அம்மங்கையின் மதிநலத்தையும் கற்பின் பெருமையையும் இனிது உணர்த்துகின்றது.

"பஞ்சேரி யுற்ற தென்ன
அரக்கர்தம் பரவை யெல்லாம்
வெஞ்சின மனிதர் கோல்ல
விளிந்ததே மீண்ட தில்லை;
அஞ்சினேன் அஞ்சி னேன்இச்
சீதையென் றமுதாற் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன்
நாளைஇத் தகையன் அன்றோ?"

என்று மண்டோதரி புலம்பும் மொழிகள் கற்போர் மனத் தைக் கரைப்பனவாம். கண்டோர் கருத்தைக் கவரும் பேரழகு வாய்ந்த சீதை காதலித்த ஆடவரை அழிக்கும் கற்பு வாய்ந்தவள் ஆதலின் அத்திருமகளை "அமுதாற் செய்த நஞ்சு" என்று அரக்க மாதேவி கருதினாள். சீதை யின் அழகென்னும் அமுதை மாந்திய அரசன் அக்கட்டழ கினுள் அமைந்த கற்பென்னும் நஞ்சால் அழிவது திண்ணம் என்றறிந்த மண்டோதரி அக்கருத்தை வெளி யிடும் மொழிகளில் சோகம் பொங்கித் ததும்புகின்றது. அப்பால் ஆவியிழந்த தலைவன் மேனியைக் கண்டு,

" பின்னேயோ விழுந்ததுவும் முடித்தலையோ
படித்தலைய முகம்காட் டாயோ
என்னேயோ என்னேயோ இராவணனுர்
முடிந்தபரி சிதுவோ பாவம்"

என்று மண்டோதரி இரங்கிக் கூறும்பொழுது உயிரிழந்த காதலனை "இராவணனுர்" என்று சிறப்பித்துரைக்கும் செம்மை அம்மங்கையின் நிறையமைந்த நீர்மையை உணர்த்துகின்றது.

இத்தகைய உவமையிலா மதிநலம் பெற்று விளங்கிய மண்டோதரி நாயகன் புண்ணுற்ற மேனியைக் கண்டு புலம்பிய நிலையில், உணர்வரிய மெய்ஞானம் பெற்று உயிர் துறந்து வீடுபெற்ருள். இவ்வாறு தலையாய கற்பு நெறி வழுவாது தலைவனுடன் சென்ற மண்டோதரி, இறைவன் இணையடி யடைந்து பேரின்பப் பெருவாழ்வெய்தினுள். இங்ஙனம் ஈசனிடம் இடையருப் பேரன்பு வாய்ந்து இன்பப்பேறெய்திய மண்டோதரியின் பெருமையை,

" ஏர்தரும் ஏழுலகத்தே எவ்வுயிரும் தன்னுருவாய்
ஆர்கலிசூழ் தென்னிலங்கை அழகமர்வண் டோதரிக்குப்
பேரருள்இன் பமளித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரியவா யாற்குயிலே தென்பாண்டி நாடனைக்கூவாய்"

என்று மணிவாசகப்பெருமான் திருவாசகத்தில் போற்றிப் புகழ்ந்தனர். வரத்தாலும் வலிமையாலும் சிறந்து விளங்கிய இராவணன் மனைவியாயமைந்து, தேவர்கோனையும் வென்று சிறையிட்ட மேகநாதன் அன்னையாகத் திகழ்ந்து, சிவனடி மறவாச் செம்மை வாய்ந்து, கணவன் இறந்த நிலையில் உயிரிழந்து, ஞானத்தால் வீடுபெற்ற நங்கையைப் பஞ்ச கன்னியருள் ஒரு கன்னியாக அமைத்து அறிஞர் பாராட்டுகின்றனர்கள்.

---

13. வீர விளக்கம்

பாரின் பெருமை வீரர் பெருமையாம். வீறு படைத்தவர் வீரர். வீறுவது சக்தி. ஞான வீரர், தர்மவீரர், கர்மவீரர் என வீரர் மூவகைப்படுவர். புலன்களை வென்று பொய் மன மொடுக்கி, தன்னை யறிந்து, தன்மயராகி, ஆன்மகோடிகளுக்கு அருளொளி காட்டினோர் ஞானவீரராவர். வேத ரிஷிகள், வியாஸர், வள்ளுவர், அப்பர், சம்பந்தர், நம்மாழ்வார், வள்ளலார், பரமஹம்சர், ரமணமுனிவர் **ஞானவீரர்** அல்லது ஆத்மவீரர். மனித சமுதாயம் புலிவாய் மான்போல அசுர மாயத்தால் வாடி வருந்தி அறமிழந்து, திறமிழந்து, கதியற்ற காட்டில் கண்ணில்லாக் குழந்தைபோலத் தவிக்கிறது. அப்போது இறைவன் அருட் சக்தி அவதரித்து, அச்சமொழித்து, அபயமளித்து அரக்கரை நலித்து அறத்தை நிலை நிறுத்துகிறது. அத்தகைய அருட்சக்தி வாய்ந்தவர்களே **தர்மவீரர்**. இராமன் கண்ணன், புத்தர், ஏசுநாதர், நபிமணி, நானகர் முதலியோர் தரும வீரராவர். நாட்டின் அடிமைத்தளையை நீக்கி, கல்வி, செல்வம், தொழில், வீரம், விடுதலை, ஒற்றுமை இவற்றிற்காகத் தன்னலம் விடுத்துப் பொதுநலத் தவம்புரியும் திருத்தொண்டர் **கர்மவீரராவர்**. லெனின், மஜினி, ழாந்தார்க், சிவாஜி, குரு கோவிந்தன், ப்ரதாப சிங்கன், வாஷிங்டன், காந்தி போன்றோர் கர்மவீரர். பிரான்ஸின் பெருமை ழாந்தார்க்; இங்கிலாந்தின் பெருமை ஷேக்ஸ்பியர், க்ராம்வெல்; ரோமின் பெருமை தாந்தே, விர்க்கிலியன், அகுஸ்தன், யூலியகேஸரி; கிரீஸின் பெருமை ஹோமர், இலியாது வீரர்; கார்தாகத்தின் பெருமை அனிபால்; அமெரிக்காவின் பெருமை வாஷிங்டன். இவ்வாறு ஒவ்வொரு நாடு வீரரால் பெற்று விளங்குகிறது. வீரர், நாட்டன்னையின் வெற்றித் திருக்கரங்களாவார்.

ஞான வீரன்

தன்னை யறிந்தவன் தேவமனிதன். அவன் கடவுட் கலப்பில் சுடர்பெற வாழ்பவன்; அச்சமில்லான்; அகந்தையில்லான்; மாசறு தூயன்; தேசுறு ஞானி; யோகசித்தன்; தியாக மூர்த்தி; புலனடக்கியோன்; பெருமைமிக்கோன்; இன்னுரை சொல்வோன்; தன்னலமில்லான்; உள்ளத் துறைபவன்; அனைத்திலும் ஒருமயங் காண்போன்; யாருக்கும் தீங்கிலான்; ஆத்மானந்தன்; அருள்வலி மிக்கான்; இன்ப துன்பம் இரண்டும் சமமாக நினைப்பவன்; இத்தகைய தெய்வத் தன்மைகள் பொருந்திய புலவனே ஞான வீரனாவான். அவன் தன்னைப்போல அனைத்தையும் கருதித் தற்பெருமையின்றி, தன்னலமின்றி, அற்புதமான அருள் வல்லபத்தால் உலகிற்கு அறிவும் திறனும், ஒளியும், இன்பமும் நல்கவல்லான். விளக்கு நெய்யும் திரியும் அழிவதைக் கருதாது வெளிச்சந் தருகிறது. அதுபோல இத்தகைய ஞானவீரன் தன்னைக் கொடுத்தும் பிறர்க்கு இதஞ் செய்வான்; அவன் பலாபலன்களிற் கட்டுப்படான். அவன் இறந்தும் இறவான்; பிறந்தும் பிறவான்; செய்தும் செய்யான்; சும்மாவிருந்தும் எல்லாம் புரிந்தவனாவான். அவனைச் சுற்றிக் கடவுட் காந்தம் வீசும். அதுவே பல அற்புதங்கள் புரியும். அத்தகைய மஹாத்மாக்களே பாரத சமுதாயத்தின் பரமானந்தக் கனிகள்.

அத்தகைய கடவுட் பெரியாரே பாரத நாகரிகத்தை அமைத்தனர். தவம், வீரம், தொழில் தொண்டு இந்த நான்கும் பாரத நாகரிகத்தின் நான்கு சக்திகள். பாரத நாடு அத்யாத்ம தீரரைப் படைத்தது! போர் வீரரைப் படைத்தது; தொழிற் புலவரை யீன்றது; அருள் தொண்டரைப் பெற்றது. அத்யாத்ம தீரமே பாரத சமுதாய புருஷனின் தலை; தர்ம வீரம் உடல்; கர்மவீரம் கைகால். அன்பு, அருள், வாய்மை, வீரம்—இவை பாரதவீர யாழின்

நான்கு தந்திகளாகும். இத்தந்திகளை இனிது மீட்டி இன்னிசையளித்த வீரமணிகள் மிகப்பலர்.

"உலகில் இன்னும் ஓர் ஆன்மா துயரில் வருந்துவதைக் காணினும் இந்த மோக்ஷ வாயிலிற் புகேன்" என்று உலகுயிர்களுக்கு இரங்கி மோக்ஷத்தையும் வெறுத்த **புத்தன்** தர்மவீரன். உண்மை தாய், அறிவு தந்தை, அறம் சகோதரன், தயை தோழன், சாந்தம் மனைவி, மன்னிக்கும் தன்மை மைந்தன்—இவை எனது ஆறு உறவினர் என்ருன் **தர்மபுத்திரன்.** தருமன் மாயா நரகத்தை எதிரே கண்டான். அதில் துன்பப் படுவோர் அனைவரும், "புண்ணியனே! தாங்கள் எம்மருகே வர வர எமது நரகவேதனை தணிகிறதே" என்றனர். "அப்படியானல் உங்கள் வேதனை முழுதும் தீர நானே நரகத்தில் குதித்து விடுகிறேன்" என்ருன் தருமன். அவ்வாறே செய்தான்! அது தெய்வ சோதனையாயிற்று. பிறகு இந்திரனே அவனைச் சுவர்க்கத்திற்கு அழைத்துச் சென்ருன். இத்தகைய தியாகம் மிகவும் அரிது. ஒரு காலத்தில் மலையரக்கர் இறக்கை கொண்டு பறந்து உலகைப் பாழ்படுத்தினர். அவர்களைச் சிறகறுத்து ஒடுக்க இந்திரனுக்கு வச்சிராயுதம் வேண்டியிருந்தது. **ததீசி** முனிவரிடம் சென்று "உலகை நலிக்கும் மலையரக்கரை ஒடுக்க உறுதியான ஆயுதம் ஒன்று அளித்தருள வேண்டும்" என்ருன். "இந்தா, எடுத்துக்கொள் என் முதுகெலும்பை! அது வலிய தவத்தால் வைரமானது" என்று முனிவர் தமது வீணு தண்டத்தையே அளித்தார். இது அற்புதமான தியாக வீரமாம்!

மன்னர் நீதி

பாரத மன்னர் மன்னுயிரைத் தன்னுயிர்போற் காத்தனர். பயிர் நலம், உயிர் நலம், உடல் நலம், கலை நலம், கல்வி நலம், செல்வநலம், தொழில் நலம், அமைதி, அன்பு அனைத்தையும் போற்றினர், மனச்சாட்சிக்கு மாறின்றி

நீதி வழங்கினர் ; தொழிலாளருக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டு பண்ணினர் ; நீர்ப்பாசனம், பயிர் விளைவு, கைத் தொழில், வாணிபம், தீர்வைகள், வரிகளுக்காகத் தனித் தனி இலாகாக்கள் இவற்றை முறை வகுத்துக் குடி நலம் போற்றினர் ; இந்திய நாகரிகத்தை உலகில் முந்திய நாகரிகமாக்கினர். காசிக்குச் சென்ற ஏழைப் பார்ப்பானெருவனது குடும்பத்தைப் பாண்டியன் உளவறிந்து காத்தான். அக் குடும்பத்துடன் அத்தெரு முழுதிற்கும் படியளந்தான். இரவில் மாறுவேடம் பூண்டு தானே அத்தெருவைக் காவல் புரிவதுபோல, அவ்வேழையின் வீட்டைப் பாதுகாத்தான். ஒருநாள் வழக்கம் போல 'உஷார்'ப் படுத்த அவ்வீட்டுக் கதவைத் தட்டினான். அன்று அந்தணன் வந்திருந்தான். அவன் "சோர புருஷனோ கதவை யிடிக்கிறான் ?" என்று ஐயுற்றான். பாண்டியன் எல்லா வீட்டுக்கதவுகளையும் தட்டிக் கொண்டு சென்றான். மறுநாள் பெரிய புகார்! "யாரோ என் வீட்டுக்கதவை யிடித்தான். நான் காசிக்குப் போயிருக்கையில் என் மனைவியிடம் வரும் கள்வனே அவன்" என்று முறையிட்டான் அந்தணன். "இதோ அக்கள்வனை ஒறுக்கிறேன்" என்று இரகசியமாகச் சென்று தனது கையை அறுத்தான் பாண்டியன்—குடிகளிடம் பொற்கை பெற்ற பாண்டியன்! குடிகளுக்குத் தன்னால் இம்மியும் இடர்வராது காத்த இம்மன்னனின் வீரம்—அறப்பெருமை—அளவற்றது.

ஆயிரக்கால் மண்டபத்தில் தன்னை மறந்து ஒரு சிலையைச் செதுக்கிக்கொண்டிருந்த சிற்பிக்கு ஒரு பாண்டிய மன்னன் தம்பலம் தாங்கினான். சட்டென்று திரும்பினான் தொழிலாளி ; 'மன்னா!' என்று திகைத்து நின்றான். "நீ தொழிலரசன், தம்பலம் தாங்கும் பையனைக் காணோம். அதனால் உனது வேலைக்கு இடர் நேருமென்று நானே தாங்கினேன்" என்றான் பாண்டியன். நம் மன்னர் தொழிலை வளர்த்த பெருமை யென்னே !

வடக்கே ஒரு மன்னன் பஞ்சகாலத்தில் தொழிலாளி களுக்கு வேலை வேண்டுமென்று தனது அரண்மனையை மூன்றுதரம் இடித்து இடித்து அழகாக அமைக்கச் செய் தான்.

இளங் கன்ருென்று தன் மைந்தன் தேர்க்காலிற் சிக்கி நசுங்கியதற்காகத் தனது அரசிளங் கன்றையே தேர்க்காலில் பலியிட்டான் மனுநீதிச் சோழன். நம் மன்னர் தாம், பிறர், தன்னவர், வேற்றவர் என்று பாரா மல் நீதி கடைப்பிடித்தனர். சேரசோழ மண்டலத்தில் அக்காலம் அற்புதமான வீரர் நிலவினர். "தன் மகன் போருக்குப் புறங்காட்டினுல் அவன் உண்ட மார்பை அறுத் தெறிவேன்" என்ருள் ஒரு வீரத்தாய். அவன் போரில் களிறெறிந்து பட்டது கண்டு அவனை ஈன்ற நாளினும், பெரிதும் மகிழ்ந்தாள் அம்முதியள். நேற்றுத் தன் கண வன் போரில் பட்டான். இன்று தனது அருமைச் செல் வனைத் தலைவாரி அமுதூட்டி, கையில் வேல் கொடுத்து, "செல்; போர் வெல்!" என்று அனுப்பும் தமிழ்த்தாயின் நெஞ்சுரந்தான் என்னே! நெடுஞ்செழியன், இராஜராஜ சோழன், சேரன் செங்குட்டுவன் போன்ற வீர மன்னர் பலரைத் தமிழ்த்தாய் பெற்ருள்.

பாரத வீரம்

கிரேக்க வீரரும், உரோம வீரரும், தோள்வலியை வணங்கினர். பாரதவீரர் ஆண்மைகொண்டு அறங் காப் பதிற் பெருமை கொண்டனர். இராமாயண பாரத புற நானூற்று வீரருக்கு நிகர் உலகில் இல்லை. புத்தருக்குப் பிறகு, சந்திர குப்தன், சமுத்திர குப்தன், அசோகன், பாலாதித்யன், சிலாதித்யன், ஹர்ஷன், பிருதிவிராஜன் காலம் வரை பாரதநாட்டின் வீர விளக்கு புகழோங்கி விளங்கியது. ஜய சந்திரன் வஞ்சனையால் கோரி முகமது பிருதிவி ராஜனை வென்ருன். பாட்ளு யுத்தத்திற்குப்

பிறகு வீர விளக்கு "பக் பக்" என்று அணையும் சமயம் இராஜ புத்திரர், சீக்கியர் மராட்டியரிடையே சக்திமைந்தர் தருமாவேசத்துடன் அவதரித்து வீரச் சுடரைத் தூண்டினர். தேசம், தருமம் இரண்டையும் காக்கவே இவ்வீரர் தமது வாழ்வைப் பலிதான மாக்கினர். "இறந்தால் வீர விண், வென்றால் உலகாட்சி; எழுந்து நில்; போர்புரி! அது வீரன் கடமை; கடமை வழுவினல் இழிவு; இகழ்ச்சி! பயனைக் கருதாதே! பணி செய்யக் கருது! கருத்தைக் கடவுளிடம் இருத்து; உன்னறத்தைச் செய்!" என்னும் கீதையின் வீரவாசகம் மீண்டும் பாரத புத்திரரைத் தூண்டியது. படைவலிமிக்க மூகலாய சாம்ராஜ்யத்துடன், மலையில் திரியும் பில்லர் துணை கொண்டு 25 ஆண்டுகள் தேசவிரதம்பூண்டு தர்மாவேசத்துடன் போர்புரிந்து, சொல்லொணுத் துயர்பொறுத்த **பிரதாபசிங்கனுக்கு** இணை யார்? அவன் வீரவுலகின் விசித்திரம்! **ராவல்சாகி** என்ற அக்னி குல வீரன் நோய்ப்படுக்கையில் சாவது இழிவென்று ஒரு மன்னனுடன் வலுப் போர்செய்து இறந்தான். இரும்பு முளை யடித்த கதவை யானை முட்டித் தள்ளும்படி தனது மார்பையீந்து சமர்வென்ற **சக்தவாத ரஜபுத்திரன்** வீரம் எண்ணினல் மயிர்கூச்செறிகிறது. தனது கற்பைக் காத்த சித்தூர் ரதி **பத்மினி**, நாட்டைக் காக்கத் தன் பதினேரு பிள்ளைகளையும் கணவனையும் வீரமுடன் போருக்கனுப்பினள். தன் மதலையைப் பாம்பீரின் கத்திக்குப் பலியாக்கி அரசிளங் குழந்தையான உதயசிங்கனைக் காத்தாள் **பன்னு** என்னும் வீரச்செவிலி. நீலா என்ற கற்பரசி பகைவர் சிறைப்பிடித்த கணவனை மீட்ட துணிவு கவியேறியது. **துர்க்காதாஸின்** வீரப்புகழ் அற்புதமானது. துர்க்காவதி, தாராபாய் முதலிய வீரமாதர் சரிதை, போதிஸியாழாந்தர் சரிதை போன்றது. சீக்கியர் வீர உதாரணங்கள் இணையற்றன. சுடு சட்டியில் பகைவர் வாட்டியும் தர்மத்தை விடாத **குரு அர்ஜுனன்** கழுத்தைக் கொடுத்தும் அறத்தைக் கடைப்பிடித்த தேசபகதூர், வீரசக்தி வடிவான **குரு கோவிந்**

தன், பகைவர் செங்கலடுக்கிப் புதைத்தபோதும் கலங்காது அகாலன் திருவடி சேர்ந்த **ஜொராபர்**, பதேஹ்சிங், குருவிற்காக வாளேந்தி நாட்டின் விடுதலைப் போர்செய்த **சுந்தரி, பாகோ** எனும் மாதர், ஆனந்தபுரிப் போருக்குப் புறங்காட்டிக் கள்ளத்தனமாக ஓடிவந்த கணவரை "நீங்கள் புடைவை கட்டிக்கொண்டு வீட்டிலிருங்கள்; நாங்கள் வாள்பிடித்துப் போர்புரிகிறோம்" என்று இடித்துச் சுணை வரச்செய்து போருக்கனுப்பிய அகாலிய மாதர்—இவர் உதாரணமெல்லாம் வீரநூல்களிற் பொன்னெழுத்தால் எழுதத்தகும்.

இராம தாஸின் அருள்பெற்று ஹிந்து தருமத்தை நிலை நிறுத்தி ஒருபெரிய சாம்ராஜ்யத்தை யாண்டான் **சிவாஜி.**

சிவாஜியும் வீரன்; நெப்போலியனும் வீரன். எனினும் இருவருக்கும் வேறுபாடுள்ளது. சிவாஜி விடுதலையிழந்த நாட்டிற்கு உயிரீந்தான்; அறங்காத்தான்; அறப்பகைவரை வீழ்த்தினான். நெப்போலியன் குடியரசிற்குச் சிறிது தொண்டு செய்தான். எனினும், தனது நாட்டை நிறைமுறையுடன் ஆண்டு முன்னேற்றாது கோடானு கோடிப் பேர்களைத் தனது மண்வெறிக்குப் பலிவைத்தான். பிரான்சு கோடானு கோடிப் பொருளையும் வாலிப மணிகளையும் இழந்தது. நெப்போலியனும் அலெக்ஸாந்தரும், ஸீஸரும் போரால் சாதித்ததென்ன? எத்தனை மாந்தரை இவர்கள் பேராசை கொன்றழித்தது! குருகோவிந்தன், அர்ஜுனன், பிரதாபசிங்கன் போன்ற பாரத வீரர் போர் புரிந்தனர். எதற்காக? பாரத தர்மத்தைக் காக்கவே. பாரத வீரன் கீதையின் வடிவு. பாரத வீரர் புரிந்தது அறப்போர். ஆர்லியனில் ஆங்கிலேயரை முறியடித்து, பிரஞ்சு நாட்டின் அடிமைத் தளையை முறித்தெறிந்த வீராவேசக் கன்னியான **ழாந்தார்க்கை** ஐரோப்பிய வீரரின் முன்னணியில் வைக்கலாம். அவள் புரிந்தது அறப்போர்; விடுதலைப் போர்.

அறிதல், அறஞ்செய்தல், அருட்பணி புரிதல் இம்மூன்றும் மனிதர் கடமை. கேவலம் உண்டுடுத் துறங்கி, பெற்றுப் பேணி, மூத்துச் சாவதே மானிடத்தின் நோக்கமன்று. இந்த அன்னமயகோச விவகாரங்கள் விலங்குகளுக்கும் உண்டு. நம்மைவிடச் சுதந்தரமாக அவை உண்டுறங்கித் திரிகின்றன. மனிதன் பகுத்தறிவுள்ளவன். அன்பு, அறிவு, ஈகை, இரக்கம், நன்றி, ஒப்புரவு முதலியன மனிதன் இயல்பு. அன்ன விசாரம், சொன்ன விசாரம், சூது, பொறாமை, சினம், தீது, தன்னலம், பேராசை பற்றிப் பிறர்க்கு இடர் செய்து வாழ்வைச் சூதாடுவோர் காட்டுவிலங்கினும் கடு விலங்காவார். அவர் செய்யும் போர்கள் அதர்மப் போர்கள்; அசுரப் போர்கள். அவர் செயல்கள் தசைத்திமிர்கொண்டு நசைமதங்கொண்டு, எளியரைக் கசக்கிப் பிழிந்து, ஈனக்கொடுமைகளால் பிறர் உரிமைகளைப் பறிக்கும் காட்டு மிராண்டித்தனமாகும். அவர் விரிக்கும் வாணிபமெல்லாம் தந்திரமான பகற் கொள்ளையாம். அவர் பெறும் அற்ப மகிழ்வு பிறரைக் கெடுத்த அழிமகிழ்வு. அவர் பெறும் இசையும் பிறரை நலித்த வசையின் வடிவே யாகும். புலிக்குப் பல்லும் நகமும் இருப்பதுபோல அவர்களுக்குக் கத்தியும் படைக் கலங்களும் உள்ளன. அவர் வலிமை பொதுநல நலிவாகும். பஸ்மாசுரன் தொட்டதை எரிக்கும் வரம்பெற்று, சிவன் தலையிலேயே கைவைக்கத் தொடங்கினான். திரிபுர அரக்கர் பெருவலிபெற்று ஊர்களை அழித்தனர். அதே மாதிரி பண்படாதவனுக்குக் கிடைத்த திறமையும் ஆதிக்கமும் உயிர்களை வருத்தும்.

உலகில் அசுரபலம் அட்டூழியங்கள் செய்யும்போது அதையடக்க ஒரு தெய்வ சக்தி அவதரிக்கும்; அவதரித்துள்ளது! கொலைக் கருவிகள் தாங்கிக் கொலையே தொழிலாகும் அதர்மக் கொடுமை இனி யொழியும். தரும சக்தி இப்போது **அஹிம்ஸை**யினால் வெற்றிபெற்று வருகிறது; இனி **ஆத்மசக்தி** யெழுந்து உலகில் அமைதியை நிலைநாட்

டும்; ஒளியைப் பரப்பி இருளை யொழிக்கும்; மனித சமுதாயத்தை ஒரு குல தெய்வ சமுதாயமாக்கும். கத்தி வீரர் போய்ச் சக்திவீரர் வருவர். மாந்தரிடை புகுந்த சைத்தான் ஒழிவான்; சைதன்யம் விளங்கும். இரத்த வெறி யொழியும்; பக்திநெறி பொலியும்; சித்தசுத்தி யுண்டாகும். அதர்மக் கொடுங்கோல் ஒழியும்; ஆத்ம தருமம் உலகை யாளும். மண்வெறி யொழியும்; உண்மையும் உயிரிரக்கமும் பொலியும்.

"எழுக தீரர்! சுத்தான்ம சித்தி பெறுக! உலகமெல்லாம் பலப்பல உடல்களைக் கொண்டுலவும் சுத்தான்ம மயம் என்றுணர்க! பிறகு யாரை யார் அஞ்சுவது? யாரை யார் பகைப்பது? யாரை யார் திருடுவது? யாரை யார் அடக்கி யாளுவது? வருக ஆத்ம வீரர்! வெற்றி பெறுக!!

14. இராமாயண அரங்கேற்றம்*

கம்பர், சோழன் முதலானவர்களுக்கு இராமாயணம் பாடிமுடித்த செய்தியை அறிவித்து, "இது விஷ்ணு பர மாகையால் இதை விஷ்ணுவின் திவ்ய தேசங்கள் பல வற்றிலும் முக்கியமாகிய திருவரங்கம் பெரிய கோயிலில் அரங்கேற்றல் செய்யவேண்டும்" என்று அவர்கள் அனுமதி பெற்று ஸ்ரீகோசத்தை[1] எடுப்பித்துக்கொண்டு, ஸ்ரீரங்கத் துக்குப்போய், அக்காலத்தில் அந்த ஸ்தலத்திலிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குச் செய்தி தெரிவிக்க, அவர்கள் மேற் படி காவியத்தில் நரஸ்துதி பண்ணப்பட்டிருக்கிற தென்பத னுலும் மற்றுஞ் சில அபிப்பிராயத்தினுலும் அசூயை கொண்டு, அக்கருத்தை வெளிப்படுத்தாமல், "சம்ஸ்கிருத பாஷையாயிருந்தால் ஒன்றும் யோசனை பண்ணவேண்டிய தில்லை; இது தமிழாதலால் எப்படி யிருக்குமோ வென்று எங்களுக்கு அனுமானமா யிருக்கிறது; நீரோ பிரபல வித்துவான்; உமது பாண்டித்தியத்தைக் குறித்தும், சொல்லுதற்கு நாங்கள் அருகர்களல்லேம்; தமிழிலே மகா வித்துவான்களாக இருக்கிறவர்கள் தில்லை மூவாயிரவரென் னும் தீட்சிதர்களும், மற்றுஞ் சிற்சில பெயர்களுமாதலால், அவர்கள் குற்றஞ் சொல்லாதபடி கொஞ்சம் பிரயாசைப் பட்டாவது அங்கேபோய் அவர்களுக்குக் காட்டி அவர்க ளுடைய கையொப்பம் வாங்கிவந்தால் உமது காவியத்திற் கும் உமக்கும் அதிக கௌரவமாயிருக்கும்" என்றார்கள்.

*　　*　　*　　*

முன்பு, "நமது காலின்மேல் வண்டியோடியது என்ன?" வென்று அசட்டையாயிருந்த தில்லை மூவாயிரவர் கள் தலையில் நெருப்பு விழுந்தவர்கள் போலப் பரபரப்பாக வந்து கம்பரிடத்திலிருந்த இராமாயண புஸ்தகத்தை வாங் கித் தாங்களே அவிழ்த்துத் தனித்தனியே யாவரும்

---

* 'விநோத ரசமஞ்சரி' என்னும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

1. புஸ்தகம்.

பார்வையிட்டு, சொல்நடை, பொருள்நடை, கற்பனை, கருத்து, சுவை, ஓசை முதலானவைகளையும் விசதமாக ஆராய்ந்தறிந்து, 'தமிழில் இந்தக் காவியத்துக்கு ஒப்பாக வேறொரு காவியமும் இருக்கிறதா!' வென்று நினைத்துக் கம்பரை நோக்கிச் சில கேள்விகள் கேட்கத் தலைப்பட்டார்கள்.

"நாடிய பொருள்கை கூடும்
ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும்
வேரியங் கமலை நோக்கும்
நீடிய வரக்கர் சேனை
நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன்
தோள்வலி கூறு வோர்க்கே"

என்னும் பாடலில் "நாடியபொருள் கைகூடும் என்ற முதல்வாக்கியத்திலே பின்னே சொல்வன வெல்லாம் அடங்கியிருக்க, ஞானமும் புகழு முண்டாமென்று மிகை படக் கூறிய தென்னை?" என, கம்பர், "உலகத்தார் யாவரும் பிரதானமாக நாடும் பொருள் கல்விப்பொருள் செல்வப் பொருள் இரண்டுமே யாதலால், இவ்விடத்தில் அவ்விரு பொருளையுமே சுட்டி, 'நாடியபொருள் கைகூடும்' என்றும், அவற்றுள் கல்வியால் ஞானமும், செல்வத்தாற் புகழுமுண்டாதல் பற்றிச் சாதன சாத்திய முறையாக அவற்றின்பின், ஞானமும் புகழுமுண்டாம்' என்றும் ஞானத்தால் மோக்ஷமும், புகழினாற் புருஷ காரியமாகிய இலக்குமி கடாக்ஷமு முண்டாவது பற்றி அவைகளின் பின் 'வீடியல் வழியதாக்கும் வேரியங்கமலை நோக்கும்' என்றும், இப்பயனனைத்தும் எவர்க்குச் சித்திப்பதெனில் வாழையடி வாழையாக அநேகத்தலைமுறை அழிவின்றி அபிவிருத்தியாய் வரும் இராக்கத சேனைகள் நீறாகி நாசமடையும்படி வென்று, வெற்றி மாலைசூடிய உக்கிர கோதண்டத்தைத் தாங்கிய ஸ்ரீராகவனுடைய புய பராக்கிரமத்தைச் சொல்லுகின்றவர்களுக்கே

யென்பதுதோன்ற, 'நீடிய வரக்கர்சேனை நீறுபட் டழிய வாகை சூடிய சிலையிராமன் றோள்வலி கூறுவோர்க்கே' என்றும் சொல்லியது" என்றார். பின்னும் அவர்கள், "சகல கிரந்த கர்த்தர்களுடைய சங்கேதமும் கடவுள் திருவடியைக் குறித்தே வாழ்த்துதல் செய்வதாயிருக்க, நீர் அத்திருவடியை வாழ்த்தாது 'தோள்வலி கூறுவோர்க்கே' என்று மாறுகொளக் கூறலாய்த் தோளைப் பற்றிச் சொல்லிய தென்னை?" என்ன, கம்பர், "தாடகையைச் சங்கரித்து, சுவாகுவைக் கொன்று, கௌசிகமுனி வேள்வியைக் காத்து, மிதிலையில் சிவனது வில்லை ஒடித்து, சீதையைத் திருமண முடித்து, அயோத்திக்கு மீண்டுவரும் வழியில் பரசுராமனை வென்று, வனத்தில் விராதன் தோளைச் சரித்து, கரதூஷணுதியரை அதமாக்கி, மாய மானைக் கொன்று, கவந்தனை மாய்த்து, மரா மரத்தைத் தொளைத்து, வாலியை வதைத்து, சுக்கிரீவனுக்கு அரசளித்து, மகா ராக்ஷசனை மடித்து, கும்பகர்ணனைச் சேதித்து, மூலபலத்தை முடித்து, ராவணுதி ராக்ஷசர்களையெல்லாம் கருவறுத்து, விபீஷணனுக்கு மூடிசூட்டியது இராகவனது புயபலமே யாதலால் ஆதி தொடங்கி யந்தமட்டும் அவன் தோளாண்மையைச் சொல்வதே இராமாயணமென ஆராய்வோர்க்கு நன்கு விளங்குதற்பொருட்டு 'இராமன் தோள்வலி' என்றும், இராமாயணங் காலக்ஷேபம் செய்வோரைக் 'கூறுவோர்' என்றும் குறிப்பித்ததாம்" என்றார்.

அதற்குமேலும், அவர்கள் ஆங்காங்கு வினவிய வினுக்களுக்கெல்லாம் கம்பர் தக்கவாறு மறுமொழி சொல்லக் கேட்டு, அவரது வித்வ சாமர்த்தியத்தைக் குறித்துச் சந்தோஷப்பட்டு, "மேற்படி 'நாடிய பொருள் கைகூடும்' என்ற பாடலில் 'நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய' வென்பதற்கு நீர் வேறு எதைச் சொன்னுலும் சொல்லிக் கொள்ளும்; அந்த ராக்ஷச சேனை எங்கள் சுவாமியின் நீறுபட்டுத் தான் அழிந்தது" என்று சாதுரியமாகச் சொல்லிச்

'சரிசரி' என்று ஒப்புக்கொண்டு கையொப்பங் கொடுத்தார்கள்.

* * * * *

அதைக் கம்பர் ஸ்ரீரங்கத்தாருக்கு அறிவிக்கப்போன விடத்தில், வைஷ்ணவ சமயாசாரியர்களுக்குள்ளே பரமாசாரியராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் எழுந்தருளியது கண்டு அவருடைய திருவடிகளிலே சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்துத் தமது கருத்தை விண்ணப்பஞ் செய்ய, அவர் கம்பர் பாடின ராமாயணத்தைக் கடாக்ஷித்தருளி, அது சொற்சுவை பொருட்சுவை செறிந்ததாயும் பகவத் விஷயமானதாயும் அற்புதமாயு மிருப்பதை நோக்கி, இவருடைய புலமை கேவலம் மானுஷிகமாக இருக்கவில்லை' என்று அதிசயித்து, 'இந்தக் காவியத்தை அவசியம் பிரசித்தம் பண்ணுவிப்பது நமது கடமையென்று திருவுளங்கொண்டு, கம்பரை மண்டப கைங்கரியம் ஒன்று செய்யச் சொல்லி நியமித்து, அதை அவர் செய்து முடித்தவுடனே சுபதினம் பார்த்து அரங்கேற்ற எத்தனமாயிருக்கையில், நம் பெருமாளாகிய ஸ்ரீ ரங்கநாதர் அர்ச்சகன் முகத்தால் ஆவிர்ப்பவித்துக், "கம்பா, நீ நம் சடகோபனைப் பாடினையோ? பாடினால்தான் நாம் உனது இராமாயணத்தைத் திருவுளம் பற்றுவோம், இல்லாவிடில் அது நமக்கு அங்கீகாரம் ஆகாது, பிள்ளாய்" என்றார்.

* * *

ஸ்ரீ ரங்கநாதர் அருளிச் செய்ததுகொண்டு கம்பர் ஆழ்வார் விஷயத்தில் நூறு கட்டளைக் கலித்துறையில், 'வேதத்தின் முன் செல்க' என்று தொடங்கி 'ஆழ்வாரந்தாதி' அல்லது 'சடகோப ரந்தாதி' என ஓரந்தாதி பாடினர்.

சடகோப ரந்தாதி பாடி முடிந்தவுடனே ஸ்ரீ ரங்கநாதன் சந்நிதியிற் கடல்போல விசாலமும் மலைபோல உன்னதமுமாகிய பெரிய ஆயிரக்கால் மண்டபத்தில் சதுர் சாஸ்திர பண்டிதர்களாகிய சம்ஸ்கிருத வித்துவான்களி

லும், பூரண பாண்டித்தியமுள்ள தமிழ்க் கவிஞர்களிலும், உபய கவிகளிலும் வைதிக சம்பிரதாயத்தை யுடைய ஸ்மார்த்தர் மாத்வர் வைஷ்ணவர்களென்னும் திரிமதஸ்தர்களிலும், ராஜாக்கள் பிரபுக்கள் முதலானவர்களிலும் வெகு பெயர்கள் திரண்டு நிறைந்திருக்க, பிரபத்தி நிஷ்டாபரராகிய ஸ்ரீமந் நாதமுனிகள் திருவோலக்கத்திற் கம்பர் தெய்வ வணக்கஞ்செய்து அவையடக்கமுங் கூறிக் கிரமமாக இராமாயணத்தை அரங்கேற்றினர்.

அரங்கேற்றும்பொழுது ஆரணியத்திற் சூர்ப்பநகை மூக்கறுபட்டு இராவணனை நினைத்துக்கொண்டு புலம்பினதைச் சொல்லிய பாடல்களில் ஒன்றாகிய,

"உருப்படிவ மன்மதனை ஒத்துளரே யாயினும்உன்
செருப்படியிற் பொடிஒவ்வா மானுடரைச் சீறுதியோ
நெருப்படியிற் பொடிசிதர நிறைந்தமதத் திசையானை
மருப்பொடியப் பொருப்பிடியத் தோள்நிமிர்த்த வலியோனே"

என்பதை வாசிக்கக் கேட்டு, அதில் 'உன் செருப்படியிற் பொடியொவ்வா மானுடரை' என்பதைக் குறித்து அவ்விடத்திலிருந்த வைஷ்ணவர்களில் ஒருவர் கம்பரை "ஏங்காணும், சாக்ஷாத் பரப்பிர்மமாகிய சக்கரவர்த்தித் திருமகனையும் இளையாழ்வானையும் ராக்ஷசப் பட்டிமகனாகிய ராவணனுடைய செருப்புக்காலில் ஒட்டிக்கொண்டிருக்கிற பொடிக்கும் ஒவ்வாத மானுடரென்று சொல்லி அபசாரப்படுகிறீர்?" என்ன, கம்பர் பக்கத்திலிருந்த அம்பிகாபதி அவருக்குத் தண்டஞ்சமர்ப்பித்து, "சுவாமி, ஒரு விண்ணப்பம்; யுத்தத்திற் கும்பகர்ணன் இறந்த செய்தியறிந்து இராவணன் அழுத செய்தியைச் சொல்லுமிடத்து, அவன் சுத்த வீரனாகையால் அழுதானென்று சொல்வது கௌரவத் தாழ்வென்று நினைத்து, 'பூர்வம் தனக்குண்டாகிய ராவணன் என்ற பெயரின் காரணத்தை அவன் வெளியிட்டானென்று உபசார வழக்காகச் சொன்னவர் ஒப்பற்ற பகவான் விஷயத்தில் அபசாரப்படுவாரா?" என்ன,

ஸ்ரீமந் நாதமுனிகள் நகைத்தருளி, அவ்வைஷ்ணவரை நோக்கி, 'உன் செருப்படியிற் பொடியொவ்வா மானுடர்' என்றது, கம்பர் தாம் சொல்வதாகச் சொல்லாமல் துஷ்ட ராக்ஷசியாகிய சூர்ப்பநகை கூறுங் கூற்ருகச் சொல்வதாத லால் ராமலக்ஷ்மணர்கள் அவள் அபிஷ்டப்படி நடவாததனுலும் அவள் மூக்கை அறுத்ததனுலும் அவர்களை விரோதித்து அவ்வரக்கி, தூஷிக்கையில் இப்படியே சொல்லுவாளாகையால், இவ்வாக்கியத்துக்கு இது ஒரு கருத்தும், 'செருப்படி' என்பதை 'செரு படி' எனப் பிரித்து, 'உனது யுத்த பூமியில் ஒரு தூசுக்கும் ஒப்பாத மனிதர்' என வேருெரு கருத்துங் கொள்ளும்படி சிலேடையால் இரட்டுற மொழிதலாகச் சொன்னமையால் இது வித்துவ சாமர்த்தியமே யல்லது அபசாரமன்று' என, அதைப்பற்றிச் சகலரும் பரம சந்துஷ்டி யடைந்தார்கள்.

* * *

அதற்கு மேலும் அச்சபையிலுள்ள அறிஞர்கள் ஆங்காங்குக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஏற்றபடி சமாதானஞ் சொல்லி இராமாயணம் முழுவதும் வாசித்து முடிந்த பின்பு, ஸ்ரீமந் நாதமுனிகள் 'இந்தக் காவியம் இவ்வளவு சிறப்புடையதாக இயற்றப்பட்டும், பாலில் விஷங்கலந்தாற் போல இடையிடையே நரஸ்துதி பண்ணப்பட்டதனுலல்லவோ, இங்கிருக்கும் வைஷ்ணவர்கள் அசூயை கொண்டு, தில்லை மூவாயிரவர் முதலியோருடைய கையொப்பம் வாங்கிவரும்படி இவரைப் பலவிடங்களிலும் ஓடி யுழலச் செய்தார்கள்' என்று உய்த்துணர்ந்து, கம்பரை நோக்கி, "இதிகாசமாயும் பகவத் சரிதமாயு மிருக்கின்ற இதில் என்ன நிமித்தத்தால் நரஸ்துதி செய்யவந்தது?" என்று வினவ, கம்பர் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியார் சிறுவயதுமுதல் தமக்கு நெடுநாளாக அன்னவஸ்திராதிகள் கொடுத்து ஆதரித்ததையும், அவரது பிரயத்தினத்தால் அத்திருவெண்ணெய் நல்லூரிலே இந்நூல் செய்யப்பட்டதையும், அம்பிகாபதி விவாகத்திற் பாதபூஜை நடக்குஞ்

சமயத்தில் சகலமான ஜனங்களும் வந்து நிறைந்திருக்கும் கலியாண வாசலில் மேற்படி முதலியார் வர, 'ஆயிரம் பனை யப்பனுக்குப் பல்லுக்குத்த ஈர்க்குக் கிடையாது' என்பது போல, கிராமாதிபதியாகிய அவருக்கு இருக்க இடமில்லா ததனால் அங்கிருந்தவர்களெல்லாம் எழுந்து அவரை "இங்கே வரலாம், இங்கே இருக்கலாம்" என்று உபசரித்த பொழுது, அவர் "நீங்கள் ஆரும் எழுந்திருக்கவேண்டாம்" சும்மாவிருங்கள், எனக்கு இதோ இடமிருக்கிறது" என்று சொல்லி அவர்களை அங்கிருக்கச்செய்து, ஒருவரும் இருப்ப தற்கு யோக்கியமின்றி ஒழிந்திருந்த சாக்கடை வரம்பின் மேல் நின்றுகொண்டிருக்க, தாம் அவரைப்பார்த்து, "அத் தான்! அவ்விடத்திலேயா இருக்கின்றீர்கள்? நல்லதிருங் கள்" என, அதுகேட்டுத் தம் மனையாள் சகியாமற் பரித பித்து "இத்தனை ஜனங்களுக்கும் இங்கே இடமிருக்க, எங்கள் அண்ணா அவர்களுக்கு மாத்திரம் அந்தச் சாக்க டையா கிடைத்தது?" என்ன, "அடி பைத்தியக்காரி! உங்கள் தமையனாரை இந்த இடத்திலேயா வைக்கிறது! நான் வைக்குமிடத்தில் வைக்கிறேன்" என்று தாம் சொன்னதையும் விவரணமாக விண்ணப்பஞ் செய்து, "இக்காரணங்கள் அனைத்தையும் கருதித்தான் அந்தப் பிரபுவை அடியேன் இதிற் சொல்லி வைத்தேன்" என்றார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் 'இஃது உபகாரஸ்மிருதி' என்று திருவுளங்கொண்டு, கம்பரை நோக்கி, "நீர் சொல்வதெல் லாம் சரிதான்; உம்மாலே பாடப்பட்ட பதினாயிரம் பாட லுக்குள் நூற்றுக் கொன்று விழுக்காடு நூறுபாடலில் அவர் பெயரைச் சொல்லி யிருக்கிறீரே? இப்படி மகா காவியத்தில் அடிக்கடி சொல்லுவது யுக்தமன்று; 'அள வுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்' ஆதலால், ஆயிரத் துக் கொன்றாகப் பத்துப் பாடலில் மாத்திர மிருந்தாற் போதும்" என்ன, கம்பர் அதுகேட்டு 'அருமைப்பட்டுப் பாடிய தொண்ணூறு பாடல் வீணாய்ப் போய் விடுகின் றனவே, என்று மன வருத்தப் படாமல், "சுவாமி! மகா

பாக்கியம்; கற்பகமும் காமதேனுவும் நாணத்தக்க ஔதாரிய முடைய அந்தப் பிரபுவின் குணாதிசயம் அடியேனுடைய சிற்றறிவுக்கு எட்டாமையால் விலையுயர்ந்த மாணிக்கத்தைக் குருவிந்தக் கல்லுக்கு ஒப்பாக மதிப்பவரைப் போல நூற்றுக் கொன்ருக மதித்தேன்; தேவரீர் ஆயிரத்துக் கொன்ருக மதித்தது விசேஷமே" என்று சாதுரிய மாகச் சொல்ல, ஸ்ரீமந்நாத முனிகள் திருவுள மகிழ்ந்து கிருபை கூர்ந்து கம்பருக்குக் "கவிச்சக்கரவர்த்தி" எனப் பட்டப்பெயர் கொடுத்து, "அவர் பாடின ராமாயணத்திற்கு அச்சபையிலிருந்த வித்வஜனர்களிற் சிலர் சாற்று கவி கொடுக்கவும், அதில்இரண்டு கவியை எடுத்து, திவ்வியப் பிரபந்தத்தோடு சேர்க்கவும், அந்தத் திவ்விய தேசத்தில் நடக்கும் உச்சவாதிகளில் அழகிய மணவாளன் திருவீதிப் புறப்பாடாகித் திரும்பிக் கோயிலுக்குட் செல்லும்போதெல்லாம், அப்பெருமாளைக் கம்பர் கட்டுவித்த மண்டபத்தில் எழுந்தருளப் பண்ணித் திருவந்திக் காப்பு நடப்பிக்கவும், சடகோபரந்தாதியில் இரண்டு பாடலைத் திருக்குருகூரில் ஆழ்வார் சந்நிதியில் நித்தியப்படியாகச் சேவிக்கவும் வேண்டும்" என்று கட்டளையிட்டு, தமது கோஷ்டியிலுள்ள வைஷ்ணவர்களைக் "கம்பர் கவிச் சக்கரவர்த்திக்குப் பெருமாள் சேவை பண்ணுவித்து, ஸ்ரீ சடகோப முதலானவைகளும் பிரசாதியுங்கள்" என்பதாக நியமித்தார்.

---

15. கல்வெட்டு நினைவூட்டும் கதை

இது இலங்கைத் தீவு. இதன் கிழக்குக் கரையில் திரிகோணமலை என்னும் துறைமுகம் இருக்கிறது. இத்துறைமுகத்தின் ஒரு மருங்கில் பாறைகள் நிறைந்திருக்கின்றன. பன்னூறு ஆண்டுகளாய்க் கடலலைகள் இப்பாறைகள் மீது மோதிக்கொண்டிருக்கின்றன. ஆனால் இப்பாறைகளின் அடக்கமே அடக்கம்! மௌனமே மௌனம்! எத்தனை ருசிகரமான சம்பவங்களையும் எத்தனை துன்பமிக்க காட்சிகளையும் இவை கண்டிருக்கின்றன! ஆனால் எவற்றைக் குறித்தாவது வாய்விட்டுப் பேசுகின்றனவா! இல்லை. ஆனால், மனிதன் தானே அவற்றில் ஏதாவதொன்றன்மீது ஓர் சம்பவத்தைக் கல்வெட்டாக எழுதித் தெரிவித்தாலன்றி, இவையாக ஒன்றும் பேசுவதில்லை. தம்மீது வரையப்பட்டதைமட்டும் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் மங்காது காத்துக்கொள்கின்றன.

இத்திரிகோண மலைமீது, மாலை மயங்கும் வேளையில் நித்தியநைமித்திய கருமங்களை முடிக்கும்படியாக ஓர் பூஜாரி போவதுண்டு. பூஜை நிகழும் புனித ஸ்தலத்துக் கருகில் ஓர் கற்றூண் காணப்படுகிறது. அதன் மீது சில கல்வெட்டெழுத்துக்கள் வரையப்பட்டுள்ளன. அவை கூறுவதென்ன?

"பிரான்ஸிஞ ரீடின் ஞாபகார்த்த மாக;
1627-ஆம் ஆண்டு எப்பிரல் மாதம் 24-ஆந் தேதி"

என்பதே. இவ்வார்த்தைகளின் மர்மம் யாது?

* * *

16-ஆம் நூற்றூண்டின் இறுதியில் **ஜன்வான் ரீட்** என்னும் ஹாலந்து தேசத்துச் சீமானெருவர் அவர் தேசத்து ஆதிக்கத்துக்கு அப்பொழுது உட்பட்டிருந்த இந்தத் திரி

கோண மலைத் துறைமுகத்துக்கு அதிபதியாய் அனுப்பப் பட்டார். இவ்வேலையை அவர் மேற்கொண்ட காலத்தில் மணமாகாத யுவராய் இருந்தார். ஆண்டுகள் பல சென்றன. கடலோரமாய் ஒருநாள் இவர் உலாவிக்கொண்டிருக்கை யில் தம் வாழ்க்கையைப் பயன்படுத்த ஓர் பெண்மணி தம் மருகில் இருந்தால் சுகமாயிருக்குமென்று எண்ணினர். ஆனல் அத்தகைய மணத்தைப் பெறத் தாம் ஹாலந்து செல்வதோ அசாத்தியம். ஆகையால் அக்கால வழக்கப் படித் தம்முடைய கையுறையை (Glove) ஹாலந்து தேசத் திலிருந்த தம் நண்பனுக்கு அனுப்பி, தம் பெயரால் தாம் குறிப்பிட்ட உத்தமியை மணந்து, அன்னளை இலங்கைக்கு வருவித்துக்கொண்டார்.

பத்தாவும் பாரியும் ஒப்புயர்வில்லா அன்புடன் இல் லறத்தை நடாத்தினர். அவர் தம் மணவாழ்க்கை கவின் பெற்றுப் பொலிய ஓர் சுந்தர குமாரியும் அவதரித்தாள். இன்பம் நிலையாக நிலவும் இயல்பற்றதல்லவா? புத்திரி பிறந்த சின்னளில் தாய் மரித்தாள். ஆவியை இழந்த சடலம்போல் தந்தை செயலற்ருர். நாள்பல சென்றன. புத்திரியின் காட்சி அவருக்குப் புத்துயிரளித்தது. சுந்தர வனிதையான தன் அன்னையின் பிரதிபிம்பமாகவே அவள் விளங்கினுள். பிரான்ஸீனு என்று தந்தை அவளுக்குப் பெய ரிட்டார்.

தந்தையே அவளுக்கு எல்லாவற்றுக்கும் எல்லாமா யினர். போஷகர் அவரே; நண்பர் அவரே; குருவும் அவரே. பிரான்ஸீன பருவமுற்று ரூபவதியாய் விளங் கினள். இளம் பெண்கள் அனுசரிக்கும் அலங்கரிப்பு முறைகளையும் மாயப்புனைவுகளையும் அவள் அறியாதிருந் தாள். தனக்குத் தோன்றியவாறு உடுத்திக் கொள்ளு வாள். மிதியடியில்லாமலே வெளியேறுவாள்.

இந்நாட்களில் ஓர்நாள் ஒரு பிரபு குமாரன் அரசியல் விஷயமாக ரீட் அதிபதியிடம் முன்னறிவிப்பு யாதுமின்றி

வந்தான். **காப்டன் பிலிப்பு வேர்மியுதன்** என்பது அவன் பெயராகும். நாவாய்ப் படைத் தலைவனாய் உலகின் பல பாகங்களுக்கு அவன் சென்றிருந்ததுண்டு. இளம் பெண்கள் பலரை அவன் கண்டதுண்டு. ஆனால் பிரான்ஸீனாவுக்கு ஒப்பாக எந்தப் பெண்ணையும் அவன் கண்டிருந்ததில்லை. தன்னையே மறந்தவனாய் அவள் அழகில் ஈடுபட்டான். யுவர்களையே பார்த்திராத பிரான்ஸீனாவும் அவன் மீது பிரேமை கொண்டாள்.

தாய் உயிரோடிருந்திருப்பின் பல விஷயங்களில் தன் புத்திரிக்கு நல்லாலோசனை கூறியிருப்பாள். இன்ன இன்ன நேரத்தில் இவ்வளவுதான் பேசுவது உசிதமென்றெல்லாங் கற்பித்திருப்பாள். ஆனால் தாயில்லையல்லவா? தந்தையோ, இவ்விஷயங்களில் தனயைக்குப் போதிக்க வேண்டியவை சிலவுண்டு என்றுகூட அறியாதிருந்தார். ஓர் உத்தம காதலனே தம் புத்திரிக்கு வாய்த்தானென்று அகமகிழ்ந்தார்.

நாட்கள் பல சென்றன. பிரான்ஸீனா தன் ஆடல் பாடல்களை யெல்லாம் மறந்தாள். தான் விருப்போடு வாசித்து வந்த புத்தகங்களை யெல்லாம் துறந்தாள். பிலிப்புவின் நினைவாகவே யிருந்தாள். தான் எண்ணியிராத ஓர் இன்ப வாழ்க்கை தனக்கு வாய்க்கப் போவதை எண்ணிக் குதூகலித்தாள்.

* * *

சந்திர ராஜன் தன் வெண்ணொளி பொலிய சமுத்திரக் கன்னிகையைச் சோபித்து அவளுடன் விளையாடிக் கொண்டிருக்கையில் பிலிப்பும் பிராஞ்சீனாவும் தோட்டத்துக்குள் புகுந்தனர். அவள் அறியாத வேளையில் பிலிப்பு அவள் கைவிரலில் தன் கணையாழியை அணிவித்தான். அவ்வளவே! ஒப்பற்ற காதலுக்கும் ஒழிவு உண்டு என்பார்கள் ஞானிகள். அச்சமயம் யாரோ பிலிப்பைக் கூவினர். பிலிப் பரபரப்புடன் பிரிந்து சென்றான்.

பிலிப்பு மாளிகையினுள் வந்தான். ஒரு தளகர்த்தன் அப்பொழுதுதான் கப்பலிலிறங்கி வந்தானென்றும், அவன் அவசரமாகப் பிலிப்பைக் காண விரும்புகிருன் என்றும் அறிவிக்கப்பட்டது. வரவேற்பு அறையில் இருவரும் சந்தித்தனர். தளகர்த்தன் அவன் கையில் சில முத்திரையிட்ட கடிதங்களை ஒப்புவித்து, அவனுக்கு மேலான ஓர் உத்தியோகம் கொடுக்கப்படப் போவதாகவும், அது வேண்டுமாகில் இலங்கையிலிருந்து அதே கப்பலில் தன்னுடன் அப்பொழுதே புறப்பட வேண்டுமென்றும் கூறினுன். எப்பாகத்தில் உத்தியோகம் என்பது தளகர்த்தனுக்குந் தெரியாது; பிலிப்புக்கும் தெரியாது. அரசாங்கக் கட்டளைப்படி அவன் இலங்கைத் தீவைவிட்டு உடனே நீங்க வேண்டியிருந்தது. உயர் பதவியின்மீது நாட்டமுடைய பிலிப்பு அதற்கு இணங்கினுன். முத்திரைக் கடிதங்களைக் கப்பலில்தான் உடைத்துப் பார்க்க வேண்டுமென்று அவற்றில் எழுதியிருந்தது. தளகர்த்தனுடைய பரபரப்பில் பிலிப்பு அப்படியே புறப்பட்டு விட்டான். இவர்கள் சம்பாஷணையை உடனிருந்து கேட்டுக்கொண்டிருந்த ரீட் அதிபதியும் வழியனுப்பத் தொடர்ந்து சென்ருர். பிரான்ஸீனவிடம் சொல்லிக் கொள்ளக் கூடாமையைத் தெரிவிக்கும்படி அதிபதியிடம் பிலிப்பு கூறினுன். கப்பலுக்குச் செல்லும் படகில் தளகர்த்தனுடன் பிலிப்பு புறப்பட்டு விட்டான்.

* * *

பிலிப்பைப் பிரிந்த பிரான்ஸீன தன் அறைக்கு நேராக வந்தாள். மர்மம் தெரியாததால் நித்திரா தேவியை அவள் வெறுத்தாள். நிகழ்ந்தது இன்னதென்று பிரான்ஸீனவுக்குத் தெரியாது. சிறிது நேரங்கழித்து வெளியே வந்து பார்த்தாள். ஒரு படகு துறைமுகத்திலிருந்து புறப்படும் ஓசை அவள் செவிகளிற் பட்டது.

திரும்பவும் உள்ளே வந்தாள். படகேறிச் சென்றவன் தன் காதலனே என்பது அவளுடைய ஆயாவால்

அவளுக்குத் தெரிந்தது. "ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் செல்லுகிறரே! திரும்பி வருவாரா, அல்லது வாராமலே இருந்து விடுவாரா? போகிற இடத்தில் அவருக்கு என்ன ஆகுமோ? வேறெரு பெண்ணை மணந்து என்னை மறந்து விடுவாரோ?" என்றெல்லாம் எண்ணினள். பின்னைய எண்ணமே அவளை மிகவும் துன்புறுத்தியது.

தூரத்தே கப்பல் நிற்பதைக் கண்டாள். வீட்டை விட்டு வெளியே ஓடினள். கோட்டையைக் கடந்து சென்று ஒரு பாறைமீதேறி நிகழ்வதைக் கவனித்தாள். பிலிப்புக்கு விடை கொடுக்கும்படியாக ரீட் அதிபதியின் ஆணையால் திரிகோணமலைக் கோட்டையில் பீரங்கி வெடித்தது. பிலிப்புவும் புறப்பட்டுவிட்டான் என்றறிவிக்கக் கப்பலில் பிரதி பீரங்கி வெடித்தது. பீரங்கிப் புகை யெழும்பக் கப்பல் அசைந்தாடிச் செல்வதைப் பிரான்ஸீனு கண்டாள். உலகம் அவளுக்குக் கசப்பாகத் தோன்றிற்று. தன் கை விரலில் பிலிப்பு அணிவித்திருந்த கணையாழியைக் கழற்றி யெறிந்தாள். "இதோ நானும் வருகிறேன்" என்று சொல்லிச் சமுத்திரத்திற் பாய்ந்தாள். அதோடு இம்மாய உலகிலிருந்து மறைந்தாள்.

தம் ஏக புத்திரியை இழந்த தந்தை மனமுடைந்தவராய், திரிகோணமலைப் பாறையில் கற்றூண் ஒன்றில் வெட்டிய கல்வெட்டே முன் நாம் குறிப்பித்தது.

நீங்கள் திரிகோண மலைக்குச் செல்வீராகில் இன்னும் அக்கல்வெட்டை அங்கே காண்பீர்கள்.

---

16. தொல்காப்பியர் காலத்துத் தமிழர் நாகரிகமும் மதமும்

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களை உடைய ஓர் இலக்கண நூல். பிற்காலத்து நூல்களிற் காணப்படுவதுபோல இந்நூலுக்கு முன் கடவுள் வாழ்த்துச் செய்யுள் காணப்படவில்லை. ஆசிரியரோடு ஒரு சாலை மாணவரான ஒருவர் எழுதிய பாயிரமே நூலின் தொடக்கத்திற் காணப்படுகின்றது. ஆசிரியரின் மதக் கருத்துகள் யாவை என்றறியத்தக்க குறிப் பொன்றும் நூலில் எங்கும் காணப்படவில்லை.

ஆசிரியர் சமயத்தைப் பற்றி வெவ்வேறு கருத்துக்கள் வழங்குகின்றன. நூலில் நிகழும் பின் வருவனபோன்ற வற்ருல் ஆசிரியர் காலத்தில் வைதிகமதம் தமிழ் நாட்டில் ஓங்கி வந்தமை புலனுகும். அவையாவன :

(1) நான்மறை முற்றிய .... ஆசான் (சிறப்புப் பாயிரம்.)

(2) மரபிற்கோடல் அந்தணர் மறைத்தே (பிறப் பியல், 20.)

(3) ஐயர் யாத்தனர் கரணமென்ப (கற்பியல், 4.)

(4) நூலே .... அந்தணர்க்குரிய (மரபு. 70.)

(5) மாயோன் .... (அகத். 8.)

இவ்வாறு பார்க்குமிடத்து, ஆசிரியரின் சமயத்தைப் பற்றி அறிய ஏதுக்கள் கிடைக்காமற் போயினும், நாட்டில் வைதிக மதம் பரவியிருந்தமை தெள்ளிதில் விளங்கும்; பௌத்தம், சமணம் ஆகியவை விளங்கிவந்தமையை நேராகக் குறிக்கும் குறிப்பும் நூலிற் காணப்படவில்லை.

எழுத்ததிகாரம்

நூலின் உள்ளே புகுந்து காண்போமாயின் முதல் இரண்டு அதிகாரங்களிலும் மதத்தைப் பற்றிய குறிப்புக்

கள் விசேஷமாக இல்லையென்றே கூறவேண்டும். எழுத்தை யும் சொல்லையும் பற்றி ஆராயும் அவ் விரு பகுதிகளிலும் தத்துவ ஆராய்ச்சிகளுக்கு இடமில்லை. ஆனல் நம் முன் னோர் தமிழ் எழுத்துக்களுக்கு இட்டிருக்கும் பெயர்கள் அவர்கள் மனநிலையை ஒருவாறு நமக்குப் புலப்படுத்து கின்றன. தமிழெழுத்துக்கள் முதல், சார்பு என இரு வகைப்படும். முதல் எழுத்துக்கள் உயிர், மெய் என்ற இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்பெயர்கள் அரிய பொருள் பொதிந்துள்ளமை இலகுவிற் புலனுகும். இன்னும்,

(1) மெய்யோடியையினும் உயிரியல் திரியா,

(2) மெய்யின் வழியது உயிர்

என்பவை போன்ற தமிழிலக்கணக் கருத்துக்கள் உடல், உயிர் ஆகியவற்றின் உண்மைகளைப் பின்பற்றி அமைக்கப் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. உயிர் தனித்திருக்கும் தன்மையும் உடலை இயக்கும் தன்மையும் இவ் விலக்கண விதிகளால் நன்கு தெரியவருகின்றன. இன்னும் "மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்" என்ற சூத்திரம் அரிய கருத்தினைக்கொண்டு விளங்குவது ஆராய்தற்குரியது. அக ரம் இலக்கணத்தில் இரு கூருகப் பயன்படும். எந்த மெய்யையும் உச்சரிப்பதற்கு உதவுவதாய் அதனேடு ஒட்டி வழங்கும் அகரம் ஒன்று; தனித்து உயிராய் வழங்கும் அகரம் மற்ருென்று. இவ்விரண்டும் ஒரே தன்மையின் மாறுபாடுகளே. 'அகர முதல் எழுத்தெல்லாம்' என்றபடி எழுத்துக்களுக்கெல்லாம் ஆதியாயும், மூலமாயும் இருப்ப தும் அதுவே. முழுமுதற் கடவுள் எல்லாவற்றிற்கும் மூல மாகவும், முதலாகவும் இருந்து, தனித்து நின்று தன் செய லைச் செய்தும், எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்று அவற்றை இயக்கியும் வரும் உயரிய உண்மையை நம் முன் னோர் எத்துணை நுட்பமாக அறிந்து தம் இலக்கண முறை வைப்பிற் கையாண்டுள்ளனர் என்பது நினைக்க இறும்பூது

விளக்குமன்றோ! இதனால் கடவுளறிவு அவர்களிடம் எவ்வாறு சிறந்தோங்கியதென்பதும் விளங்கும்.

சொல்லதிகாரம்

இரண்டாம் அதிகாரமாகிய சொல்லதிகாரத்தில் பெயர்களின் திணைவகுப்பு தமிழுக்கே உரிய ஒரு சிறப்பமைதி. உயிர்ப்பிராணிகளை அவற்றின் அறிவு காரணமாக உயர்திணை, அஃறிணை என்று பாகுபடுத்தியது அறிவின்பால் அவர்கள் வைத்திருந்த பெருமதிப்பைக் காட்டுகின்றது.

அன்றியும், சூத்திரப்பொருள் இன்னதென்று கூறுமிடத்தில் எளிய மற்றொரு சொல்லை அமைத்திருக்கக் கூடிய இடத்தில் ஆசிரியர் **மெய்யறிபனுவல்** என்று கூறுவது அவர் காலத்தில் தமிழகத்தில் பல தத்துவ நூல்கள் விளங்கினமையை வலியுறுத்தும்.

இவ்வாற்றால் தொல்காப்பியர் காலத்து வைதிகக் கருத்துக்களும், நூல்களும் நம் நாட்டிடையே நன்கு விளங்கினவென்பது இவ்விரு அதிகாரங்களாலும் நன்கு பெறக கூடும். அன்றியும் வட சொற்களைத் தமிழிற் கையாளுவதற்கும் விதிகள் கூறப்பட்டுள்ளன. பிற திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன தம் நிலை சிதைந்து வடமொழி வழியே செல்லுவனவாக, தமிழொன்றே தன்னியல்பிற் சிறிதும் மாறாமல் வட மொழிச் சொற்களையும் கருத்துக்களையும் வேண்டு மளவில் ஏற்று அவற்றைத் தன்னோடு இழைத்து ஒன்று படுத்தி இன்றுகாறும் விளங்கிவருவதற்கு நம் பண்டைத் தமிழரின் சீரிய மனப்பான்மையே காரணமாகும்.

பொருளதிகாரம்

தமிழிலக்கணத்துக்கே சிறப்பான பொருளதிகாரம் முன்னிரு அதிகாரங்களைப்போல அல்லாமல் பண்டைத் தமிழரின் நாகரிகத்தையும் சமயத்தையும் அறிவிக்க மிகச்

சிறந்த கருவியாக விளங்குகின்றது. ஏறக்குறைய கி. பி. முதல் நூற்றாண்டில் எழுந்த பல தமிழ் இலக்கியங்களுக்கும் இப்பொருளதிகாரமே இலக்கணமாக விளங்கிற்று. இதன் ஒன்பது இயல்களுள் மூன்று ஆடவர்க்கும் மகளிர்க்கும் இடையே விளங்கும் இன்பப் பாகுபாடுகளை அறிவிக்கும்; இரண்டு இயல்கள் போர்முறை போன்ற உலகச் செய்தி களைக் கூறும்; எஞ்சிய நான்கு இயல்களும் மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபு என்ற இலக்கண அமைதிகளைக் காட்டும்.

நிலம், நான்கு இயற்கைப் பகுதிகளைக் கொண்டதாகக் கூறப்படுகின்றது; அவை மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சியும், காடும் காடு சார்ந்த இடமுமாகிய முல்லையும், கடலும் கடல் நிலமுமாகிய நெய்தலும், வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதமுமாகும். இவை அகப் பொருளில் திணை என்றும் வழங்கப்பெறும். இத்திணைகள் ஒவ்வொன்றும் முதல், கரு, உரி என்ற மூன்று பொருள் களை உடையன. முதல், திணைக்குரிய இடத்தையும் காலத் தையும் குறிக்கும்; கரு, அந்நிலத்துக்குரிய கடவுள், மனிதர், மரம், பறவை, தொழில், ஆயுதம் முதலியவற்றை மொழியும்; உரி அத்திணைக்குரிய காதலொழுக்கத்தைக் காட்டும்.

கடவுளர்

இத்திணைகட்குரிய கருப்பொருள்களுள் நிலத்தெய்வங் களும் அடங்கும்.

> மாயோன் மேய காடுறை யுலகமும்
> சேயோன் மேய மைவரை யுலகமும்
> வேந்தன் மேய தீம்புன லுலகமும்
> வருணன் மேய பெருமண லுலகமும்

என்ற அகத்திணையியற் சூத்திரத்தால் மாயோன் முல்லைக் கும், முருகன் குறிஞ்சிக்கும், இந்திரன் மருதநிலத்துக்கும், வருணன் நெய்தல் நிலத்துக்கும் உரிய கடவுளாகக் கருதப்

பட்டமை தெரியவரும். இவ்வகை நிலங்களோடு, குறிஞ்சியும் முல்லையும் திரிந்தமையால் உண்டான பாலை நிலத்திற்குச் சூரியன், நெருப்பு, கொற்றவை முதலியோர் கடவுளாயினர். இவ்வரலாற்றை ஊன்றிக் கவனிப்போர்க்கு இக்கடவுள் அவ்வந்நிலங்களுக்குரிய இயற்கைச் சக்திகளே என்பது தெள்ளிதில் விளங்கும்.

இந்நிலக் கடவுளரையே யன்றி முழுமுதற் கடவுள் ஒருவர் உண்டென்பதையும் தொல்காப்பியர் காலத்துத் தமிழர் அறிந்திருந்தனர். அதன் மூவகைநிலை கொடிநிலை, கந்தழி, வள்ளி என்று கூறப்படும்.

இன்னும், முதனூல் இன்னதென்பதை விளக்கும் போது ஆசிரியர் "வினையி னீங்கிய விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதனூ லாகும்" என்பதால் இருவினைகளும் நீங்கிய ஞானநிலையின் அருமையும் அவர்களாற் போற்றப்பட்டதென்பது தெரியவருகிறது.

இவற்றோடு கடவுளர்க்கு உருவங்கள் சமைக்கப் பெற்று வழிபட்டு வந்தமையும் தொல்காப்பியத்தால் நமக்குத் தெரியவருகின்றது. ஒரு தலைவன் தன் தலைவியை விட்டுப் பிரிதற்காகும் காரணங்களுள் கடவுளர்க்குரிய பிரதிமைகளைத் தேடும் பொருட்டுப் பிரிதலும் ஒன்றாகக் கூறப்பெற்றுள்ளதை நோக்குக.

இல்லறத்தில் அமர்ந்த மகளிர் தெய்வம் அஞ்சிவந்தனரென்று கூறப்படுதலாலும், தெய்வவாழ்த்து, தெய்வக்கடம், வழிபடுதெய்வம் என்ற சொற்றொடர்கள் நூலிற் காணக்கிடத்தலாலும் இல்லறத்தோர் நேரிய முறையில் தெய்வ பூசை செய்துவந்தனர் என்று அறிகிறோம். தேவபாணி, புறநிலை வாழ்த்து என்பன தெய்வங்களுக்குரிய பாடல் வகைகளாகும். "தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்" என்ற சூத்திரத்தால் கடவுளர்க்கு உயிர்ப்பலி வழங்குந் தன்மையும் மக்களால் மேற்கொள்ளப்பட்டமை விளங்கும்.

வீர வழிபாடு

பண்டைத் தமிழர் வீரத்திற் சாலச் சிறந்தவர்கள். போரிடுதல் அவர்களுக்குள் ஓர் அறமாகக் கருதப்பட்டு வந்தது. பொருளதிகாரம் புறத்திணையியல் இப்போர் முறைகளை விளக்கவே எழுந்ததுபோலும். போரில் விழுந்த வீரர்கள் மிகவும் சிறப்பாகப் பாராட்டப்பெற்றனர். ஒருவன் சண்டையில் வெட்டுண்டு வீழ்வானுனல் ஏனையோர் அவனைச் சூழ்ந்து நின்று பல பறைகளைக் கொட்டிப் பிள்ளையாட்டு என்ற ஒரு வகை ஆட்டத்தை ஆடுவர். இவ்வாற்ருல் இறந்தவன் உயிர் மேலுலகத்துக்கு அனுப்பப்படும் என்று அவர்கள் கருதினர். கால்கோள், நீர்ப்படை, நடுகல், வாழ்த்து என்ற புறத்துறைகள் வீரர்களைத் தெய்வமாக்கி வழிபடும் முறையைப் புலப்படுத்துகின்றன. இறந்த வீரனை ஒரு கல்லில் பிரதிட்டித்து, அதனை நீராட்டி, அதனை ஓரிடத்தில் அமைத்து வாழ்த்தி வழிபாடுசெய்தல் ஒரு பெரு வழக்கமாயிற்று. இதுவே தமிழ் நாட்டின் கோயில் வளர்ச்சிக்கு மூலம் என்றும் கூறலாம்.

சில நம்பிக்கைகள்

இக் காலத்திலும் நம்மிடையே வழங்கும் பல நம்பிக்கைகள் தொல்காப்பியர் காலத்திலும் வழங்கின. கட்டு, கழங்கு, முதலியவற்ருல் குறிசொல்வது, நிமித்தங் காண்பது, ஓரையும் நாளும் கொள்வது முதலியன பலவும் அக்காலத்துத் தமிழரிடையிலும் விளங்கி வந்தன. பல ஆறுகளும் வனங்களும் புனித முடைமையாகக் கருதப்பட்டு அவற்றிற்குப் புண்ணிய யாத்திரைகள் செய்யப்பட்டன.

சாதிகள்

இன்று காணப்படுவன போலத் தமிழரிடை தொல்காப்பியர் காலத்துப் பல சாதிகள் காணப்படவில்லை. கல்விமான்கள் அறிவரென்றும், ஆட்சிபுரிபவர் மன்னர் என்றும், குடியானவர்கள் வேளாளர் என்றும் அழைக்கப்

பட்டனர். வேளாளருள் உழுதுண்பவர் என்றும் உழுவித் துண்பவரென்றும் இரு வகையினர் உண்டு. கானவர், வேட்டுவர், இருளர், குன்றவர், என்ற மலை நாட்டினரை யும், கோவலர், இடையர், ஆயர், பொதுவியர் என்ற முல்லை நாட்டினரையும், களமர், உழவர், கடையர் என்ற மருத நிலத் தினரையும், நுளையர், திமிலர், பரதவர் என்ற நெய்தல் நாட்டினரையும், எயினர், மறவர் என்ற பாலை நிலத்தவரை யும் பற்றி இந்நூலிற் காண்கிறோம். இவர்கள் அவ்வந்நிலங் களுக்குரிய சாதாரண மக்கள். இவர்களுள் தலைவர்களை வெற்பன், பொருப்பன், அண்ணல், தோன்றல், கொண் கன், துறையன், ஊரன் என்று அழைப்பர்.

இவற்றை நோக்குவோமானல் மக்கள் சமூகம் இடத் தாலும் தொழிலாலும் வகுக்கப்பட்டமை புலனாகும். தொல்காப்பியத்தில் அந்தணர், வைசியர் இவர்களைப் பற் றிய பிரஸ்தாபங்களையும் காண்கிறோம்.

மேலே கூறியவாற்றால் தமிழர் நாகரிகம் தொல்காப் பிய காலத்தில் ஆரிய நாகரிகத்தோடு நன்றாகப் பிணைந்து தன்னியல் வழாமல் சிறக்க விளங்கி வந்தமை நன்கு தெரிய வரும். இவ்வாறு யாதோர் அவிரோதமுமின்றி தழைத்ததா லன்றோ என்றும் நிலைத்திருக்கும் வன்மையுடன் அது இருந்து வருகின்றது.

௬. குறிப்புரை

க. கடவுள் வாழ்த்து

தாயுமானவர்: இவர் சைவ வேளாள குலத்தில் தோன்றியவர். திருச்சிராப்பள்ளியை ஆண்ட நாயக்கர்களின் சமஸ்தானத்தில் சிறிது காலம் வேலை பார்த்துவந்து பின் துறவியானார். இவர் குரு மௌன குரு சுவாமிகள் என்பவர்.

தாயுமான சுவாமிகள் எழுதிய பாடல்கள் யாவும் எளிய நடையில் அமைந்தவை; பக்திச் சுவை ததும்புகின்றவை.

ஆசைக்கு ஓர் அளவில்லை என்பது பல உதாரணங்களால் விளக்கப்படுகிறது.

அகிலம் - உலகம். அளகேசன் - குபேரன். அலந்திடுவர் - துன்பப்படுவர். காயகற்பம் - நீண்டகாலம் வரையில் உடம்பை நிலைக்கச்செய்யும் ஒரு மருந்து; காயம் - உடல்; கற்பம் - காலத்தில் ஒன்றன் பெயர். பாசக்கடல்-ஆசையாகிய கடல். மனதற்ற - ஆசையற்ற.

உ. நீதி

1. திருக்குறள்

குறட்பாக்களாலாகிய நூல் குறள் எனப்படும், 'ஈரடிவெண்பாக்குறள்'. 'திரு' என்பது நூலுக்கு அடை. தமிழ் மொழியின் சிறப்பை உலகுக்கு விளக்கி நிற்கும் நூல் இது. பல மொழிகளில் பெயர்க்கப்பட்டுளது. உயரிய நீதி நூல். 1330 குறள் 133 அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இந்நூலுக்குப் பதின்மர் உரை எழுதியுள்ளார்கள். இந்நூலைச் சிறப்பித்துச் சங்கப் புலவர்கள் தனித்தனியே பாடியதாக உள்ள பல வெண்பாக்கள் திருவள்ளுவமாலை என்று வழங்கும். திருவள்ளுவமாலையிலிருந்து இரண்டு செய்யுட்கள் தனிப்பாடல் என்ற பகுதியில் இருப்பதைக் காண்க. குறளையோ அதன் கருத்தையோ தம் நூலில் எடுத்தாளாத தமிழ்ப் புலவரே இலர் எனல் வேண்டும்.

முப்பால், உத்தரவேதம், தெய்வ நூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, தமிழ்மறை, பொதுமறை முதலியன இந்நூலின் மறு பெயர்களாகும். இது பதினேன் கீழ்க்கணக்கைச் சேர்ந்தது.

இதனை இயற்றிய திருவள்ளுவர் சுமார் 1800 ஆண்டுகட்கு முன்பிருந்தவர். இவருடைய சாதி, மதம், பிறசெய்திகள் முதலியன தெரியவில்லை. பலர் பலவாறு கூறுவர். நாயனர், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், செந்நாப் போதார்

முதலிய பல பெயர்கள் இவருக்கு வழங்குகின்றன. துறவறமே சிறந்ததாகக் கருதப்பட்டு வந்த காலத்தில் இவர் இருந்தார். இல்லறமே நல்லறம் என்பதைத் தம் நூலில் நன்கு வலியுறுத்தியிருக்கிறார். இவர் தம் மனைவியாராகிய வாசுகியம்மையார் சிறந்த கற்புடைய வாழ்க்கைத் துணையாக விளங்கினார் என்பர்.

1. ஒல்லும் வகையால் - தத்தமக்கு இயலும் திறத்தால். செல்லும்வாய் - அஃது எய்தும் இடத்து. செயல்: வியங்கோள் வினை.

2. இல்லவள் - மனைவி. மாண்பு ஆனால் - நற்குண நற்செய்கைகளை யுடையவள் ஆனால்; மாண்பு: குணவாகு பெயர். கடை: ஏழனுருபு.

3. அன்பு சார்பு அறத்திற்கே என்பர் - அன்பு துணையாவது அறத்திற்கே என்பார்கள். மறத்துக்கும் அஃதே துணை - (ஒருவன் செய்த பகைமைபற்றி மனத்தில் சினம் நிகழுமாயின் அந்தச்) சினத்தை நீக்குதற்கும் அந்த அன்பே துணையாம்.

4. அனிச்சம் - ஒரு பூவின் பெயர். திரிந்து - வேறுபட்டு. குழையும் - வாடும். விருந்து - விருந்தினர். தீண்டிய வழி யல்லது வாடாத அனிச்ச மலரினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம்.

5. அணி - ஆபரணம். மற்று: அசை. இன்சொலன் ஆதற்கு இனமாகலின் பணிவுடைமையும் உடன் கூறினார்.

6. ஞாலத்தின் - நில உலகைக் காட்டிலும். மாண - மிகவும். காலம் நோக்குவதல்லது பொருள் நோக்கலாகாது என்பது கருத்து.

7. சீர்தூக்கும் - (பாரத்தை) வரையறுக்கும். கோல் - துலாக் கோல்; தராசு. அமைந்து - எல்லாவித லட்சணங்களாலும் பொருந்தி.

8. ஆக்கம் - செல்வம். ஊங்கு - மிக்க. அறிந்து அடங்கிப் பயன் கொள்வோர் மனிதரேயாதலால், உயிர்க்கு என்பது மனிதருடைய உயிர்க்கு என்ற பொருளைத் தரும்.

9. எய்தாப்பழி - தாம் எய்தற்குரியதல்லாத பழியை.

10. அழுக்காறு - பிறர் ஆக்கம் பொறாமை. அழுக்காறாமை: அழுக்காற்றைச் செய்யாமை. ஒன்னார் - பகைவர். அதுவே சாலும் என்பதில் பிரிநிலை ஏகாரம் தொக்கது.

11. அறம் கூறான் - அறம் என்று சொல்லுதலையும்செய்யாமல். அல்ல செயினும் - பாவங்களைச் செய்வானாயினும். என்றல் - என்று சொல்லப் படுதல்.

12. நயன் இல - நீதியொடு படாத சொற்கள். சொல்லி

னும் எனவே சொல்லாமை வேண்டும் என்றபடி.

13. அறிவினுள் - தமக்கு உறுதி நாடும் அறிவுகள் எல்லா வற்றிலும். செறுவார்க்கும் - பகைவர்க்கும்.

14. ஒப்புரவு - உலக நடை. விற்றுக்கோள் தக்கது - தன்னை விற்றாயினும் கொள்ளும் தகுதியை யுடையது. 'ஒப்புரவினால் கெடுவது கேடன்று' என்பது கருத்து.

15. தோன்றாமை - மக்களாய்ப் பிறவாமை. இகழ்வார் அப்பொழுது இல்லாமையின் நன்றென்றார்.

2. பழமொழி

ஒவ்வொன்று ஒவ்வொரு பழமொழியை விளக்கக் கூடிய 400 வெண்பாக்கள் அடங்கிய நூல் பழமொழி யெனப்படும். இது பதினெண் கீழ்க்கணக்குகளில் ஒன்று. பழமொழிகளை அமைத்துச் செய்யுட்களைச் செய்வதில் பண்டைக்காலத்துப் புலவர்க்கு அதிகவிருப்பமிருந்தது. அதன் காரணமாகப் பழமொழிகளை விளக்கும் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

இந்நூலை எழுதியவர் முன்றுறை யரையனார் என்ற சிற்றரசராவர். இவர் பாண்டியனுக்கு உட்பட்டவர்; மதம் ஜைனம்; காலம் கடைச்சங்க காலம்.

1. மிக்குடையாராகி - மிக்க பொருளை யுடையாராகி. ஒற்கப்பட முயல்தும் - வறியர் ஆம்படி முயற்சிப்போம். நற்கு - நன்கு. நளிர் வரை - பெரிய மலை. கை உய்ந்தார் இல் - கை வருந்துதலைத் தப்பினவர்கள் இல்லை.

2. கிளைகள் - சுற்றத்தார். நல்ல வினைமரபின் - நல்ல செய்கையினாலே. மனைமரம் ஆய மருந்து - மனையில் வளர்ந்துள்ள மருந்தாகிய மரம்.

3. ஆற்றவும் - மிகவும். தமவே - தம்முடைய நாடுகளே. ஆற்று உணா - வழிக்குக் கொண்டுபோகும் உணவு.

4. தேர்தல் - தேடல். மருத்துவர் - வயித்தியர்.

5. முட்டு இன்றி - குறைவில்லாமல். உடைய பொழுதின்கண் - செல்வமுடைய சமயத்தில். அட்டிற்று - அட்டிலின் கண் உள்ள பொருள்; அட்டில் - சமையலறை. கலியூழிக்காலம் - கலிபகவான் அதிகாரம் செய்யும் கடைசியுகமாகிய கலியுகம். நட்டார் - நண்பர்.

6. கணக்கு - நூல். முட்ட - முடியும்படி. பகலும் - நாள் தோறும். முனியாது - வெறாமல். 'நூல் ஒன்றினைப் பல கால் கற்றலினும் கேட்டலே நன்று.

7. நமர் - நம்மவர்கள். புறந்தந்தார் - காப்பாற்றி உலகத்

தில் விளங்கச் செய்தவர்; 'புரந் தாரை' என்ற பாடத்துக்குப் பாது காத்தவர்களை என்பது பொருளாகும். கிளர்-விளங்கு கின்ற. மணிநீடு - மணிகள் மிகுந்த. கல் - மலை. வெற்ப - குறிஞ்சிநிலத் தலைவனே; ஆடூஉ முன்னிலை. கோடு - மரக் கொம்பு.

8. காழ் ஆர மார்பா - வட மாகக் கோக்கப்பட்ட முத்தினை உடைய மார்பனே. கைகாவா- ஒழுக்கங்களைப் பாது காவாத. நேர்ந்து - மனமிசைந்து. ஊக் கல்-தீமைசெய்ய முயற்சித்தல். 'நொந்து ஊக்கல்' என்றும் பாடம். நாராயம்-நாராயணாஸ் திரம் என்னும் அம்பு.

9. அங்கண் விசும்பு – இட மகன்ற ஆகாயம்; என்றது பாம்பு பற்ற வருங் காலத்தில் ஓடிவிடுவதற்கு வசதி மிகுதி யாக இருத்தலைக் காட்டியவாறு. பாரிக்கும்-பரப்பும். திங்களும் என்றதில் உம்மை, சிறப் பும்மை; உபகாரம் செய்வ தும் சிறந்த வெளிச்சத்தை யுடையதும் என்றபடி. காண் டும் - காண்கிறோம். அறை - பாறை. உறல்பால-வரவேண்டி யது.

10. புனல் - நல்ல நீர். மன நலம் ஆகாவாம் - மனத்தால் நல்லன ஆகமாட்டாவாம். கீழ்- கீழ்மக்கள்; ஆகுபெயர். இழி வினால் உயர்திணை அஃறிணை யாயிற்று.

3. ஆசாரக் கோவை

தமிழர்கள் வழக்கத்தில் கொண்டிருந்த ஆசார நியமங் களைக் கோவைப் படுத்தி வெண் பாக்களால் உரைக்கும் நூல் ஆசாரக் கோவை எனப்படும். இந் நூலில் ஒழுக்கத்துக்கு வேண்டிய செய்திகள் கூறப் பட்டுள்ளன. இதுவும் பதி னெண் கீழ்க்கணக்கில் ஒன்று கும்.

1. இன்னாத - இனிமை யாகாத செயல்களை. நட்டல் - சிநேகம் செய்தல்: இவற்றைக் கைக்கொள்ளவேண்டுமென்பது கருத்து.

2. வனப்பு - அழகு. மீக்கூற் றம் - செல்வாக்கு. எய்துப - அடைவார்கள்.

3. எழுச்சிக்கண் - புறப்பட எழும் சமயத்தில்.

4. பாரித்து - இல்லனவற் றைக் கற்பித்து. செவ்வி - காலம்; சமயம்.

5. ஆள் - மனிதரின் பலம். வினை - தொழில் முயற்சிகள். இறப்ப - மிகுதியாக. மன்னிய- பொருந்தியிருக்கும்.

4. ஏலாதி

ஏலமும் வேறு சில கடைச் சரக்குக்களும் சேர்த்துச் செய் யப்படும் ஒரு சூர்ணம் உடற் பிணியைத் தீர்க்கும் மருந்தாகி, ஏலாதி எனப்படும்; ஏலாதி போல, இந் நூற்செய்யுட்களில்

பயின்றுள்ள நீதிகள் மன நோயைத் தீர்ப்பனவாகும் என்று கொண்டு இந் நூலை ஏலாதி என்றார். இந் நூலும் பதினெண் கீழ்க்கணக்கிலொன்றாகும்.

இதனை இயற்றிய கணி மேதாவியார் என்பவர் சோதிடத்திற் சிறந்தவரென்பது அவருடைய பெயரால் விளங்குகின்றது; கணி - சோதிடம்; அல்லது சோதிடனுமாம்; "கணி மொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்"—நளவெண்பா.

1. கொலை புரிதல் என்றது மக்களைக் கொல்லுதலைக் குறித்தபடி. கொல்லான் என்றது பிற உயிர்களைக் கொல்ல மாட்டான் என்றபடி. மறை - பிறருடைய ரகசியங்கள். மூங்கை - ஊமன். இறையில் - கடவுளைப்போல.

2. புணர்வு உவத்தல் - அன்புடையோர்பால் சேர்ந்திருக்கும் காலங்களில் அந்தச் சேர்க்கையைக்கண்டு மகிழ்தல். நோதல் - அன்புடையார்க்கு இடுக்கண் வருங்கால் தாமும் வருந்துதல். பிரிவிற்கு அவறல் - அன்புடையார் பிரியின் வருந்துதல்; அவல் + தல். மென்புடையார் - மிருதுவான குணமுடையோர்கள்.

3. இடையைக் கூறியதனால் பெண்களைக் குறித்தபடி; எனவே பெண் கல்வி வற்புறுத்தப்பட்டது. ஈடு - நேராகுகை; அல்லது செல்வம் முதலிய பிறவற்றால் வரும் பெருமை. புடைசால் - பக்க அழகு மிகுந்த. எண் - கணிதம். எழுத்து - இலக்கணம்.

4. தலை - கூந்தல்; ஆகுபெயர்; கணவன் என்பாரும் உளர். பெண்டாட்டி - பெண். வாயிழந்த வாழ்வினர் - ஊமர். 'கைத்தூண் இழந்தார், பொருள் இழந்தார்' என்று கூட்டுக. வைத்து - மறுமைக்கெனச் சேமித்து வைத்து. வழங்கி - தான தர்மங்கள் செய்து.

5. கடம் - கடன். கைத்து - செல்வம். உடையராய் - செல்வமுடையவர்களாய். இல்லுள் ஊண் ஈத்து உண்பார். படையராய் - அடுக்கு அடுக்காகச் சுக போகங்களை உடையவர்களாய்.

5. பெருங்கதை நீதிகள்

பெருங்கதை என்பது உதயணன் கதை என்றும் வழங்கும். இஃது ஆசிரியப்பாவால் ஆன ஓர் சிறந்த தமிழ்க் காப்பியமாகும். ஜைன நூல். இதை இயற்றியவர் கொங்கு வேள் எனப்படுவார்; அதனால் இதனைக் 'கோங்கு வேள் மாக்கதை' என்பாரும் உளர்.

இந் நூலை டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் அச்சிட்டுதவியுள்ளார்கள்.

1. தறுகண் - வீரம். வரம்பில் - அளவற்ற. ஆசு இல் சூழ்ச்சி - குற்றமற்ற ஆலோ

சனே. மகள் கொடை - பெண் கொடுத்தலே. நேரார் - உடன் படார்.

2. அற்றம் - அழிவு, மெலிவு, அச்சம். குரவர் - பெரியோர். ஒன்றி - ஒற்றுமையுடன் தம் முட் கலந்து. கடிதற்கு-விலக்கு வதற்கு.

3. நாட்டினை - நிலை நிறுத் தினுய்.

4. ஆர்தல் - நுகர்தல்; அனு பவித்தல் உயர்ந்த மாக்கள் - பெரியோர். உறுபகை - மிகுந்த விரோதம். இழிந்த மாக்களு டன் இன்பம் ஆர்தல் ஒரு வரைக் கெடுப்பதுபோல, உயர்ந்தோரின் பகைமை கெடுப்பதில்லை என்பது கருத்து.

5. மரம் முதல் சாய - மர மானது அடியோடு அழியும் படி. மருந்து கொண்டாங்கு- அதனைப் பிடுங்கி மருந்தாக உபயோகித்துக் கொண்டாற் போல. வலித்தல் வேண்டி - பலப்பட வேண்டுமென்று விரும்பி. நம்பி - ஆண்களிற் சிறந்தோன். பிரச்சோத னன் என்ற ஒரு சக்கரவர்த்தி வஞ்சனையால் உதயணன் என்ற மகாவீரனைச் சிறையிட்டிருந் தான். பின் அந்த உதயணனுல் அவன் பலவித நன்மை களைப்பெறவே இவ்வாறு கூறி னுன்.

௬. காதை

1. மணிமேகலை

மணிமேகலை என்பது தமிழ் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று மற்றவை சீவகசிந்தா மணி, சிலப்பதிகாரம், வளையா பதி, குண்டலகேசி என்பன வாம். இந்நூல் மணிமேகலை என்ற பெண்ணைப் பற்றிக் கூறும். கோவலனுக்கு மாத வியினிடம் பிறந்தவள் மணிமே கலை. இந்நூல் பௌத்த மதத் தைச் சார்ந்தது. இலக்கியச் சுவை நிரம்பியது. "மணிமே கலை நூல் நுட்பம் கொள்வ தெங்ஙன்," என்று சிவப்பிர காச சுவாமிகள் என்ற வீர சைவப் பெரியார் இந்நூலைப் புகழ்ந்திருப்பது இதன் பெரு மையைக் காட்டும்.

இதனை இயற்றியவர் மது ரைக் கூலவாணிகன் சாத்த னுர் என்பவர். இவர் கடைச் சங்கப் புலவர். சிலப்பதிகார ஆசிரியராகிய இளங்கோ வடி கள் காலத்திலிருந்து அவரால் மிகவும் மதிக்கப் பெற்றவர்.

ஆதிரையைப் பற்றிய வர லாற்றை காயாசண்டிகை என்ற வித்தியாதர மங்கை யொருத்தி மணிமேகலைக்குக் கூறுகிறுள்.

1. ஆயிழை - மணிமே கலையே.

4. கைத்தூண் - தீய ஒழுக் கத்தால் வந்த உணவு.

5. வட்டு - உருண்டைகளை உருட்டி ஆடும் ஓர் ஆட்டம்.

6. கிளை - பகுதிகள்.

8. காணம் இலி - பொன் இல்லாதவன். கையுதிர்க்கோடலும்-அகற்றிவிடவும்; போகும்படி கையசைத்துக் குறிப்பித்தல்.

10. தங்கா வேட்கை - பல விடங்களுக்குச் செல்லவேண்டும் என்ற விருப்பம்.

13. நக்க சாரணர் - உடையில்லாத நாகர்கள்.

24. முடலை - முறுக்குண்ட.

31-2. தீ, தாமரைக்கும் இலக்குமி ஆதிரைக்கும்உவமை.

46. கடிது ஈங்கு உறுக என.

47. முட்டாள் - வழுவாதவளாய்.

2. கம்ப ராமாயணம்

முதற் போரின் பின் இராவணன் நிலை

1. ஆற்றல் நல் நெடும் கவிஞர். அங்கதம் - வசைமொழி.

2. ஒன்ற வந்தன-பொருந்தியவைகளான.

3. சமம் - போர். மறம் - வலிமை; பாவமும்ஆம்; 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்றார் முன்னும். வலித்தி - உறுதியாகக் கொள்.

4. ஆற்றுதி ஆயின் - சமாளிப்பாய் ஆனால். திடைத்தி - திரும்பி வருக. ஒளித்தியால்; ஆல்: அசை.

5. உன்னைத் தேவர் வரிசையில் வைத்து. தம்பி - விபீடணன். பேர் இறையில் - பெரிய சக்கரவர்த்தி பதவியில். உன் தலையை வாளியில் (அம்புகளில்) தடிந்து தரையில் வீழ்த்தேன்.

6. என்னை 'நில்ஐயா' என்று கூறி. பொன்றுதி - அழிவாய். நயவேல் - விரும்பாதே.

7. 'ஆளையா' இத்தொடருக்குப் பலர் பலவிதமாகப் பொருள் கொள்வர்: ஆள் ஐயா - சகல புவனங்களையும் ஆளும் ஐயனே; ஆளை யா - நீ ஒரு ஆளா? ஐ: சாரியை. பூளை-ஒரு பூ. நாகு இளம். ஒரு பொருட் பன்மொழி.

8. வாரணம் - எட்டுத்திசை யானைகள். வரை - கயிலைமலை.

9. மாதிரம் - திசைகள். காதலர் - புதல்வர்.

10. தந்திரம் - சேனை. சிந்துரக்களிறு - ஒருவகையானை; பகைவரைச் சிந்துகின்ற உரம் பொருந்திய ஆண்யானையுமாம். பருமைக்கும் நிறத்துக்கும் யானை உவமை; கோயில் - அரண்மனை.

11. வானையும் மண்ணையும் எள்ளி நகைக்கும் வயிரம் போன்ற தோளானுகிய இராவணன். வான், மண்: ஆகுபெயர்கள். சாம்புகின்ருன் - மனமழிகின்ருன்.

12. மாலியவான் இராவணனுடைய தாய் வழிப்பாட்டன்; சிறுவயதில் அட்டகாசம் செய்து திருமாலால் ஒடுக்கப்பெற்று நல்லபுத்தி வரப்பெற்றவன். வில் அன்ன - வில்லைப்போல் கூனிப்போன. மாடு - பக்கத்தில்.

13. பெற்றி - தன்மை.

14. கவை உறு நெஞ்சன் - இரண்டுபட்ட மனத்தையுடையவன். காந்தி - கொளுத்தி. சிவை - உலைத்துருத்தி. நகை அறு - குற்றம் அற்ற.

15. சங்கம் - ஒருபேரெண். கொற்றத் தாபதர் - வெற்றி பொருந்திய தபசிகள்; என்றது தவக்கோலத்திலுள்ள இராம இலக்குவரை. கங்கம் - பருந்து.

16. கிடைத்த வேனும் - எனக்குத் துணையாகக் கிட்டிய போதும். நம்ப - ஆண்களிற் சிறந்தவனே.

17. முன்னின் - நினைத்தால்.

18. அவற்றின் - அந்த அம்புகளின்.

19. தெரிகிலது; தெரியாமைக்குக் காரணம் விரைவின் மிகுதியே.

20. நாமச்சொல் - அச்சந் தரும் சொல்; சாபம். தொடை - செய்யுள் தொடை. இசை - ராகம். பல் அலங்காரம் - பல அணிகள். காகுத்தன் - ககுத்த வமிசத்திலுதித்த ராமன்.

21. மூரி - வலிமை பொருந்திய. தனு - வில்.

22. அயன் - பிரமன். அரி - திருமால்; சக்கரமுமாம். கற்பம் - உலக முடிவில். சிற்பம் - சிற்ப இலக்கணத்தில். தற்பம் - அகந்தை.

23. கலுழன் - கருடன்.

24. வாசவன் - இந்திரன். இளிவரும் இவரால் - இகழ்ச்சி மிக்க (மேற்கூறிய) இவர்களால். பூசல் - பேரொலி.

3. வில்லி பாரதம்

வில்லிபுத்தூரர் என்ற புலவர் சிகாமணி எழுதிய பாரதநூல் வில்லிபாரதம் எனப்பெறும். சங்க காலத்தில் தமிழில் ஒரு பாரதநூல் பெருந்தேவனர் என்பவரால் இயற்றப்பட்டது. அஃது இப்பொழுது இல்லை. பிறகு கி. பி. எட்டாம் நூற்ருண்டில் மற்ருெரு பெருந்தேவனர் ஒரு பாரதத்தை எழுதினர். அதில் உத்தேசமாக எண்ணூறு செய்யுட்களடங்கிய ஒரு

சில பருவங்களே இப்பொழுது இருக்கின்றன. அதற்குப்பின் தோன்றியது வில்லிபாரதமாகும். அது "பாண்டவர் போரின் முடிவில் முடிசூட்டிக் கொண்டு இனிது வாழ்ந்தனர்" என்றவரையில் கதையை விருத்தச் செய்யுட்களாற் கூறுவதாகும். கதையின் எஞ்சிய பாகத்தை அரங்கநாதகவி என்பவர் பாடி முடித்துள்ளார். வில்லிபாரதம் மிகச் சுருக்கமாக இருப்பதால் நல்லாப்பிள்ளை என்பவர் வில்லிபாரதச் செய்யுட்களைச் சேர்த்துக்கொண்டு கதையைப் பெருக்கி இடையிடையே பல செய்யுட்களைச் சேர்த்து ஒரு பாரத நூலை இயற்றினர். அது நல்லாப்பிள்ளை பாரதம் என்று வழங்கும். வில்லி பாரதத்தைப் போல் சிறப்புடைய தமிழ்ப் பாரத நூல் வேறொன்றில்லை எனல் வேண்டும்.

வில்லிபுத்தூரர் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் திருமுனைப் பாடி நாட்டிலே சனியூரில் அந்தணர் வருணத்தில் வீரராகவன் என்பவருக்குக் குமாரராக அவதரித்தவர். அரசர்களால் மதிக்கப் பெற்ற புலமை வாய்ந்து பல விருதுகளைப் பெற்றுள்ளவர். வடமொழியில் சிறந்த புலமை வாய்ந்தவரென்பது இவர் நூலால் விளங்கும். இந்நூலுக்கு முதல் நூல்கள் வடமொழியில் அகத்திய பட்டர் என்பவர் இயற்றியுள்ள பாலபாரதமும் எட்டாம் நூற்றாண்டிலிருந்த பெருந்தேவனாரியற்றிய பாரதமும் ஆகும். வில்லிபுத்தூரர் சிறந்த வைணவரேயாயினும் தம் நூலுள் சிவபெருமானைத் தக்கபடி உயர்த்திக் கூறிப் புகழ்ந்துள்ளார். ஸ்ரீ அருணகிரிநாதர் இவர் காலத்தவராவர். கொங்கர்குலவரபதி யாட்கொண்டான் என்ற சிற்றரசன் வில்லிபுத்தூரரை ஆதரித்தவன். அவனை இவர் பாரதத்துள் பலபடி பாராட்டியுள்ளார்.

இங்கே பாடமாக வந்துள்ள சூது போர்ச் சூழ்ச்சி என்பது இரண்டாவது பருவமாகிய சபா பருவத்தில் சூது போர்ச் சருக்கத்தில் கூறப்படும் செய்தியாகும். பாண்டவர்கள் செய்த இராஜ சூய யாகத்தைக் கண்டு வந்ததன்மேல் அவர்கள் மேல் அழுக்காறு கொண்ட துரியோதனன், துச்சாதனன், சகுனி, கர்ணன் என்ற இந்த நால்வரும் பாண்டவரை எவ்வாறாயினும் வெல்ல வேண்டுமென்று யோசித்து அப்படி வெல்வதற்குச் சூது போரே சிறந்ததென்று தீர்மானித்தனர். இதுவே இப்பகுதியின் சுருக்கமாகும். துஷ்டர்களாகிய இந்த நால்வரின் கூட்டமும் துஷ்ட சதுஷ்டயம் என்று வழங்கப் படும்.

1. கங்குல் - இரவு.

2. கிறம் - மார்பு. புறம் சுவர்க்கோலம் - செய்வான் -

கர்ணன். சுவர் பலபடி சிதைந் திருப்பினும் அச் சிதைவுகள் தோன்றாதபடி மேல் பூச்சால் அழகு செய்திருப்பது போல், துஷ்ட சதுஷ்டயத்தில் ஒருவனாகத் தீங்கை நினைப்பவனாயிருந்தும் ஆடம்பரமாக அறம் செய்கின்றவன் என்றபடி.

3. பரிவு கூர - துன்பம் மிக; துரியோதனனுக்கு இன்பம் மிகும்படி; பரிவு - இன்பம், துன்பம்.

4. விதரண விநோதன் - ஈகையை விநோதப் பொழுது போக்காக வுடையவன்; கர்ணன். வசை - நிந்தனை. இசை - புகழ்.

5. சொல் இடை நஞ்சு கக்கும் - ஒவ்வொரு சொல்லிலும் விடத்தை உமிழும் வில்லிசை - நீட்டலளவையில் ஒன்று. அல்லிடை - இரவில். எல் - பகல்.

6. தந்தை - திருதராஷ்டிரன். தாதை - வீடுமர். கமை - பொறுமை; க்ஷமா என்பதன் திரிபு. கார்முகம் - வில். இமையவன் - தேவன்; அந்தணரும் குருவும் ஆதல் பற்றி இமையவன் என்றார்.

8. துனை - வேகம். நனிவர - நன்றாக. வயிர்த்தபோது - சேகேறிய சமயம். நவியம் - கோடரி. பின்னிரண்டடிகள், "இளைதாக முள்மரம் கொல்க களையுநர், கைகொல்லும் காழ்த்த விடத்து" என்ற குறளைத் தழுவியது.

9. போது - பொழுது. புரவலன் - அரசனாகிய தருமன். பேது உற - (அத்தருமன்) தடுமாற்றம் அல்லது உன்மத்தம் அடைய.

10. எழுவது - போர்க்கு எழுவது. கோமான் - துரியோதனன். நென்னல் - நேற்று. கன்னல் இன்மொழியாள் - கரும்பு போன்ற இனிய சொற்களையுடைய திரௌபதி. மூரல் - சிரிப்பு.

11. கொத்தும் அனையும் மீன் சாதிகள். உகளும் - குதிக்கும். முத்தன் - கண்ணன்.

12. நந்தகோ மகன் - கிருஷ்ணன். கோவெள்ளம் - அரசர் கூட்டம். நந்தகோ - சிசுபாலன். சமரம் - போர்.

13. சிகிரி - மலை.

14. பரிதி - சூரியன். யதுகுலமன்னன் - கண்ணன். சல்லியம் - அம்பு. சாலுவன் என்பதற்குப் பதிலாகச் 'சல்லியன்' என்பதும் பாடம். வல்லியம் - புலி.

15. பொரு துணை - சண்டை செய்யும் துணை. ஆம் தகவு.

16. வாசி - குதிரைகள். நாற்படைகளும் கூறப்பட்டன. கஞ்சன் - கம்சன். பேய் - பூதகி.

18. தாவு - குதிரை நடை. கோவரு முன்றில் - அரசர் சூழ்ந்துள்ள முன்வாசல்.

19. வை - கூர்மை. இகல் - வலிமை பணை - பருத்த. வென் - வெற்றி. உத்தரம் - பதில்.

20. துப்பு - பவளம். உறழ்: உவமஉருபு. வீரர் என்றது இகழ்ச்சிக்குறிப்பு.

21. சதிப்பது - வஞ்சிப்பது.

23. பா மரு மனுவல்மாலை- செய்யுட்களாலான நூல் மாலை. காமரு - அழகிய.

24. பொற்பு - அழகு. பன்னு - சொல்லுகின்ற.

25. புண்டரம் - நெற்றிக் குறி.

26. ஐ என-அழகு என்று. மதி - புத்தி. செகுத்திடுவல் - அழித்திடுவேன்.

4. நைடதம்

'புலவர்க்கு ஔடதம்' என்று பாராட்டப்பெறும் இந் நைடதத்தை எழுதினவர் அதி வீரராம பாண்டியர் என்பவராவார். இதற்கு முதல் நூல் வட மொழியிலுள்ள அர்ஷதேவர் எழுதிய நைடதமாகும். இந் நூல் கற்பனைக் களஞ்சியம். திருமணப்படலம் வரையில் சரித்திரத்தை வித்தாரமாகக் கூறிவந்த புலவர், அதற்குப்பின் மிகச் சுருக்கமாக மற்ற பாகங்களைப் பாடி முடித்துவிட்டார். இதைக் குறித்துப் பல கதைகள் வழங்குகின்றன. நைடதத்தின் சுவையெல்லாம் திருமணப் படலம் வரையில் தான் என்பது பல பெரியாரின் கொள்கை.

1. பொன்னகர் - அமராவதி. முந்நீர் - கடல். பேழ்வாய் - பிளவுபட்ட வாய். மறலி - எமன்.

2. கொடிஞ்சி — தாமரை மொட்டின் வடிவமாகத் தேரில் அமைத்திருக்கும் உறுப்பு. பால் திரை. பண் அமை கலினப் பாய்மா - அலங்கரிக்கப்பட்ட வேகமிக்க குதிரை. துப்பின் - வலிமையை உடைய. நால் வகைப் படைகளும் நால் திசைப் பரப்பும் போர்ப்ப வந்தான் என்க.

3. விரை - வாசனை. அலங்கலாகிய மாலை. உரகவேந்தர் - நாகலோகத் தரசர்.

4. தெரியல் - மாலை. குவவு - திரட்சி. செவ்வி - அழகு. குரை - ஒலிக்கும்.

5. கடி - நறுமணம். பகழி - அம்பு. அடல்கெழு - வலிமை பொருந்திய. தாம் தேவர்கள் என்ற இறுமாப்பை அமரர் கொண்டனர் என்க.

6. கொங்கு — வாசனை, தேன். அருவம் — உருவமற்ற நிலை. திங்கள் அம்கண்ணி முக்கண் தேவு - பல சந்திரர்களை ஆரமாகத் தொடுத்துத் தலையில் அணிந்த சிவபெருமான்.

7. தையல்: விளி. அலம்- ஜலம். புலவரின் தமிழ்ப்பற்று இச்செய்யுளால் புலனுகிறது.

8. மாழை - அழகு. தாழை - தென்னை. முப்புடைக்காய் - மூன்று பக்கங்களை உடைய தேங்காய். புலியின் அடியைப் போன்ற காய்களை உடைய. அரம்பை - வாழை.

10. வலன் உடை - வலன் என்ற அசுரன் உடைந்து போகும்படிச் செய்த; (பலத்தைஉடைய). கற்பகம் மலிந்த தோளான் - கற்பக மலர்கள் நிறைந்த தோள்களை உடையவன்; (கல் பக மலிந்த - மலை பிளந்து போம்படி உயர்ந்த). பகைவரை - பகையையுடைய மலைகளை; முன்னொரு காலத்தில் மலைகளுக்குச் சிறகுகள் இருந்தனவென்றும், அவற்றின் உதவியால் அவை உயிர்களுக்கு இடுக்கண் செய்து வந்தனவென்றும் அதனுல் அவற்றின் சிறைகளை இந்திரன் அறுத்தெறிந்தான் என்றும் நூல்கள் கூறும்; (விரோதிகளை). பிறைக் குறிகளில் உள்ள பொருள் நளனைக் குறிக்கும். மேற்கவிகளிலும் இப்படியே.

11. நாமவேல்-அச்சத்தைத் தரும் வேல். வெகுளி உள்ளத்து ஒருவினுன் - சினத்தை உள்ளத்தைவிட்டு நீக்கியவன். சீக்கும் - சினக்கும். நளனுக்குக் கூறுகையில் சீக்கும் தொழில் வாளுக்கு ஏற்றுக. புலவர் - தேவர்; (கல்வியிற் சிறந்த புலவர்கள்). தாலம் ஏழுடையகோ - ஏழு நாவுகளை உடைய அக்னி பகவான்; (சப்த தீவங்களை உடைய நளன்).

12. வஞ்சி - ஒருகொடி. தருமன் - எமன் (தருமத்தைச் செய்பவன்). செஞ்ச - நிறைய. ஒகை போய - உவகை இல்லாத; (உவகை பரவியுள்ள).

13. கோல் தொடி - அழகிய வளையல். புவனம் - நீர்; (பூமி). நேமி - கடல்; (சக்கரம்).

14. போது - தாமரை. அரி- சிவந்தகோடுகள். வேனிலான்- மன்மதன். கூட்டுணும் - கொள்ளை கொள்ளும். 'நிடத வேந்தே' என்று சிலேடைப் பொருளின்றிக் கூறினுள், நளன் இவனே என்று உணர்த்த.

15. வள்ளல் - நளன்; 21 வள்ளல்களில் நளனும் ஒருவன் என்பர். பைம்பூண்: அன்மொழித்தொகை; தமயந்தி. தேவர்களின் மாலையில் வண்டுகள் மொய்க்க மாட்டா.

16. அரி – சிலம்பின் உள்ளீடு. கொல் நுனைவயிர ஒள்வாள் - கொல்லும் தன்மை வாய்ந்த கூரிய வயிரத்தால் இயன்ற பிரகாசமான வாள்.

5. அரிச்சந்திர புராணம்

தமிழிலே புலமைபெற விரும்புவோர் முதன் முதல் படிக்க வேண்டிய நூல்களுள் அரிச்சந்திர புராணமும் ஒன்று. இதன்

நடை மிகவும் எளியது. இதனை இயற்றிய நல்லூர் வீரகவிராயர் சிவபக்தராவர். நினைத்தமாத்திரத்தில் கவிபாடும் திறமை வாய்ந்தவராதல் பற்றி ஆசுகவி என்றும் அழைக்கப்பெறுவர்.

அரிச்சந்திரன் வேட்டையின் பொருட்டு, காட்டிற்கு வந்து வேட்டை முடிந்தவுடன் ஒரு பொய்கைக் கரையில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறான். இப்பகுதியில் வரும் கதை நிகழ்ச்சி அந்த விடத்தில் நடை பெறுகிறது.

1. பெடை-பெண் அன்னம். 4ஆம் கவியிலும் இவ்வாறே கூறுவர். கரிய நிறமுடைய மாதர்க்கு நீலக்கொடி உவமையாயிற்று. கௌசிகரின் கோபத்தீக்கு முன் ஒருவரும் நிற்றல் இயலாததாக இருக்க, இம்மாதர் நிற்றமைக்கு 'ஆழிநீச்சினில் நிலைத்து நிற்கும் கொடி' உவமை யாயிற்று.

3. இருநாலெட்டு-அறுபத்து நான்கு. கின்னரம்-வீணை வகைகளில் ஒன்று. போதம்-அறிவு.

5. யாண - அழகுடையவனே. வேதா-பிரமன். "இந்திரனுக்கு (காண்பதற்கு)ப் பல கண்களும், வாணசுரனுக்கு (தொழுவதற்)குப் பல கைகளும், அனந்தனாகிய ஆதிசேடனுக்கு (வாழ்த்துவதற்கு)ப் பல நாவுகளும் இருப்பது போல் எமக்குப் படைத்திலன் அந்தப் பிரமன்; அதனால் அவன் வீணன்" என்றபடி. நிரல் நிறையணி.

6. வேலை - கடல். மஞ்சன நீர்ச்சாலை - குளிக்கும் இடம். செய்யவள் - சிவந்தநிறமுடைய இலக்குமி. பாரி - மனைவி. கவிகை - குடை. உருவகவணி.

7. மாற்றம் - சொல். கேளா - கேட்டு. வல்லியீர் - கொடி போன்றவர்களே. அல்லி அம் தொடையல் - அக இதழ்களை உடைய அழகிய மாலை.

8. முனிவன் - கோசிகர். அருத்தி - ஆசை. நெறி - ஒழுக்கம். கிளத்தி - சொல்லி.

9. காவி - நீலோத்பலம்; குவளைமலர். கவிர் இதழ்-முள் முருங்கை போன்ற சிவந்த அதரங்கள். நுதல் - புருவம்.

10. மிடறு - சாரீரம்; ஆகுபெயர். புல்லிய-தழுவிய. மெல்லியல் - சந்திரமதி.

11. கடகம் - காப்பு. துகில் - ஆடை. கொண்ட: மகரக் குறுக்கம். படர்ந்தேம் - வந்தேம்.

12. தவளம் - வெண்மை.

13. பானு - சூரியன்.

14. தொடுத்து - வரிசைப் படச் சொல்லி. அமைச்சன் - சுமந்திரன்.

16. பப்பரர் - காவலாளிகள். நூக்குவான் - தள்ள; வான்; வினையெச்ச விகுதி. காத்திரம் - உடல்.

17. ஆறு கொண்டு - வழியைப் பற்றிக்கொண்டு. மாறு - புதர்களிலும் மரங்களிலுமுள்ள மாறுகள். மஞ்சு - மேகம். தூறு - புதர். வீறு - ஒருவருக்கும் இல்லாத பெருமை.

18. பைய - மெல்ல. ஏழிசை : சரிகமபதநி என்ற ஏழு சுரங்கள். அப்பரிசு - அந்த விதம்; அந்தப் பரிசிலே என்பாரும் உளர். கையன் - கீழ்மகன்.

19 கடம் - காடு.

6. திருவிளையாடற் புராணம்

மதுரையில் சோமசுந்தரக் கடவுள் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப்பற்றிக் கூறும் நூல் இதுவாகும். இத்திருவிளையாடற் செய்திகளைக் கூறும் தமிழ் நூல்கள் திருவாலவாயுடையார் திருவிளையாடல், கடம்பவன புராணம், சுந்தரபாண்டியம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் என்பனவாகும். இங்கே பாடமாகவந்துள்ளது பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணமாகும். புராணமென்பது பழைய வரலாறு. இந்நூற்கு முதல் நூல் வடமொழியிலுள்ள ஆலாஸ்ய மகாத்மியமென்பதாகும்.

பரஞ்சோதி முனிவர் வேளாள மரபைச் சேர்ந்தவர். சைவ நெறியில் முருகிய அன்பு வாய்ந்தவர். சக்தி உபாசகர் என்பர். இவர் இற்றைக்குச் சற்றேறக் குறைய 300 ஆண்டுகளுக்கு முன்னிருந்தவர். இவருடைய பாடல்கள் சொல்நயம் பொருள் நயங்களோடு பக்தி ரசம் பொருந்தியனவாக இருக்கின்றன.

இங்கே பாடமாக வந்துள்ள பகுதியாகிய திருமுகம் கொடுத்த படலம் பாணபத்திரர் என்ற அடியவர் பொருட்டுச் சிவ பெருமானுர் செய்த திருவிளையாட்டைக் குறிப்பதாகும். பாணபத்திரர் இசையறிவு வாய்ந்து பாண்டியன் சமஸ்தான சங்கீத வித்வானுக இருந்தார். அச்சமயம் ஏமநாதன் என்று ஒரு சங்கீத வித்வான் மதுரைக்கு வந்து தன்னை இசையில் வெல்பவர் உண்டோவென்று மன்னனைக் கேட்டான். அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் விறகு சுமக்கும் ஆளாகவந்து தாம் பாணபத்திரரின்மாணவர் என்றுகூறி இசையில் ஏமநாதனை மருட்டி ஓடிப்போகும்படிச் செய்தார். பாணபத்திரர் இதன்பின் சமஸ்தான வித்வானுக இராமல் எப்பொழுதும் சிவபெருமானைத் துதித்துக் கொண்டே இருந்து வருவாராயினர். அவரை வறுமை முடுகிற்று. அவ்வறுமையைப் போக்கச் சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடலைக் குறிப்பதுவே திருமுகம் கொடுத்த படலமாகும். திருமுகம் என்பது ஓலை

என்ற பொருளை உடையது. பாணபத்திரர்க்கு அவர் விரும்பும் பொருளை அளித்து அனுப்பும்படிச் சேரமான் பெருமாள் நாயனாருக்குச் சிவபெருமான் எழுதிய கடிதத்தின் விஷயமான படலம் என்பது இதன் விரிந்த பொருளாகும்.

[பாணர்கள் என்ற வசனப் பகுதியில் வந்துள்ள பாடத்துக்கும் இதற்கும் தொடர்புண்டு.]

1. மருமான் - வழித்தோன்றல். குனிமதி - வளைந்த சந்திரன்.

2. இலம்பாடு - வறுமை. பழனக் கூடல் — வயல் சூழ்ந்த மதுரை. பலவிதமான மாயஜால வித்தை முதலியனவும் பிரசித்திகளும் அமையப் பெற்றவர் என்ற கருத்துத் தோன்ற 'சித்த எம் அடிகள்' என்றார்; பாண்டியனுக்குரிய பொருளைப் பிறரறியா வண்ணம் களவாடிப் பாண பத்திரர்க்குக் கொடுக்கும் திறத்தினால் இவ்வாறு கூறினார். பத்தர் - யாழின் உறுப்புக்களில் ஒன்று.

3. பொலம் - பொன். அரிமான் சேக்கை - சிங்காதனம். ஆடகம் - பொன், வருக்கம் - கூட்டம்; ராசி.

5. வைகலும் - நாள்தோறும். கலி - வறுமையால் வரும் துன்பம். ஒக்கலும் - சுற்றத்தாரும். ஒக்க - தம்மைப் போலவே. கையறவு - துன்பம். நோனுது - ஆற்ருமல்.

6. நிம்பத் தொத்தவன் - வேப்பமாலையணிந்த பாண்டியன். கோசம் - கருவூலமாகிய பொக்கிஷ அறை. தும்பி உண் கனி - யானை நோய்; விளாம் பழத்துக்கு வரும் நோய். பழம், மேற்புறம் நன்ருகத் தோன்ற உள்ளீடு அழிந்து படுதல் இந்நோயின் இயல்பு; பொக்கிஷ அறை பூட்டி முத்திரையிடப்பட் டிருந்தும் உள்ளேயிருந்த பொருள்களைக் கவர்ந்து கொடுத்ததால் இந்த உவமையைக் கூறினார். யானை உண்ட விளங்கனி என்பதும் இதனையே குறிக்கும். சங்கை - சந்தேகம்.

7. கயல் இலச்சினை - மீன் முத்திரை; பாண்டியரின் அடையாளம்.

8. உறுதண்டம் ஆம் - மிக்க தண்டனை ஆகும். போந்தின் கண்ணி - பனந் தோட்டுமாலை. முடங்கல் - ஓலை; (கடிதம்.)

9. மறைக்கு உரைசெய்தமை வேதத்துக்குப் பொருள் அருளிச்செய்த படலத்தால் விளங்கும். 'மதிமலிபுரிசை' என்ற தொடக்கத்துச் செய்யுள் பதினோராந் திருமுறையில் சேர்க்கப் பெற்றுளது; அதன் பொருள் பின் 21 ஆம் செய்யுளில் விரிக்கப்படுதலைக் காண்க.

10. ஒல் என - விரைவாக. மேல்வரைப் புலம் - மேற்கே உள்ள மலைநாட்டின் பக்கம்.

11. கொல்லை - முல்லைநிலம் - காடும் காட்டைச் சார்ந்த இடமும். கல்அதர் அத்தமும் - கல் வழியை உடைய பாலைநிலமும். முட்புறப் பல்சுளைக்கனி-பலாக் கனி. பைய + பைய = பைப் பைய - மெல்ல மெல்ல: விகாரம்.

12. அறமகள் ஆக்கம் - ஞானச் செல்வம். மறமகள் ஆக்கம் - வெற்றிச் செல்வம்.

13. மண்-உலகத்தார். மறுகு - தெரு. மாடு - பக்கம். நுதல் - நெற்றி.

15. ஒற்றை வெண்குடையினுன் என்றது ஏகசக்கராதிபதி என்றதைக் காட்டும்.

16. கங்குல் - இரவு. பெண்ணையம் தொங்கலான் - பனை மாலையையுடையவன். தமர் என்றது தம்மவர்களாகிய அமைச்சரை. சேல்கணுள் - மீனுட்சி. கொல்: அசை.

17. துரீஇ = துருவி - தேடி; சொல்லிசை யளபெடை. தில்: இடைச்சொல்; விரைந்து தேடி வருக என்றபடி. தெற்றி - திண்ணை. நியமம் - கடைவீதி; கோயிலுமாம். மன்று - பலர் கூடும் இடம். எல் திகழ்மணி; எல் - ஒளி.

18. தந்திரி - வீணை. வல்லை - விரைவில். எழீஇ - எழுந்து.

19. முகிழ்த்த - குவித்த. தண்டு - தடி; தண்டென வீழ்தல் - சாஷ்டாங்கமாக வணங்கல். தன்மை நவிற்சியணி.

20. தாமம் - மாலை. தலையில் ஓலையை வைத்துக் கொண்ட போது அதனை மாலைபோல் கருதி மகிழ்ந்தான் என்க. இச் செய்யுளும் தன்மை நவிற்சியணி.

21. திருமுகம் முன்னிலைப் படுத்தி எழுதப் பெற்றதன்று. தன்மாடே - சேரரிடம்; என்றது உன்னிடம் என்றபடி. தென்னர் பிரான் - சோமசுந்தரக் கடவுள்.

22. தளிகை - ஆசனம். புழைக்கை மதமான் தலை-யானை மீது. கொளை - இசை. தென் - ஓர் இசைப்பண். அளி - வண்டுகளின்.

23. பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு. சிறுமை + அடி = சீறடி. குடுமி - சிகரம்; கோபுரம். அஞ்சு - ஐந்துநிறங்கள்; ஆகுபெயர்.

24. முகவாசம் - தூபம். வெள்ளிலை - வெற்றிலை. பழுக்காய்-பாக்கு. உய்த்தும்-அனுப்பித்தருவோம்.

25. இனைய - இத்தகைய. நல்கிற்று - கொடுத்தது.

26. இன்னல் - துன்பம் சிவிகை - பல்லக்கு. பரிமான் - குதிரை. தன்னது - சிறுமையது.

27. ஏழடி பின்சென்று பெரியோரை வழியனுப்பல் முறை:

ஏழடிக்கு மேலும் சென்று வழி யனுப்பினர் என்பது பொருள். சேண் - தொலைவு. தன்நேர் - தனக்குத் தானே ஒப்பாகிய. மின்நேர் - மின்னலை ஒத்த. பொன்ஏர் - பொன்னை யியன்ற அழகிய. மௌலி - கிரீடம். நிதிக்கிழவன் - குபேரன்.

28. இந்து மருமான் - பாண்டியன்; இந்து - சந்திரன்.

---

௪. இனிய பகுதிகள்

பல நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பல சுவைப்பட்ட இனிய பகுதிகள் இத்தலைப்பின்கீழ் தரப் பெற்றுள்ளன. அவ்வந்நூல்களின் பெயர் செய்யுட்களினடியில் தரப்பட்டுள்ளன.

1. கார்கால வருணனை

ஆவணியும் புரட்டாசியும் கார்காலம்; கார்காலம்-மழைக் காலம்.

1. நளிர் - குளிர். இல்: ஐந்தனுருபு ஒப்புப் பொருளன. வானத்தின் இருட்சிக்குப் பல பொருள்கள் உவமையாகக் காட்டப் பெற்றமைபால் பல பொருளுவமை யணி.

2. மின்னலைக் கூத்தியராகவும் வானத்தைக் கூத்துமேடையாகவும் உருவகித்து இதற்கேற்ப மற்றவற்றையும் உருவகமாக்கினர். உருவக வணி. கொடிநுடங்கு - கொடிபோல் அசைகின்ற அரங்கம்-மேடை. இடிமுழா - இடியாகிய மத்தளம். படுகடல் - பலபொருள்கள் தோன்றுவதற்குக் காரணமாகிய கடல். புயல் எழினி - மேகமாகிய திரைச்சீலை (Scene) மௌவல் - மல்லிகை வகையுள் ஒன்று. முறுவல்பூத்த - புன்னகையரும்பின. மின்னுதலும், இடி இடித்தலும், மேகங்கள் நிறைந்திருத்தலும் மௌவல் மலர்தலும் கார்காலத்தின் இயல்புகள்.

2. தமயந்தி கானகத்திற் புலம்பல்

1. ஆர்உயிர் கான்று ஒழுக - அரிய உயிர் கொப்புளிக்கப்பட்டுப் போகும் நிலையிலிருக்க. கவுள் - கன்னம். கணை - அம்பு. பிணை - பெண் மான். மான் - குதிரை.

2. நேர் அலார் - பகைவர். போர் ஏறு - போர் செய்யும் ஆண்சிங்கம். ஆரவரைமார்பா - ஆரத்தை யுடைய மலைபோன்ற மார்பனே; மாலையோடு உத்தம இலக்கணமாகிய மூன்று வரிகளை உடைய மார்பனே; "வரை அகல் மார்பிடை வரியும் மூன்றுள," சீவகசிந்தாமணி. அளியேன் - இரங்கத்தக்க என். தண்அளி-குளிர்ந்த கருணை.

3. கஞ்ச மலர் - தாமரை. பனிப்ப-நடுங்க. வெற்பு எறிந்த வச்சிரத்தோன் - மலைகளின்

சிறகுகளை வெட்டின வச்சிரா யுதத்தை யுடைய இந்திரன். விஞ்சை - வித்தை; என்றது யாவர்க்கும் புலப்படாமல் உடலை மறைத்து நிற்கும் வித் தையை; நளன் கன்னிமாடத் திருந்த தமயந்தியின்பால் தூது செல்வதற்காக இந்திரன் அந் நளனுக்குக் கற்பித்தது இது.

4. வேலை - கடல். வேனுக்கு மாலையிடும் வழக்கை எண்ணி 'மாலைக் கதிர் வடிவேல்' என் றார்; மாலையை நளனுக்கு அடையாக்கலும் ஆம்.

5 வாவும் - தாவும். பிடி - பெண் யானை.

3. ஒரு தூதியின் அரும் இயல்புகள்

திருக்கினும் - அழிப்பினும். கறுத்து - வெகுண்டு. காட் டாது - அங்ஙனம் செய்யாமல். திரிந்து - தன் இயல்பு மாறி. பிறிது உரையாள் - உள்ளதை உள்ளபடியே சொல்வாள் என்றபடி. முன்னியது - நினைத் ததை. ஒன்னார் - பகைவர். ஒரீஇ - விலக்கி. கெழிஇ - பொ ருந்தி; இரண்டும் அளபெடை கள்.

4. அரசனுக்குப் புலவர் கூறிய புத்திமதி

நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி என்று சோழகுலத்து மன்னர் இருவர் ஒரே காலத்தில் முறை யே உறையூரையும் புகார் என்ற காவிரிப்பூம் பட்டினத்தையும் ஆண்டு வந்தனர். இவ்விரு வரும் உறவின் முறையினர். ஒருகால் இவர்கள் தம்முள் மாறுபட்டுப் பகைக்கலாயினர். நலங்கிள்ளி உறையூரை முற்று கையிட்டான். அச்சமயம் கோ வூர் கிழார் என்ற புலவர் இரு வருக்கும் நடுவே வந்து இச் செய்யுளைப் பாடிச் சமாதானப் படுத்த முயன்றனர்.

1. சேரன் அல்லன் என்ற படி.

2. கருஞ்சினைவேம்பு - கரிய கோட்டினையுடைய வேம்பு.

3. ஆர் மிடைந்தன்று - ஆத் தியால் நெருக்கமாகக் கட்டப் பட்டது.

6. வேறல் - வெல்லுதல்.

7. குடிப்பொருள் அன்று - குடிக்குத் தக்கது அன்று.

9. மெய்ம் மலி உவகை - உடம்பு பூரிக்கும் மகிழ்ச்சியை.

5. சிவபிரான் பிச்சை ஏற்றல் தகாதென்றல்

மாணிக்க மலை - இரத்தின கிரி. சோற்றுத்துறை, பால் துறை, நெய்த்தானம் - இவை சிவ ஸ்தலங்களின் பெயர்கள். சோறு, பால், நெய் இருக்கும் இடங்கள் என்பது மறு பொருள்.

உறை இல் - வசிக்கும் வீடு. கரச்சிலை - கரத்தில் உள்ள வில்.

நெடுமால் - திருமால். பால் உறைவாள் - பங்கில் வசிப்பவள். கறை - களங்கம். நிதிக்கோன் - குபேரன்.

வணிகர் — பன்னிரண்டாஞ் செட்டிமார்கள்; வணிகர் சிலர் தம்முள் 11 பங்கு போட்டுக்கொள்ள முயன்ற போது ஒரு பங்கு அதிகமானமைகண்டு 12-ஆம் செட்டியாராகக் கருதி அதனைச் சிவபெருமானுக்குக் கொடுத்துவிட்டனர் என்பது இரத்தினகிரி ஸ்தல புராண வரலாறுகும்.

முறை இல் - தகுதி அற்ற.

முடித் தழும்பீர் - தலையிலே தழும்புடைய சிவபெருமானே; வடநாட்டு மன்னன் ஒருவன் அறியாது கத்தியால்புடைத்து, இத்தலத்துச் சிவலிங்கத்தைத் தழும்புடைய தாக்கினன் என்பது ஸ்தல வரலாறு.

6. அகத்தியர் பெருமை

இச்செய்யுளில் அடங்கியுள்ள கதைகள் பின்வருவன:

(1) அகத்தியர் வியாசருடன் மாறுபட்டுத் தெற்கேவந்து வடமொழிக்கு நிகராகத் தமிழை ஏற்படுத்தினமை, (2) வாதாபி வில்வலனை அடக்கினமை, (3) விந்தியமலையை அடக்கினமை, (4) கடலைக் குடித்தமை, (5) பூமியின் தென்பாகம் உயர்ந்து வடபாகம் தாழ, அவற்றைச் சமம் செய்ய அகத்தியர் தெற்கே வந்தமை, (6) நகுஷனைப் பாம்பாகும்படி அவர் சபித்தமை.

நிசிசரர் - இரவில் சஞ்சரிப்போர்; அரக்கர். இரிய - பயந்தோட. முனிதும் - கோபிக்கப்படுவோம். புணரிகள் - கடல்கள். மகிதலம் - பூமி. சுரபதி - இந்திரன்.

தக்கயாகப் பரணியை இயற்றிய ஒட்டக்கூத்தர் மிகச் சிறந்த புலவர்களில் ஒருவர். இவரைக் குறித்துத் தமிழ்நாட்டில் தவறுதலாகப் பல கதைகள் பிற்காலத்தவர்களால் புனைந்து கூறப்பெற்று வழங்கி வருகின்றன. தனிப்பாடல்கள் என்ற தலைப்பில் 3-ஆம் செய்யுளாலும் இவரது பெருமையும் திறமையும் புலனாகும்.

தக்கயாகப்பரணியைச் சிறந்த ஆராய்ச்சியுடன் அச்சிட்டு உதவியவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஆவார்கள்.

7. பெண்ணின் வீரம்

கல் நின்றான் - இறந்து கல்லாக நின்றான்; போரில் வீரங்காட்டி இறந்தவர்களுக்குக் கல் நட்டு மரியாதை செய்வது அக்கால மரபு. 150-ஆம் பக்கம் பார்க்க. மொய் - வலிமை. என்னையர் - என் அண்ணன்மார். கைபோய் கணை உதைப்ப - கை கணைகளைச் செலுத்த. காவலன் - பகையரசன். எய் - எய்ப்பன்றி

என்ற ஒரு மிருகம்; இது வீரத்துக்கு உவமை. ஏறு என்றது தன் மகனை.

8. புதுமணப் பெண்ணின் சமையல்

முளி தயிர் - முற்றிய தயிர். காந்தள் - ஒரு மலர்; இது விரலுக்கு உவமை. கழூஉறுகலிங்கம் - துடைத்துக்கொண்ட புடைவை. கழா அது - கழுவாமல். உடீஇ - உடுத்து. உண்கண் - மைதடவியகண். குய் - தாளிப்பு. துழந்து - துழாவி. பாகர் - குழம்பு.

புதிதாக இல்லறம் நடத்தும் பெண்ணைக் கண்டுவந்த செவிலி நற்றாயினிடத்தில் அந்தப் புதுத் தம்பதிகள் தம்முள் கொண்டுள்ள அன்பைப் புலப்படுத்தியது இது.

ரு. தனிப்பாடல்கள்

எந்த நூலையும் சேராமல், அப்பொழுது அப்பொழுது புலவர்களால் பாடப்பெற்ற தனிக் கவிகள் தனிப்பாடல் எனப்படும். இவற்றுள் ஒவ்வொன்றும் நன்கு தேர்ந்து பாடப் பெற்றமையின் இவை மிகச் சுவையுடையனவாகும். தனிப்பாடல் திரட்டு என்ற நூலை நம்மவர்கள் பரம்பரையாகப் படித்து இன்புற்று வருவதுண்டு. இக்கவிகளில் பலவற்றிற்குப் பொருள் கண்டறிவது எளிதன்று. இங்கே பாடமாக வந்துள்ளவை சுலபமான கவிகளேயாகும்.

1. கருப் பொருள் - மிகுந்த செல்வம். அருணசலக் கவிராயர் இராம நாடகக் கீர்த்தனையைப் பாடி அரங்கேற்றிப் பெருமை பெற்றமைக்கு மணலி முத்துகிருஷ்ண பூபன் காரணமாக இருந்ததை எண்ணி 'இராம கதை எவர்க்கும் தந்தான்' என்றார்.

2. கெட்ட சாறு - ஊசிப் போன ரசம். தவிடு கஞ்சி - தவிட்டினல் காய்ச்சிய கஞ்சி. கிருமியுண்ட மா - பூச்சிபிடித்த மா. முறிந்த பாகு - காய்ச்சல் அதிகமானதனல் முறிந்து போன வெல்லப்பாகு. கொழியல் - கொழிந்துபோனது. புற்கை - கூழ். நுங்க - விழுங்க.

3. பைம்பொன் தாரகை - பசும்பொன் போன்ற நட்சத்திரங்கள். கடையாழி-கடைந்த பாற்கடலிலே உள்ள திருமால். மானபரணன்-மானத்தை ஆபரணமாக உடையவன். குருளை - சிங்கக்குட்டி; என்றது திருஞான சம்பந்த மூர்த்திகளை. பொதியக் கோமுனி - அகத்தியர். பதுமக்கொத்தர் - பிரமன். சடிலக் குந்தளர் - சிவபெருமான். கூழைத்தண் தமிழ் - குறைவுபட்ட என் தமிழுக்கு என்றபடி. காளம் - திருச்சின்னம்: பவனிவருங்கால் மரியாதையாக முன்னர் ஊதிச் செல்லும் கருவி. கூத்தர் காளக்கவி எனப் பெறுவர். சிறந்த புலவர்

களுக்குச் செய்யும் மரியாதை இது. வில்லிபுத்தூரார் ஒரு காளக்கவி.

5. வாலறிவு - சிறந்த அறிவு.

6. முப்பால் - திருக்குறள். குறுமுனி - அகத்தியர்.

7, அளி - வண்டுகள். தொடை - மாலே. அரசை - ஓர் ஊர். ஒளி - ஒருவர் உயிருடனிருக்கும்போது பெறும் புகழ்.

9. வாச்ச பணி - வாய்த்த வேலே; வாச்ச : போலி.

முற்றிற்று